www.tamilarangam.net

களத்தில்

திருவள்ளுவர் ஆண்டு 2027 மீனம் 20 (03.04. 1996) தாயகத்தின் உண்மை நிகழ்வுகளைத் தாங்கி வருஞ் செய்தித் தாள் அன்பளிப்பு: 60p

## கவிதை மூலை

வலிகாமம் வந்தவள்
வரப்போறாள் வடமராட்சி
பேயராய் நாமிருந்தால்
பேய்தானே அரசாட்சி

- சுடு கவி

# வெற்றிலைக்கேணியில் மாபெரும் கடற்சமர்

## ❖ 14 கடற்படையினர் பலி ❖3 படகுகள் மூழ்கடிப்பு

வற்றிலைக்கேணி, சுண்டிக்குளத்திற்கு எதிரே 15 கிலோமீற்றர் தொலைவு ஆழக்கடலில் வந்து கொண்டிருந்த சிறிலங்காக் கடற்படையினரின் கப்பற் தொடர் கடற்புலிகளால் தாக்கப்பட்டுள்ளது. இதில் ஒரு இசுரேலியத் தயாரிப்பான 'டோரா" பீரங்கிக் கப்பலுடன் இரு அதிவேகத் தாக்குதல்ப் படகுகள் தாக்கி மூழ்கடிக்கப்பட்டன.

30-03-96 அன்று நள்ளிரவு 12 மணியளவில் காங்கேசன்துறையிலிருந்து திருகோணமலை நோக்கிச் சென்று கொண்டிருந்த சிறிலங்காக் கடற்படையினரின் கப்பல் தொடராக 2 தரையிறங்குக் கலம், 4 டோரா பீரங்கிப் படகு, 2 அதிவேக தாக்குதற் படகுகள் வெற்றிலைக்கேணி, சுண்டிக்குளத்திற்கு எதிரே கடலில் 15 கிலோமீற்றர் தொலைவில் கடற்புலிகளின் நளாயினி கடற்படையணி, நரேஸ் மற்றும் சாள்ஸ் கடற் படையணிகளால் எதிர்கொள்ளப்பட்டு வழிமறித்துத் தாக்குதல் தொடுக்கப்பட்டது.

இக்கடற்சமர் சுமார் ஒரு மணித்தியாலங்களாக நீடித்தது. தாக்குதல் கடுமையானதாகப் போய்க் கொண்டிருக்கும் வேளையில் விமானப்படையின் உதவியை அவசர அவசரமாக சிறீலங்காக் கடற்படை அழைத்தது. சிறிலங்காக் கடற்படையினருடன் விமானப்படையினரும் சேர்ந்து கொண்டனர். இரு படைகளையும், எதிர்கொண்ட கடற்புலிகளும், விடுதலைப் புலிகளின் விமான எதிர்ப்பு படையணியும் சிறிலங்காப் படைகள் மீது கடுமையான தாக்குதலைத் தொடுத்தனர். விமான உதவியை சிறிலங்காக் கடற்படை பெற்றுக்கொண்டாலும் தம்மிடம் இருந்த ஒரு 'டோரா' பீரங்கிக் கப்பலையும், இன்னொரு பீரங்கிக் கப்பலையும், ஒரு அதிவேக தாக்குதல் படகையும் காப்பாற்ற முடியாமல் போய்விட்டது. இவைகள் கடற்கரும்புலிகளால் தாக்கி மூழ்கடிக்கப்பட்டுவிட்டன.

தொடர்ச்சி பக்கம்

# மட்டக்களப்பில் வழிமறித்துத் தாக்குதல்

## 41 இராணுவம் பலி

22-02-96 அன்று மட்டக்களப்பு மாவட்டம் கிண்ணியடி முகாம் மீது விடுதலைப் புலிகளால் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டபோது வீரச்சாவடைந்த 15 போராளிகளின் 31வது நினைவாக 23-03-96 அன்று பிற்பகல் 1.50 மணியளவில் முறக்கொட்டாஞ்சேனை இராணுவ முகாமில் இருந்து வந்தாறுமூலை நோக்கி ரோந்து சென்ற 100க்கும் மேற்பட்ட இராணுவத்தினருக்கும், எமது தரப்பினருக்கும் இடையில் மாவடி வேம்பு எனுமிடத்தில் திடீர்த் தாக்குதல் ஏற்பட்டது. விடுதலைப் புலிகள் வழி மறித்துத் தாக்கினர். இத்தாக்குதலானது 40 நிமிடம்வரை நடைபெற்றது. 40 நிமிடத்தில் 40க்கும் மேற்பட்ட இராணுவத்தினர் அவ்விடத்திலேயே கொல்லப்பட்டனர். ஏனையோர் காயங்களுடன் தப்பியோடிவிட்டனர். இதில் எமது தரப்பில் மேஜர் ரவன், லெப். இலக்கியன், 2ஆம் லெப். முரளி ஆகிய 3 போராளிகள் வீரச்சாவு அடைந்தனர். பெருமளவிலான ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டன. இது நடைபெற்று இரண்டாவது வாரமாகும் தற்போது இதில் படுகாயமடைந்த இராணுவத்தினரும் உயிரிழந்துள்ளனர். இதுவரைக்கும் இதில் இறந்தஇராணுவத்தினரின் தொகை 54 ஆக உயர்ந்துள்ளதாக அறியப் படுகின்றது.

இதேவேளை முறக்கொட்டாஞ்சேனை, கிரான் இராணுவ முகாம்கள் மீதும் விடுதலைப் புலிகளால் எறிகணைத் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டது. சேதவிபரம் அறியப்படவில்லை.

அதே நாளில் காலை 9.40 மணியளவில் மட்டக்களப்பு சின்ன வட்டுவான் பொலிஸ் நிலையத்தில் இருந்து மாவடி காவல் நிலையத்துக்கு வந்த பொலிஸ் மீது திடீர்த் தாக்குதல் ஒன்று மேற்கொள்ளப்பட்டு, இரண்டு பொலிசார் அவ்விடத்திலேயே கொல்லப்பட்ட இருவரின் ஆயுதங்களும், ரவைகளும் விடுதலைப் புலிகளால் கைப்பற்றப்பட்டன.

# திருமலை மாவட்டம் புல்மோட்டையில் தாக்குதல்

## 15 படையினர் பலி

?-02-96 அன்று திருமலை மாவட்டத்தில் இராணுவத்துடன் ஏற்பட்ட நேரடி மோதலில் வீரச்சாவடைந்த மேஜர் மூர்த்தி உட்பட 4 போராளிகளின் 31ஆம் நாள் நினைவாக 25-03-96 அன்று காலை 9.40 மணிக்கு புல்மோட்டை மலைச் சந்தியில் உள்ள இராணுவ முகாமில் இருந்து 4 ஆம் கட்டை ஆளையடி முகாம் நோக்கி ரோந்து வந்த இராணுவத்தினரை 13ஆம் கட்டைப் பொலிஸ் நிலையத்தில் இருந்து ... மீற்றர் தூரத்தில் வைத்து விடுதலைப் புலிகள் மறித்துத் தாக்கினர்

இத்தாக்குதல் 15 நிமிட நேரம் வரை நடைபெற்றுள்ளது. இதில் 15க்கும் மேற்பட்ட இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். ஏனையோர் காயங்களுடன் தப்பி ஓடி விட்டனர். இத் தாக்குதலின் போது காயப்பட்ட 2ஆம் லெப். ஈகன் பின்னர் அன்றிரவு வீரச்சாவடைந்தார்.

தாயக மண்மீட்புக்காய் தம்முயிர் ஈந்த இவ் வீரவேங்கைகளுக்கு விடுதலைப் புலிகள் தமது வீர வணக்கத்தைத் தெரிவிக்கின்றனர்.

# சனாதிபதிக்கு வண. பிதா இமானுவேல் கடிதம்

"பல ஆண்டுகளுக்கு முன்பு இருந்தே சனநாயக ரீதியாக தெரிவிக்கப்பட்ட தமிழ் மக்களின் எதிர்ப்பார்ப்புணர்வுகளை அரசுகள் அடக்கியதின் விளைவாகத் தோன்றிய வன்முறைத் தீர்வுக்கு உங்கள் அரசு எப்படி முடிவு காணப் போகின்றது? அரச படைகளின் கோழைத்தனமான பழிவாங்கல் நடவடிக்கைகளும் கூட உங்கள் சமாதான முயற்சியின் ஓர் பகுதிதான் என எப்படி நீங்கள் நியாயப்படுத்துவீர்கள்?" இவ்வாறு யாழ். மாவட்ட குரு முதல்வர் வணபிதா இம்மானுவேல், சிறிலங்கா சனாதிபதி சந்திரிகாவுக்கு சிறிலங்கா அரச வான்படைகளின் அட்டூழியமே, நாச்சிக்குடாவில் அப்பாவி மக்களின் படுகொலை என எழுதியுள்ள கடிதத்தில் மேற்கண்டவாறு கேட்டுள்ளார்.

அதன் முழு விபரம் வரமாறு:

பெரும்பாலும் குழந்தைகளும், வயோதிபர்களுமாக 17 அப்பாவி மக்கள் சுட்டுக் கொல்லப்பட்டனர். 60 பேர் காயமடைந்தனர். வீடுகள் பல சேதமடைந்தன. சனிக்கிழமை 1996 மார்ச் 16ஆம் திகதி அதிகாலை

தொடர்ச்சி மறு பக்கம்

# ...ளாலியூடாக படகுச் சேவைகள்

## தமிழ் மக்கள் வன்னி நோக்கி நகர்வு

சிறிலங்கா இனவெறிப்படையின் கண்மூடித்தனமான தாக்குதல் ...ரில் இருந்து தற்பாதுகாப்புக்காக மக்கள் தற்போது வன்னி நோக்கி இடம்பெயர்ந்து கொண்டிருக்கின்றனர். கடற்கரையோரமும் அதனை அண்டிய

தொடர்ச்சி 15 ஆம் பக்கம்

**புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# வண.பிதா...

1 ஆம் பக்கத் தொடர்ச்சி

பொழுது இக்கோரம் இடம்பெற்றது. ஒரு கிராமத்தில் சிறிலங்கா வான்படை திட்டமிட்டு நடத்திய பழிவாங்கல் இத்தாக்குதல்தான். கடற்புலிகள் சிலர் இக் கரையோரக் கிராமத்தில் இயங்குகிறார்கள் என்று ஒரு உறுதிப்படுத்தப்படாத ஒரு சந்தேகத்தை மாத்திரம் அடிப்படையாகக் கொண்டு அடைக்கலம் தேடிக் குடியமர்ந்த ஏதிலிகளைப் பற்றிய கரிசனை எள்ளளவும் கொள்ளாது, உங்களது ஆயுதப் படையினர் நாச்சிக்குடா மீது சமீபத்திய சில மாதங்களுக்குள் நடத்திய தாக்குதலில் மூன்றாவது ஆகும். முழங்காவில் வான்பரப்பில் அதிகாலை நான்கு மணியள வில் பறந்து கொண்டிருந்த சிறிலங்கா வான்படையின் புதிய கொள்வனவான ஆஐ24 ரக உலங்கு வானூர்திகள் இரண்டு மீன்பிடிக் கிராமம் ஆன நாச்சிக்குடாவைத் தாக்கும் பொருட்டு எறிகணைகளை ஏவி இந்தப் பேரழிவை வான்படையினர் செய்தனர்.

கிளிநொச்சிக்கு மேற்கே 50 கிலோமீற்றர் தொலைவில் ஏதும் அறியப்படாது இருந்த இக்கிராமம், பெயர் சொல்லித் தெரிய வந்தது. 1995 ஒக்ரோபர் 30 ஆம் திகதி இடம்பெற்ற வரலாற்று செயலாக இடம்பெற்ற மக்கள் வெளியேற்றத்தில் ஒரு பகுதியான பாசையூர், குருநகர், நாவாந்துறை, நவாலி, மாதகல் போன்ற யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த வறிய மீனவக் குடும்பங்கள் இங்கு அடைக்கலம் மேடினர். தமது ஒரே தொழில் என்ற முறையில் மீன்பிடித்தொழிலைச் செய்வதற்கு ஏற்ற கரையோரக் கிராமம் என்பதால் தான் ஏதிலிகளான இம்மக்கள் நாச்சிக்குடாவில் அடைக்கலம் தேடினர். அப்பாவிக் குடிமக்கள் கொலை செய்யப் படும்போது எல்லாம், சம்பவம் நடந்து முடிந்த ஒரு சில மணிநேரத்தில் அவற்றை சிறிலங்காப் படையினர் நியாயப் படுத்துவர். வழமைபோன்று இப்படுகொலைகளும் நியாயம் படும் என்பது எங்கள் கட்டறிவிற்கு அப்பாற்பட்ட அனுபவம். இது சிறிலங்கா அரச படைகளின் குண அடையாளமென்பது இப்பொழுது நன்கு அறியப்பட்ட விடயம். கடந்த 40 ஆண்டுகளாக நடந்தேறிய படுகொலைகளின் தொடர்கள் எல்லாம் இந்த விதத்தில் நியாயப்படுத்தப்பட்டவைதான்.

நவாலியில் 150 மக்கள், நாகர்கோவிலில் 29 பள்ளிச் சிறார்கள், குமாரபுரத்தில் 30 அப்பாவி மக்கள் என்பதாகப் படுகொலைப் பட்டியல் அண்மைக்காலப்பகுதியில் நடந்த படுகொலைத் தொடரில் உதாரணமாகக் கொள்ளக்கூடிய அளவீடுகளாகும். இப்படுகொலைகள் எவற்றிக்கேனும் பெரிய நட்டக் கொடுப்பனவு இல்லை என்பதுடன், வீடுகள் கட்டிக் கொடுக்கப் படவில்லை. மரணச் சடங்கு செலவுகள் கொடுக்கப் படவும் இல்லை. ஏதோ ஒரு விதத்தில் இந்த அப்பாவிப் பொதுமக்களின் இறப்பு எண்ணிக்கை புலிகளின் இறப்பு எண்ணிக்கையாக கணக்கிடப்பட்டது. இப்படி இருந்தும் கூட மாட்சிமை தங்கிய தங்களை இனப்பிரச்சினைக்கு ஓர் சமாதானத் தீர்வு காண விளைவதாக பிரகடனப்படுத்திக் கொள்ளும் ஓர் அரசின் முதல்வராகும். புலிகளிடமிருந்து தமிழ் மக்களை மீட்க அனுப்பப்பட்ட ஆயுதப் படைகளின் பிரதம தளபதியாகக் கொண்டு இச்சம்பவத்தின் மிகத் துலாம்பரமாகச் செய்யும் சில விடயங்கள் பற்றி ஓர் பொருத்தப்பாடான கேள்வியை உங்கள் முன் வைப்பது எனது கடமை எனக் கருதுகின்றேன்.

மன்னார் கடற்பரப்பில் 15-03-96 அன்று சிறிலங்கா கடற்படையினருக்கும், சில கடற்புலிகளுக்கும் இடையே ஓர் மோதல் ஏற்பட்டதென்றும், புலிகளை விரட்டிச் செல்லும் வேளையில் கடற்படைக்கலம் கடற்கண்ணி வெடியில் சிக்கியதால் கடற்படையினர் 8 பேர் பலியானதாகவும் அறிவிக்கப்பட்டது.

கடற்படையினர் புலிகளைத் துரத்தித் தங்களின் முழுப்பலத்துடனும் தாக்கி இருந்தாலும் புத்தி தெளிவுள்ள எவருமே அதைப் பிழை என்று சொல்லமாட்டார்கள். ஆனால் படையினர் செய்ததென்ன? சம்பவம் நடந்து சில மணி நேரத்தின் பின்பு புறக்கணிக்கப்பட்டிருந்த ஓர் அகதிக் கிராமத்தின் மீது எறி கணைகளை வீசியது மிக மோசமானதும், கோழைத் தனமானதும் ஆகும். ஏன் என்றால், சாதாரணமாக மோதலில் ஈடுபடும் இரு படையணிகளுக்கு இடையே நடைபெறும் துப்பாக்கிச் சமரின் இடையே பொதுமக்கள் அகப்பட்டுக் கொல்லப்படுவதை எங்களால் விளங்கிக் கொள்ள முடியும். ஆனால் நாச்சிக்குடாவில் நடந்தது போன்ற அப்பாவி மக்களைக் கொன்று பழிவாங்கும் செயற்பாடுகளைத்தான் விளங்கிக் கொள்ள முடியவில்லை.

கொழும்பிலுள்ள அரசியற் கட்சிகள் மாட்சிமை தாங்கிய உங்களை நாச்சிக்குடாச் சம்பவம் பற்றி விசாரிக்க ஓர் ஆணைக்குழு அமைக்கும்படி கேட்கக்கூடும். (நஸ்டஈடு வழங்கப்படும்படி கேட்க அவர்கள் துணியமாட்டார்கள்) ஆணைக்குழுக்கள் மட்டும் அமைப்பதாலேயே பிரச்சினைகளைத் தீர்ப்பதாக காட்டிக் கொள்ளும் அரசின் தேவைக்காக அவர் ஆணைக்குழு ஒன்றை அமைக்க இணங்கக்கூடும். முடியுமானவரை ஒரு படையணி அதிகாரி போன்ற ஒரு நபர் ஆணைக்குழுவை நியமித்துவிட்டு தீர்த்துக் கட்டு வோம் என்ற ரீதியில் பெருமளவு தமிழரைக் கொல்லும் நிலைப் பாட்டைத் தொடரலாம். ஆனால் கொழும்பில் உள்ள தமிழ் அரசியல் கட்சியாளர் கேட்பது போல் ஆணைக்குழு நியமிக்கும்படி நாங்கள் கேட்கவில்லை. மாறாக கீழ்க்காணும் கேள்விகளுக்கு உங்களிடமிருந்து மனதில் நம்பகத்தன்மை ஏற்படக்கூடிய பதில் எதிர்பார்க்கின்றோம்.

1) பல ஆண்டுகளுக்கு முன் இருந்தே சனநாயக ரீதியாக தெரிவிக்கப்பட்ட தமிழ் மக்களின் எதிர்பார்ப்புணர்வுகளை அரசுகள் அடக்கியதன் விளைவாகத் தோன்றிய வன்முறைத் தீர்வுக்கு உங்கள் அரசு எப்படி முடிவு காணப்போகின்றது.?

2) அரச படைகளின் கோழைத் தனமான பழிவாங்கல் நடவடிக்கைகளும் கூட உங்கள் சமாதானத் தீர்வின் முயற்சிகளில் ஓர் பகுதியானது என எப்படி நீங்கள் நியாயப்படுத்துவீர்கள்?

நன்றி.

இவ்வாறு வண. பிதா இமானுவேல் அவர்கள் சனாதிபதி சந்திரிகாவுக்கு எழுதியுள்ள கடிதத்திற் கேட்டுள்ளார்.

# செய்திச் சுருள்

## செல்வி முரியல் கட்சின் அவர்களின் நினைவாகப் பொதுக்கூட்டம்

மறைந்த செல்வி முரியல் கட்சின்ஸ் அவர்களுக்கு பொதுமக்கள் கூட்டமொன்று கிளிநொச்சியில் இடம்பெற்றது. இங்கிலாந்தில் பிறந்து, இலங்கைக்கு 'மிசனரி' மூலமாக அனுப்பப்பட்டு இலங்கையில் பல காலமாக ஆசிரியராகவும், அதிபராகவும் கடமையாற்றிய இவர் இளைப்பாறிய பின் கிளிநொச்சியில் தாய், தந்தையரை இழந்த இளம் பெண்களுக்கு 'கருணை இல்லம்' எனும் பெயரில் ஓர் ஆச்சிரமத்தை அமைத்து அவர்களுக்கு தேவையான கல்வியைப் போதித்து வந்தார். ஆங்கில நாட்டில் ஆங்கிலேய தம்பதியினருக்குப் பிறந்த செல்வி முரியல், தமிழில் எழுதவும் பேசவும் மிகவும் திறமையாகப் பழகிக் கொண்டார்.

பொதுக்கூட்டத்தில் பேசிய வண.பிதா டானியல் தியாகராஜா அவர்கள், இச் சிறுவர் இல்லத்தில் இருந்த பிள்ளைகளுக்கு தனது தள்ளாத வயதிலும், மிகவும் உறுதியாக தன்னைத் தியாகம் செய்து சிறுவர்களின் படிப்பில் மிகுந்த ஆர்வம் காட்டி வந்தவர் என்றும், இவர் நினைவுகள், இந்த மண்ணில் தமிழர்கள் வாழும் வரைக்கும் என்றென்றும் நிலைத்திருக்கும் என்று குறிப்பிட்டார். தமிழீழக் கல்விக் கழகத்தின் பொறுப்பாளர் திரு. இளங்குமரன் அவர்கள் பேசும் பொழுது, செல்வி முரியல் அவர்களால் செய்யப்பட்ட திறமையான கல்வித் திட்டங்களை நினைவுகூர்ந்து அதனைப் பாராட்டினார்.

செல்வி முரியல் கட்சின்ஸ் அவர்களின் திருவுருவப் படம், தமிழீழ நீதித் துறைப் பொறுப்பாளர் திரு. பரா அவர்களால் திறந்து வைக்கப்பட்டது.

## வடபகுதி மெதடிஸ்த் திருச்சபைக்குரு இராணுவத்தால் தாக்கப்பட்டார்

வடபகுதி மெதடிஸ்த திருச்சபையின் குரு ஒருவர் வவுனியா தாண்டிக்குளச் சிறிலங்கா இராணுவத் தடைமுகாமில் இராணுவ அதிகாரி ஒருவரால் கடுமையாகத் தாக்கப்பட்டார். தேவாலயம் ஒன்றின் உறுதிப்பத்திரத்தை புதுப்பிப்பதற்காக 3 இலட்சம் ரூபாயுடன் வந்த வேளையில் இராணுவத்தால் தடுத்து நிறுத்தப்பட்ட இவர், பல குறுக்கு விசாரணைக்கு உள்ளாக்கப்பட்டார். தேவாலயக் கட்டத்தின் உறுதிப்பத்திரத்தையும் அதனுடன் சம்பந்தப்பட்ட ஆவுணங்களைக் காட்டிய போதும், இதனைக் கேட்க மறுத்த இராணுவ அதிகாரிகள் இவரைக் கடுமையாகத் தாக்கினர்.

கோபமடைந்த அதிகாரி ஒருவர், குருவானவர் கொண்டு வந்த காசோலையைக் கிழித்து நிலத்தில் வீசிவிட்டு அதனைப் பொறுக்கும்படி உத்தரவிட்டார். இச்சம்பவத்தின் குருவானவர், கிறிஸ்தவ மதமறைப்படியான உடையிலேயே இருந்தார் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

## 'புளொட்' கும்பல் உணவு லொறிகளிடம் கப்பம்

புளொட் கும்பல் வடபகுதிக்கு உணவு எடுத்துவரும் லொறிகள் ஒவ்வொன்றுக்கும் மூவாயிரம் ரூபாக்கள் கப்பம் கேட்டுவரும் அடாவடித்தனத்தினால், லொறிகள் கச்சேரி வளாகத்தில் தவம் கிடக்கின்றன. இது சம்பந்தமாக கிளிநொச்சி அரச அதிபர், கொழும்பில் நின்றபோது அத்தியாவசிய உணவுகள் அதிகாரியிடம் கூறியபோது, இது பற்றி தம்மால் ஒன்றுஞ் செய்ய முடியாது என்றும், இதனை 'புளொட்' கும்பலோடு கதைத்தே தீர்க்கலாம் எனவும் அவ்வதிகாரி அரச அதிபருக்குக் கூறியுள்ளார். இவ்வுணவு லொறியுடன், கிளிநொச்சி அரச அதிபரின் ஏற்பாட்டில் இடம்பெயர்ந்த மக்களுக்குக் குடிசைகள் அமைப்பதற்காகக் கிடுகுகளும் எடுத்து வரப்பட்டதாகவும், அவைகளும் வவுனியாவிலேயே இருப்பதாகத் தெரியவருகின்றது.

## 33 மலையகத் தமிழர்கள் அரச படைகளால் தடுத்துவைப்பு

அரிசி ஆலைகளில் வேலை செய்யும் 33 மலையகத் தமிழர்கள் தொடர்ந்தும் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். 12-03-96 அன்று மத்திய மாகாணம் தம்புல்ல சிறிலங்கா அரச படைகளால் திடீரென சுற்றிவளைக்கப்பட்டு வீடு வீடாகச் சோதனை செய்தனர். இதன்போது அரிசி ஆலைகளில் வேலை செய்து கொண்டிருந்த பல தமிழ் இளைஞர்கள் படையினரால் கைது செய்யப்பட்டு, கண்டிச் சிறையில் அடைத்து வைக்கப்பட்டனர். இவர்களில் 85 பேர் நீதிமன்றத்தின் உத்தரவின் பேரில் விடுதலை செய்யப்பட்டுள்ளனர். ஏனைய 33 பேரும் தொடர்ந்தும் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

## வடமராட்சி, தென்மராட்சியில் விமானம், எறிகணைத் தாக்குதல்கள்

அடுத்த இராணுவ நடவடிக்கையை தொடங்கும் ஆயத்த நடவடிக்கையாக வடமராட்சி, தென்மராட்சி மீது சிறிலங்கா இராணுவத்தினர் தொடர்ந்து விமான, மற்றும் எறிகணைத் தாக்குதல்களை மேற்கொண்டு வருகின்றனர். 26-03-96 அன்று மிகையொலித் தாரை விமானம் ஒன்று கெருடாவில் பகுதியை நோக்கி பல குண்டுகளை வீசித் தாக்கியுள்ளது. இதன்போது இரு வயோதிபர்கள் படுகாயத்திற்குள்ளானார்கள். பத்மினி எனும் 15 வயதுடைய இளம் பெண்ணும் படுகாயத்துக்குள்ளாகியுள்ளார். இவருடைய வீட்டின் மீது நேரடியாக குண்டு தாக்கியுள்ளது. வீடு தரைமட்டாகியுள்ளது. இம்மூவரும் மந்திகை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இரவு பகலாக 24 மணிநேரமும் பலாலி, ஆக்கிரமிக்கப்பட்டுள்ள வலிகாமப் பகுதியில் இருந்தும், ஆனையிறவு இராணுவ முகாமில் இருந்தும், மிலேச்சத்தனமான எறிகணைத் தாக்குதல்கள் மக்கள் குடியிருப்புக்களை நோக்கி நடாத்தப்படுகின்றன. ஆபத்து நிறைந்த சில பகுதிகளில் இருந்து மக்கள் ஏற்கனவே பாதுகாப்பான இடங்களுக்குச் சென்றுள்ளதால் உயிர்ச் சேதங்கள் பெரும்பாலும் தவிர்க்கப்பட்டுள்ளன.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியற் துறையினர்

# தமிழீழ மக்களுக்குக் கோரிக்கை

அன்பார்ந்த தமிழீழ மக்களே!

சிங்கள அரசின் தொடர்ச்சியாக மீண்டும் மக்களை அழிக்கும் முயற்சிகள் முனைப்புடன் முடுக்கிவிடப்பட்டுள்ளது. எதிரிப்படை தனது விமானக்குண்டு வீச்சு, எறி–கணைத் தாக்குதல் என்பனவற்றாலும் உளவியல் ரீதியான அழுத்தங்களாலும், மக்களை கொன்றுவிட எண்ணி செயல்பட்டுள்ள இவ்வேளை– நாம் இவ்வாறான எதிரியின் திட்டமிட்ட செயற்பாடுகளில் இருந்து மக்களைப் பாதுகாத்துக் கொள்வதற்கான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டியமை இன்று அத்தியாவசியமாகின்றது. சிங்கள இராணுவத்தின் இனவெறி அழிப்பு நடவடிக்கைகள் இன்றைய காலங்களில் வேகங் கொண்டு காணப்படுவதை நாம் அவதானிக்கக்கூடியதாக உள்ளது. இராணுவத்தின் ஆக்கிரமிப்பு பகுதிகளில் நேரடியாகவும், மற்றைய பகுதிகளில் குண்டுத் தாக்குதல், எறிகணை வீச்சு என்ற போர்வையில் மக்களைக் கொன்று விடுவதுடன் அவ்வாறு கொல்லப்பட்ட மக்கள் புலிகள் என அரசினது தொடர்பு சாதனங்கள் 5லம் உள்நாட்டிலும், மற்றும் வெளிநாடுகளிலும் பிரச்சாரம் செய்து வருவதை நாம் காணக்கூடியதாக உள்ளது.

இந்த வகையில் அண்மையில் இடம்பெற்ற திருமலை குமாரபுரம் படுகொலை, வவுனியா தாளம்பைக்குளச் சம்பவம் மற்றும் நாச்சிக்குடா தாக்குதல் என்பன அரசின் கொடிய இனஅழிப்பாக மேற்கொள்ளப்படும் தொடர் சம்பவங்களாகும். இராணுவத்தின் அழிப்புகளில் இருந்து மக்களைப் பாதுகாக்க புலிகள் இயக்கத்தால் மேற்கொள்ளப்படும் பதில் தாக்குதல்களால் கோபம் கொண்ட இராணுவம் மக்களைக் கொல்வதும் அழிப்பதும் பின்னர் அவர்களைப் புலிகள் எனவும் புலிகளின் செயற்பாடுகளினால் கொல்லப்பட்டவர் எனவும் விளக்கம் கொடுக்கப்படுவதும் வழமையாகிவிட்டமையால், எமது மக்கள் இவ்வாறான செயற்பாடுகளில் இருந்து தம்மைப் பாதுகாத்துக் கொள்வதற்கான தற்காப்பு முயற்சிகளை மேற்கொள்ளல் வேண்டும். யாழ். குடாநாட்டைக் கைப்பற்றும் இராணுவ நகர்வின்போது தமிழ் மக்களும் பாரிய இடம்பெயர்வை மேற்கொண்டு, அரசினது நோக்கை முறியடித்தமை, அவ்வாறான இடம்பெயர்வின் காரணமாக மக்கள் தமது இருப்பிடங்களையும், சொத்துக்களையும் இழந்து தமிழீழத்தில் பலபகுதிகளிலும் இராணுவத்தின் ஆக்கிரமிப்பு இல்லாத இடங்களில் மிகவும் அடர்த்தியாகவும், நெருக்கமாகவும் தமது வீடுகளையும் வாழ்விடங்களையும் அமைத்து வருகின்றனர். இவ்வாறான வேளையில் அரசு மேற்கொள்ளும் குண்டுத் தாக்குதல்கள் அதிக உயிரிழப்புக்களையும், அழிவுகளையும் உண்டாக்கின் அரசின் நோக்கம் இலகுவாக நிறைவுபெற வாய்ப்பாக அமைந்துவிடுகிறது. இவ்வாறான முயற்சிகளிற்கு மக்கள் வாய்ப்பளிக்காது தமது வாழ்விடங்களிலும் அண்மையிலும் பதுங்குழிகளை அமைத்து பாதுகாப்பாக இருப்பதன் ஊடாக மேற்குறித்த உயிரிழப்புக்களை ஓரளவு குறைத்துக் கொள்ளமுடியும். பதுங்குகுழிகள் அமைப்பதில் கணிசமான எண்ணிக்கையினர் காட்டும் அசமந்தமான போக்குகள் பல அழிவுகளை உண்டாக்கி இருப்பதுடன், பல்வேறு வகையான பிரிவுத் துயரங்களை உருவாக்கியுள்ளது. பாதுகாப்பு முயற்சிகளை மேற்கொள்வதினால் எம்மையும் எமது சுற்றத்தவரையும் பாதுகாப்பதுடன் எமது இனத்தையே அழிவில் இருந்து பாதுகாக்கும் என்பதில் ஐயமில்லை.

எனவே தொடர்ந்தும் இராணுவ நடவடிக்கை என்ற பெயரில் இன ஒழிப்பிற்கு மீண்டும் அரச படைகள் தயாராகின்றன. அத்துடன் சித்திரை புத்தாண்டுக்கு முன் தனது தாக்குதல்களைத் தொடர்வதற்குத் திட்டங்களையும் அரசு வகுத்து வைத்துள்ளது. இதற்காக இராணுவ தளபாடங்களையும் ஆயத்தம் செய்துள்ளது. இதன் ஆரம்ப முயற்சியாக வடமராட்சி, தென்மராட்சி மேல் வான் தாக்குதல்களையும், எறிகணை வீச்சுக்களையும் மேற்கொண்டு மக்களை அழிக்கும் முயற்சியில் இறங்கியுள்ளது. நாம் பாதுகாப்பு முயற்சிகளை மேற்கொண்டு செயற்படும்போது அரசின் தொடரும் இன அழிப்பு நடவடிக்கைகளில் இருந்து காப்பாற்றிக் கொள்ள முடியும். அண்மைக் காலத்தில் அதிகளவிலான இராணுவத்தினர் கொல்லப்பட்டதும் இதற்கான பழிவாங்கல் செயற்பாடாக அரச படைகள் மக்களைக் கொல்லும் முயற்சியில் தீவிரம் காட்டுவதும் அதிகமாக உள்ளது. அண்மையில் 16–03–96 அன்று நாச்சிக்குடாவின் மீது அரச படையினர் நடாத்திய வான் தாக்குதலில் 16 பொதுமக்கள் உயிரிழக்கவும், 60 க்கு மேற்பட்ட பொதுமக்கள் படுகாயமடையவும் காரணமாக இருந்தன. அரச படைகள் தமது இழப்புக்களை ஈடுசெய்ய மேற்கொண்ட முயற்சியாக உள்ளது. இவ்வாறான தாக்குதல்களை மக்கள் இன்று எதிர்பார்க்க வேண்டியுள்ள நிலைமையில்– இவ்வாறான அழிவுகளில் இருந்து மக்கள் பாதுகாப்பு முயற்சிகளை விரைவாக மேற்கொள்ள வேண்டும். எனவே ஒவ்வொரு குடும்பமும், அனாவசிய உயிரிழப்புக்களை தடுக்க முயற்சிப்பதுடன், வாழ்விடங்களை பொதுவிடங்கள், கல்லூரிகள், கோயில்கள் போன்ற அனைத்து இடங்களிலும் பதுங்கு குழிகளை அமைத்து பாதுகாப்புக்குட்படுத்த வேண்டும். மேலும் போர்க்கால அறிவிப்புக்களுக்கு மக்கள் செவிசாய்த்து உடனடியாக அழிவுகளில் இருந்து நாம் எம்மைப் பாதுகாத்துக் கொள்ள விரைவாக பலவழிகளிலும் செயற்பட வேண்டுதல் அவசியமானது.

## வவுனியா முகாமில் பெரும் இடநெருக்கடி

நாளுக்கு நாள் முகாம்களுக்கு வருபவர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருவதால் முகாம்களில் சுகாதார வசதிகள் குறைவாக உள்ளன. தங்கி இருப்பதற்கும் இரவில் உறங்குவதற்கும் இடவசதி பற்றாக்குறையாக உள்ளது. இரவில் வெட்ட வெளியிலும், மரங்களின் கீழும் உறங்க வேண்டியுள்ளது. இரவில் கடும்பனி பெய்வதனால் குளிரினால் நடுங்குபவர்களையும் காணக்கூடியதாக வுள்ளது.

வவுனியா வருவோரில் அனுமதி வழங்குவதற்காக முதலில் நோயாளிகளும், அடுத்து வெளிநாடு செல்வோர், புலமைப்பரிசில் பெற்றுச் செல்வோர், உயர்கல்வி வாய்ப்புப் பெற்றுச் செல்வோர், நேர்முகப்பரீட்சைக்குச் செல்வோர் எனவும், மூன்றாவதாக கடமையின் நிமித்தம் செல்லும் அரச, தனியார் ஊழியர்கள் தென்பகுதியில் பதிவுகள் இருந்து வடபகுதியில் உறவினர்களைச் சென்று பார்த்து விட்டு வருபவர்கள், அடுத்து தென்பகுதியில் பதிவுகள் எதுவும் இல்லாது செல்வோர் என வகைப்படுத்தப்பட்டு அரச அதிபர் காரியாலயத்தால் பதிவு செய்யப்படுகின்றனர்.

இந்தவகையில் வகைப்படுத்தப்பட்டவர்களை முன்னுரிமையில் அனுமதிக்க நடவடிக்கை எடுக்குமாறு அரச அதிபர் ஆலோசனை கூறியுள்ளார்.

தற்போது அனுமதி வழங்குவதில் பல அசௌகரியங்கள் நிகழ்கின்றன எனவும் மக்களால் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

# இடம் பெயர் தேவை

எல்லா உயிரினங்களுமே தம் உயிருக்கு ஆபத்து வரும் வேளை தம்மைப் பாதுகாக்க ஒவ்வொரு யுக்தி முறைகளைக் கையாள்கின்றன. எதிரி மூலம் தனக்காபத்து வரும் வேளை எதிர்த்து மூர்க்கமாக போராடுவது மட்டுமன்றி இடமறிந்து, நிலையறிந்து, தம் போராட்ட முறையையும் வாழ்வு முறையையும் அமைத்துக் கொள்கின்றன. பல்லி தன்னுடைய வாலினை எதிரி விலங்கு பற்றியிழுக்கும்போது வாலையே அறுத்துவிட்டுத் தப்பிவிடுகிறது. அறுந்த வால் துடித்துக்கொண்டிருக்க எதிரி விலங்கு அதைப் பார்த்துக்கொண்டிருக்கப் பல்லி தப்பிவிடும்.

இது நாம் பல்லியிடம் கற்கக் கூடிய பாடம். அண்மையில் விடுதலைப்புலிகள் இன்னுமொரு இடம் பெயர் தேவையினை விளக்கித் தமிழீழத்தில் அறிவித்திருந்தனர். இதனை எதிர்பார்த்ததுபோலவே சிங்கள அரசு வேறுவிதமாக சித்தரிக்க முனைந்தாலும் அதன் அத்தியாவசியத்தை உலகு நன்கறியும்.

தமிழ் மக்கள் ஏற்கனவே இடம் பெயர் சூழ்நிலையில் வடமராட்சிப் பகுதியில் அதிகம் செறிந்து வாழ்கின்றனர். இந்நிலையில் முன்னரைவிட அதிக படை, வெடிபொருட்களுடன் படையெடுப்பை நிகழ்த்தப்போவதாகச் சிங்கள அரசு அறிவித்த பின்பும் நாம் அடர்த்தியாக அமர்ந்திருப்பது அறிவீனம்.

அதேவேளை இறுதி நிலை வரைக்குமாக எவ்வித முன்யோசனையுமின்றி இருப்பதும், எமக்கு நாமே மண்ணள்ளிப் போட்டது போன்றதே. எமக்கு ஏற்கனவே ஒரு பாடம் உண்டு. அது எதிரிக்கும் பாடம் என்பதனை நாம் ஒருபோதும் மறக்கக்கூடாது. முன்பு எதிரி அப்படியானதோர் இடப்பெயர்வைக் கனவிலும் எதிர்பார்த்து இருக்கவில்லை. அதனால் நாம் இலகுவாகத் தப்பிவிட்டோம். இனிமேல் எதிரியின் நோக்கு எப்படியெல்லாம் கடைசிநேரத்தில் அமையும் என்று சொல்லமுடியாது. ஆகவே இடம் பொருளறிந்து இடம்பெயர் தேவை இன்று தமிழர்க்குத் தேவை.

வன்னிமண்ணுக்கு முடியுமானவரை இடம்பெயர்ந்து செல்லுங்கள் என விடுதலைப்புலிகள் எழுந்தமானமாக அறிவுறுத்தல் விடுக்கவில்லை. அது பரப்பளவில் வளமளவில் பெரியது. மக்கள் வடமராட்சிபோன்று செறிவாக வாழ வேண்டிய அவசியமில்லை. கிளாலிக் "கழுத்தைச்" சுருக்கியபடி எதிரி படையெடுப்பின், பெரும் அழிவு தவிர்க்கமுடியாததாகிவிடும். ஆதலாற்றான் வீடு ஊர் காணி வளவு என்று அவற்றைத் தற்காலிகமாகவேனும் இடம் பெயர் தேவை ஏற்பட்டுவிடுகிறது.

ஆனால் அதேவேளை இன்னொரு அர்த்தமும் இடம் பெயர் தேவை என்ற தலையங்கத்துக்கு உண்டு. மக்களெல்லாம் இடம்பெயர்கின்ற இந்தவேளையிலே எதிரியும் தனக்குசாதகமாகப் பயன்படுத்திக்கொண்டு துரோகிகளையும் உளவாளிகளையும் எம்மிடையே புகுத்திவிட முனைவான். "அண்ணை எந்த இடமென்றால்" "உரும்பிராய்தான் இடப்பெயர்வில் வந்தனான்" என்று உளவாளி ஊடுருவ நிறைய வாய்ப்புகள் உண்டென்பதைத் தமிழினம் மறக்கக்கூடாது. ஆதலால் இடம் பெயர் தேவை ஏற்படும்போது, ஒருவருக்கு இடம், பெயர், தேவையும் உண்டு என்பதை அதாவது அவரது சொந்த இடம் அவரது பெயர் போன்றவற்றை விசாரிக்கவேண்டியதும் வழங்கவேண்டியதுமான தேவை இப்படியான இக்கட்டான சூழ்நிலைகளில் உண்டென்பதைத் தமிழினம் மறக்கக்கூடாது.

# சிக்கல்களில் சிக்கித் தவிக்கும் சிவில் நிர்வாகம்.

வடக்கில் மீண்டும் சிவில் நிர்வாகத்தை ஏற்படுத்திவிட முனைந்த சிறிலங்கா அரசு இன்று தனது தலைநகரான கொழும்பில்கூட அதனைச் சீராக நடத்தமுடியாதளவிற்கு குழம்பிப்போயுள்ளது.

வடக்கு நீண்ட பல வருடங்களாக விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டிலேயே இருந்து வந்தது. கடந்தவருட இறுதியில் அதன் பிரதான மையமாக இருந்த யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றி அங்கு சிவில் நிர்வாகத்தை ஏற்படுத்தப்போவதாக ஆட்சியாளர்கள் அடிக்கடி கூறி வந்ததுடன் ஓர் இராணுவ நடவடிக்கையையும் மேற் கொண்டனர்.

விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டிலிருந்த பிரதேசம் சிங்களப்படைகளால் ஆக்கிரமிக்கப்பட்டது. இதன்மூலம் வலிகாமத்தில் விடுதலைப்புலிகளால் சிறப்பாக நடத்தப் பட்டுவந்த சிவில் நிர்வாகத்தைச் சிறிலங்கா அரசு சீர்குலைக்க முயன்றதே தவிர அங்கு தனது நிர்வாகத்தை ஏற்படுத்தமுடியாது தவிக்கின்றது.

**சிவில்நிர்வாகத்தை ஏற்படுத்த முனைந்த சிங்கள ஆட்சியாளர்கள் தமது தலைநகரான கொழும்பில் கூட அதனைச் சீராக நடத்த முடியாது தடம் புரளத் தொடங்கிவிட்டனர்.**

**சசிகரன்**

விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டின் கீழ் வலிகாமம் இருந்த போது ஆங்காங்கே பாரிய தாக்குதல்கள் ஏற்பட்டபோதிலும் அரசினால் சிவில் நிர்வாகத்தை குழப்ப முடியவில்லை. பாடசாலைகள், பல்கலைக்கழகங்கள் இயங்கின. வங்கிகள், செயலகங்கள் தொழிற்பட்டன. காவல் பணிமனைகள் நீதிமன்றுகள் சட்டத்தை நிலைநாட்டிக் கொண்டிருந்தன. போக்குவரத்து மற்றும் வைத்திய சேவைகள் கூட தடையின்றித் தொடர்ந்தன.

இவற்றைக்கண்டு அச்சமடைந்த அரசு அவற்றைக் குழப்பயடித்து அங்கு தமது சிவில் நிர்வாகத்தை மீண்டும் ஏற்படுத்த எடுத்த முயற்சிகள் தோல்வியிலேயே முடிந்தன. வலிகாமம் கைப்பற்றப்பட்டது. ஆனால் அங்கு சிவில் நிர்வாகத்தை நடத்த எவருமே இருக்கவில்லை.

எனினும் ஆட்சியாளர்கள் தமது தொடர்பு சாதனங்களுடாகத் தினமும் தம்மால் கைப்பற்றப்பட்ட பகுதிகளில் படிப்படியாக சிவில்நிர்வாகத்தை ஏற்படுத்தி வருவதாகத் தீவிர பிரசாரத்தை மேற்கொண்டு வருகின்றனர்.

"வைத்தியசாலையை இயக்கும்பணி தீவிரமாக நடைபெற்றுவருகின்றது. பாடசாலைகள் ஆரம்பிக்க தளபாடங்களும், பாடசாலை உபகரணங்களும் அனுப்பப் படுகின்றன. பல பொலிஸ் நிலையங்கள் திறக்கப்பட்டுள்ளன. போக்குவரத்திற்கென இறக்குமதிசெய்யப்பட்ட புதிய பஸ்கள் அங்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளன." என்றெல்லாம் கூறி, வாயால் மட்டும் தனது சிவில்நிர்வாகத்தை அரசு நடத்திக்கொண்டிருக்கிறது.

ஆனால் தெற்கில் இதுவரை காலமும் நடத்தப்பட்டு வந்த சிவில் நிர்வாகம் இன்று ஆட்டம் காணத்தொடங்கிவிட்டது. சிறிலங்காவின் பொருளாதார மற்றும் நிர்வாக மையமாக விளங்கிய ஜனாதிபதி மாவத்தையில் நடந்த குண்டுத்தாக்குதலையடுத்து இலங்கை முழுவதிலும் தனது சிவில்நிர்வாகத்தை ஏற்படுத்த முனைந்த சிங்கள ஆட்சியாளர்கள் தமது தலைநகரான கொழும்பில்கூட அதனைச் சீராக நடத்தமுடியாது தடம்புரளத் தொடங்கிவிட்டனர்.

அங்கு அரச இயந்திரம் செயலிழக்கத் தெடங்கிவிட்டது. பாடசாலைகளுக்குப் பாதுகாப்புக் கொடுக்குமாறு பெற்றோரும், ஆசிரிய மாணவர்களும் அரசை வற்புறுத்தினர். இதனால் பிரபல பாடசாலைகள் முன்பாகச் செல்லும் பிரதான வீதிகளை அரசு மூடியது. அதுவும் பாதுகாப்பற்றதென தெரிவித்த பெற்றோர் தமது பிள்ளைகளைப் பாடசாலைக்கு அனுப்ப மறுத்துவிட்டனர். இந்நிலையில் அரசு பாடசாலைகளை காலவரையின்றியே மூடிவிட்டது.

நகரிலும், அதன் சுற்றுப்புறங்களிலும் காவல் கடமையில் ஈடுபடுத்தப் பட்டிருந்த பொலிசார் அகற்றப்பட்டு கொழும்பு நகரின் பாதுகாப்பு முற்றாக இராணுவத்திடம் ஒப்படைக்கப்பட்டுவிட்டது. இதன் மூலம் தலைநகரின் சிவில் நிர்வாகத்தை இராணுவம் சீராக்குமென ஆட்சியாளர்கள் கனவுகாண்கின்றனர்.



கொழும்பின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதே அவர்களின் முக்கிய கடமையாக இருக்கப்போகின்றது. இதற்காக சகல இடங்களிலும் இராணுவம் குவிக்கப்பட்டுள்ளது. இவர்கள் வீதித் தடைகளைப்போட்டு இருபத்திநான்கு மணிநேரமும் தீவிர சோதனைகளை மேற்கொள்ளப்போகின்றனர். சகல வாகனங்களும் மறிக்கப்பட்டு சோதனையிடப்படும். பொதுமக்கள் தடுத்தவைக்கப்பட்டு விசாரிக்கப்படப் போகின்றனர். இவர்களின் தேசிய அடையாள அட்டைகளும், தொழில் நிலைய அட்டைகளும் பெறப்பட்டு உறுதிப்படுத்தப்படப்போகின்றன. இவர்களது பொதிகளும் கூட சோதிக்கப்படப்போகின்றன. இரவுபகலாகத் தேடுதல் வேட்டைகள் நடைபெறப்போகின்றது. சந்தேகத்திடமானவர்கள் கைதுசெய்யப்பட்டு விசாரணைகளுக்காகத் தடுத்துவைக்கப்படப் போகின்றனர்.

படையினரின் இத்தகைய நடவடிக்கைகள் கொழும்பு மக்களின் வாழ்க்கையைப் பெரிதும் பாதிக்கும் என்பது வெளிப்படை.

**வலிகாமத்திற்குள் இராணுவத்தினரை அனுப்பி அங்கு சிவில் நிர்வாகத்தை ஏற்படுத்தப் போவதாகக் கூறிய அரசு அங்கிருந்த சிவில் நிர்வாகத்தையும் கெடுத்ததுபோல இன்று கொழும்பில் இராணுவத்தை இறக்கியதன் மூலம் கொழும்புநகர மக்களின் இயல்பு வாழ்க்கையை மட்டும் சீரழிக்கப் போகின்றது என்பது மட்டும் உறுதி.**

தொழிலாளர்கள் நேரத்திற்குத் தமது வேலைகளுக்குச் செல்லமுடியாது. நோயாளர்கள் வைத்தியசாலைக்குச் செல்லமுடியாது. போக்குவரத்துக்களைச் சீராக நடத்த முடியாது. இதனால் உற்பத்தி நிலையங்களின் உற்பத்திகள் பெரிதும் பாதிப்படையப் போவதுடன் வீழ்ச்சியடையப் போகின்றது.

எந்த நேரத்தில் எதுவும் நடக்கலாம் என்ற அச்ச உணர்வு மக்கள் மத்தியில் ஆழப்பதிந்துவிட்டது. அதனாலேயே இன்று வதந்திகள் காட்டுத்தீ போல் பரவிக் கொண்டிருக்கின்றன. வதந்திகளை, வதந்தி என்று நிரூபிப்பதிலேயே அரசின் பெரும்பகுதி நேரம் செலவிடப் படுகின்றது.

அரச உத்தியோகத்தர்கள் பலர் தமது பதவிகளை ராஜினாமாச் செய்து வருகின்றனர். இன்னும் சிலர் தொடர் விடுப்பிலுள்ளனர். பெரும்பாலானவர்கள் தமத வீடுகளை விட்டு வெளியேறுவதே கிடையாது.

நாட்டின் ஜனாதிபதிக்கே பாதுகாப்புக் கொடுக்கமுடியாத பாதுகாப்புபடையினர் நகருக்கு எப்படிப் பாதுபாப்புக் கொடுக்கப்போகின்றனர் என மக்கள் கேள்வி எழுப்புகின்றனர்.

"போதியளவு வெடிமருந்துகள் கொழும்பிற்குள் கொண்டு வரப்பட்டு மறைத்து வைக்கப்பட்டுள்ளன. தாக்குதல் நடத்துபவர்கள் பாடசாலைகள், தொலைக்காட்சி மற்றும் வானொலி நிலையங்கள் அரச கட்டடங்கள் மீது பாரிய தாக்குதல்களை நடத்தத் திட்டமிட்டுள்ளனர்.

வெடிமருந்துகள் பொருத்தப்பட்டு தாக்குதல் நடத்தத் தயாரான நிலையில் பல வாகனங்கள் கொழும்பில் நடமாடிக்கொண்டிருக்கின்றன" என அரசே தனது மக்களை அச்சுறுத்திக்கொண்டிருக்கிறது. இவ்வாறு அறிவித்துக் கொண்டிருப்பதன் மூலம் மக்களை ஏமாற்றிவிட்டு இராணுவத்தை பெருமளவில் குவித்து நகரின் பாதுகாப்பு என்ற போர்வையில் அரசு தம்மையும், தமது உடமைகளையும் பாதகாத்திடத் திட்டமிட்டுள்ளது. அரசபடைகளின் கெடுபிடிகளினால், மக்கள் ஆத்திரம் கொள்ளாமலிருப்பதற்காக மக்களாகிய உங்களின் பாதுகாப்பிற்காகவே படையினர் இவ்வாறு நடந்து கொள்கின்றனர் என அரசு அதற்கு நியாயம் கற்பிக்கப் போகின்றது.

எனவே வலிகாமத்திற்குள் இராணுவத்தினரை அனுப்பி அங்கு சிவில் நிர்வாகத்தை ஏற்படுத்தப் போவதாகக்கூறிய அரசு அங்கிருந்த சிவில் நிர்வாகத்தையும் கெடுத்ததுபோல இன்று கொழும்பில் இராணுவத்தை இறக்கியதன் மூலம் கொழும்புநகர மக்களின் இயல்பு வாழ்க்கையை மட்டும் சீரழிக்கப் போகின்றது என்பது மட்டும் உறுதி.

www.tamilarangam.net



# இந்திய அரசின் நிலைப்பாட்டில் மாற்றம் வேண்டும்

அண்மையில் தமிழீழ விடுதலைப் புலிகளின் 'கப்பல்' ஒன்றின் நடமாட்டம் பற்றிய செய்தியை சிறிலங்கா படைத்தரப்புக்கு வழங்கியதுடன், அக்கப்பலை தாக்கி மூழ்கடிப்பதற்கு சிங்கள கடற்படை, விமானப்படை இணைந்து மேற்கொண்ட இராணுவ நடவடிக்கையில் தனது



கடற்படையையும் ஈடுபடுத்தி தமிழீழ மக்களுக்கு மீண்டும் இந்திய அரசு துரோகம் இழைத்து விட்டது.

தமிழீழ மக்களுக்கு எதிரான இந்திய அரசின் துரோகத்தனமான இந்த நிலைப்பாடும், சிறிலங்கா அரசுடனும் அதன் படைகளுடனான ஒட்டுறவும் நியாயமானதா?

நீண்டகால நோக்கில் இந்தியாவின் நேச சக்தியாக இருக்கக்கூடிய நாடு தமிழீழமா அல்லது சிறிலங்காவா என்பது பற்றிய இந்திய அரசின் மீள்பரிசீலனைக்கு, கடந்த காலத்தில் நடந்த சில சம்பவங்களை இப்போது சுட்டிக் காட்டுவது அவசியமாகிறது.

1987 யூலை 29இல் முன்னாள் இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தியும், சிறிலங்காவின் அப்போதைய சனாதிபதி ஜே.ஆரும் செய்துகொண்ட 'இந்திய–சிறிலங்கா' ஒப்பந்தத்திற்கு முற்பட்ட காலத்தில், ஓரளவுக்கு தமிழீழ மக்களின் உணர்வுகளை, அவர்கள் சுதந்திரத்தின் மேல் கொண்ட ஆவலை புரிந்து கொண்ட விதமாக இந்திரா காந்தியும், அவர் தலைமையிலான இந்திய அரசும் நடந்து கொண்டன.

ஆனால் ராஜீவ் காந்தி பிரதமராக பதவியேற்றபின், தமிழீழ மக்கள் நீண்டகாலமாக சிங்கள அரச–இராணுவ அடக்குமுறைகளால் அடக்கி ஒடுக்கப்பட்டு வந்ததின் விளைவாக தோற்றம் பெற்ற ஆயுதப் போராட்டமும், அதனை மக்கள் ஆதரவுடன் நடத்தி வந்த போராளிகளும் புறம் தள்ளப்பட்டனர்.

தமிழீழ மக்களின் இலட்சியமான தமிழீழ விடுதலைக்கு மரண அடிகொடுக்கும் விதமாக ராஜீவ் காந்தி, ஜே.ஆர். ஜெயவர்த்தனா அரசுடன் கைகோர்த்து செயற்படத் தொடங்கினார். தான் இட்டதுதான் சட்டம். இதனைத்தான் தமிழீழ மக்களும், போராளிகளும் ஏற்கவேண்டும் என்ற ரீதியில் ராஜீவ் காந்தியின் அரசு செயற்பட்டது. ராஜீவ் காந்தி அரசின் இவ்வாறான அணுகுமுறை தவறானது என பலமுறை சுட்டிக் காட்டப்பட்டபோதும் அவை கவனத்தில் கொள்ளப்படவில்லை.

ஆனால் இந்தியாவின் நலனுக்கு எதிரான அத்தனை சக்திகளுக்கும் சிறிலங்காவில் இடம்கொடுத்து, அவர்களின் உதவியுடன் இந்தியாவின் பூகோள நலனுக்கு பாதகமாகவும், தமிழீழ விடுதலைப் போராட்டத்துக்கு எதிராகவும் செயற்பட்ட சிறிலங்கா அரசுடன், ராஜீவ்காந்தி தனது அரசியல் அனுபவமின்மை காரணமாகவும் அவரின் சில ஆலோசகர்கள் கொடுத்த தவறான அறிவுரைகளுக்கு இணங்கியும் சிறிலங்கா அரசுடன் சேர்ந்து செயற்படத் தொடங்கினார். சிறிலங்காச் சிங்களவரின் உற்ற நண்பனாக இந்திய அரசும், அதன் படைகளும் மாறின.

இவ்வாறு மாறிய இந்திய அரசின் பிரதமர் ராஜீவ்காந்தி தமிழீழ மக்களின் அரசியல் தலைவிதியை தமிழீழ மக்களின் ஒப்புதலின்றி தன் கையில் எடுத்துக் கொண்டு கொழும்புக்கு போய் ஒப்பந்தம் போட்டார்.

சிங்கள அரசு கொடுத்த இராணுவ அணி வகுப்பை பார்வையிட்ட வண்ணம் வந்து கொண்டிருந்த ராஜீவ்காந்தி சிங்கள படைவீரன் ஒருவனின் துப்பாக்கி அடிக்கட்டையால் பலமாக தாக்கப்பட்டார். இத்தாக்குதல் நிகழ்ச்சி உலகம் பூராகவும் திரும்ப திரும்ப ஒலி–ஒளி பரப்பப்பட்டன. அந்தத் தாக்குதல் நிகழ்ச்சியுடனாவது இந்திய அரசு உணர்ந்திருக்க வேண்டும் – சிங்கள இனவெறி தமிழருக்கு எதிராக மட்டுமல்ல, இந்திய உபகண்டத்துக்கு எதிராகவும் வளர்ந்துள்ளது என்பதை. ஆனால் விழுந்தவன் மீசையில் மண்படவில்லை என்றவாறாக ராஜீவ்காந்தி இத்தாக்குதல் சம்பவம் பற்றி கூறியதுடன், சிங்கள சிறிலங்காவின் நலனுக்காக எந்தத் தியாகத்தைச் செய்யவும் இந்தியா தயாராக இருப்பதாகக் கூறிவந்தார்.

'இந்திய–சிறிலங்கா' ஒப்பந்தத்துக்கு இணங்க தமிழீழப் பகுதிகளுக்கு இந்தியப்படைகள் வந்தன. இந்திய அரச அதிகாரிகள் வந்தனர். தமிழீழ மக்களின் நண்பராக வராமல் சிறிலங்காவின் நலனை பாதுகாக்க வந்த இந்தியப் படையும் – இந்திய அரச அதிகாரிகளும் பூமாலை அணிவிக்கப்பட்டு, நெற்றியில் திலகமிடப்பட்டு தமிழீழ மக்களால் வரவேற்கப்பட்டனர். இதற்கு காரணம் தமிழீழ மக்கள், இந்தியாவையும் – இந்திய மக்களையும் என்றும் உற்ற நண்பர்களாகவே நேசிக்கிறார்கள் என்பதுடன் வந்தோரை வரவேற்பதுதான் தமிழரின் பண்பு என்பதையும் இந்தியாவுக்கு உணர்த்தினர்.

ஒப்பந்தத்தின்படி தமிழர் பகுதிகளில் வழமை நிலையை தோற்றுவிக்கவென வந்த இந்தியப் படைகள் தமிழீழ மக்கள் எதிர்பார்க்காத இடங்களில் எல்லாம் முகாம் இட்டனர். தமிழ் மக்களின் பாதுகாப்புக்கு குந்தகம் அற்ற பகுதிகளில் எல்லாம் இந்தியப்படை குடியேறியது.

இந்தியப்படை தமிழ் மக்களை காப்பதற்கு வரவில்லை, கருவறுப்பதற்கே வந்துள்ளது என்பதை உணர்ந்த தமிழ் மக்கள் இந்தியப் படையின் நகர்வுகளுக்கும்–செயற்பாடுகளுக்கும் எதிராக அகிம்சைப் போராட்டங்களை நடத்தினர்.

தமிழீழ விடுதலைப் புலிகள் இந்தியப்படையாலும் இந்தியாவின் கைக்கூலிகளாலும் பல இடங்களில் தாக்கப்பட்டனர். அவமானப்படுத்தப்பட்டனர். இந்தியாவுக்கு எதிராக, இந்தியப் படைகளுக்கு எதிராக தாக்குதலில் ஈடுபடமாட்டோம் எனக்கூறி விடுதலைப் புலிகள் சையினற்றை உட்கொண்டு வீரச்சாவடைந்தனர். ஆனால் இதே காலப்பகுதியில் திருகோணமலையில் சிங்களப்படைகளால் இந்தியப்படை வீரர்கள் தாக்கப்பட்டனர். இத்தாக்குதலில் சில இந்தியப்படையினர் கொல்லப்பட்டனர். இந்திய அரசோ – சிறிலங்கா அரசோ இந்தியப் படை வீரரின் இறப்புப்பற்றி எதுவும் கூறிக் கொள்ளவில்லை.

ஆனால், சிறிலங்காவின் நலனை பாதுகாக்கவென வந்த இந்தியப் படைவீரன் முதலில் சுட்டுக் கொல்லப்பட்டது சிறிலங்காப் படைகளால் தான். தமிழர்களால் அல்ல. இது இந்தியாவின் சரித்திரத்தில் குறித்துக் கொள்ளப்பட வேண்டியது.

ஒப்பந்தத்தின்படி எதனையும் நிறைவேற்றாது காலம் தாழ்த்தியும் குழப்பங்களை விளைவித்தும் வந்த ஜே.ஆர். இந்தியப் படைகளை தமிழர்களுக்கு எதிராக, குறிப்பாக தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு எதிராக திருப்பி விடுவதற்குரிய சூழலை உருவாக்குவதிலேயே தன் அமைச்சர்களையும், அதிகாரிகளையும், படையினரையும் ஊக்குவித்து வந்தார். ஆனால் இது பற்றி ராஜீவ் காந்திக்கு தெரிந்திருந்தும் விடுதலைப் புலிகளை கொச்சைப்படுத்துவதிலும் – தமிழ் மக்களை சிங்கள இனவாதப் பூதத்திடம் பிடித்துக் கொடுக்கும் செயலிலுமே ஈடுபட்டு வந்தார். இவ்விடத்தில் காணப்பட்ட இந்திய அரசின் தொலை நோக்கமற்ற பார்வையை உணர்ந்து கொண்ட ஜே.ஆர். தன்வழிக்கு இந்திய அரசையும்–இந்தியப் படைகளையும் கொண்டுவரும் செயலில் இறங்கினார்.

இதன்படி ஒப்பந்த விதிகளை மீறி விடுதலைப் புலிகளை கைதுசெய்து கொழும்பு முயன்று அவர்களை சாகடித்தார். தென் தமிழீழத்தில் இனக்கலவரங்களை தோற்றுவித்து மக்களை சாகடித்தார். இக்கலவரங்களை அடக்க திராணியற்ற இந்தியப்படையை, விடுதலைப் புலிகள் மீது தாக்குதல் தொடுக்காத இந்தியப்படையை வெளியேறுமாறு கூறப் போகிறேன் எனக்கூறி, இந்திய அரசையும்–ராஜீவ் காந்தியையும் மிரட்டினார். இந்த மிரட்டலுக்கு அஞ்சிய ராஜீவ்காந்தி மனுநீதிக்கு முரணான முறையில், இந்தியாவின் நேசசக்தியாக இருக்கும் தமிழீழ மக்கள் மீது நியாயமற்ற போருக்கு இந்தியப்படைகளை ஏவிவிட்டார்.

தமிழீழ மக்கள் சார்பில் தமிழீழ விடுதலைப் புலிகள் தற்பாதுகாப்புப் போரில் ஈடுபட்டனர். போரை நிறுத்தும்படி கோரி ராஜீவ்காந்திக்கு தமிழீழத் தேசியத் தலைவர் வே. பிரபாகரன் தொடர்ச்சியாக பல கடிதங்கள் அனுப்பினார். ஆனால் தமிழீழ மக்கள் மீது நியாயமற்ற மறையில் தாக்குதல் நடாத்த தன்படை–களை ஏவிய ராஜீவ்காந்தி போர் நிறுத்தத்துக்கு நிபந்தனைகளைப் போட்டார்.

–இரத்தினம்

**இந்தியாவின் நலனுக்கு எதிரான அத்தனை சக்திகளுக்கும் சிறிலங்காவில் இடம்கொடுத்து, அவர்களின் உதவியுடன் இந்தியாவின் பூகோள நலனுக்கு பாதகமாகவும், தமிழீழ விடுதலைப் போராட்டத்துக்கு எதிராகவும் செயற்பட்ட சிறிலங்கா அரசுடன், ராஜிவ்காந்தி தனது அரசியல் அனுபவமின்மை காரணமாகவும் அவரின் சில ஆலோசகர்கள் கொடுத்த தவறான அறிவுரைகளுக்கு இணங்கியும் சிறிலங்கா அரசுடன் சேர்ந்து செயற்படத் தொடங்கினார். சிறிலங்காச் சிங்களவரின் உற்ற நண்பனாக இந்திய அரசும், அதன் படைகளும் மாறின.**



ஜே.ஆர். இந்தியப் படைகளின் தாக்குதலின் வேகம் போதாது என்று கூறும் போதெல்லாம் தமிழ் மக்கள் நூற்றுக் கணக்கில் இந்தியப்படைகளால் கொல்லப் பட்டனர். போர் தொடர்ந்து கொண்டிருந்தபோது பிரேமதாசா சிறிலங்காவின் சனாதிபதியாக தெரிவானார்.

இந்தியப்படை வெளியேற வேண்டும். இல்லையேல் சிங்களப்படைகளை எதிர்கொள்ள வேண்டிவரும் என ராஜீவ் காந்தியையும் இந்திய அரசையும் பிரேமதாசா மிரட்டினார்.

சிறிலங்காவினதும், சிங்களவர்களதும் நலன் காக்க அனுப்பப்பட்ட இந்தியப்படை, சிங்களவர்களால் அவமானப்படுத்தப்பட்டது. அடித்து விரட்டாக் குறையாக இந்தியப்படை வீரர்கள் தமது இலக்கு எதுவென தெரியாது தமிழீழம் வந்து, சிங்களவர்களால் அலைக்கழிக்கப்பட்டு–அவமானப்படுத்தப்பட்டு–உலகரங்கில் மதிப்பிழந்து இந்தியா திரும்பினர்.

மேற்குறிப்பிட்ட நிகழ்வுகளுக்கெல்லாம் காரணமான சிறிலங்கா அரசுடனும்–அதன் படைகளுடனும், இந்திய அரசும்–அதன் படைகளும் இப்போதும் கூடிக்குலாவுகின்றனவே. இதற்கு காரணம் என்ன?

இந்திய அரசின் பூகோள –தேசிய நலன்களும், ஒருமைப்பாடும், பிராந்திய மேலாதிக்க வெறியும்தான் இதற்கு காரணமாக முன்வைக்கப்படுகிறது.

தொடர்ச்சி 19ம் பக்கம்

www.tamilarangam.net



# மலிவான பேச்சினால் தீர்வுகாணமுடியாது

பொதுமக்களின் ஒத்துழைப்புடன் இயங்கும் கொரில்ல அமைப்புக்களுடன் போராட முடியாது எனவே பிரச்சினைக்கு முதலாக நாம் தமிழ் மக்களின் மனங்களை வென்றெடுக்க வேண்டும். அமைச்சர் பீரிசின் இவ்வறிப்பானது மிகவும் சரியானதொரு கணிப்பீடாகும். அதன் பிரகாரம் இனப்பிரச்சினைக்கு இராணுவத்தீர்வு அசாத்தியமானது என்பதைத் தெளிவாகவே ஒப்புக்கொண்டுள்ளார்.

பொதுமக்களின் ஒத்துழைப்புடன் இயங்கும் கொரில்லா இயக்கங்களை வெல்லமுடியாது என்பது உலகவரலாறு தந்த பாடம்தான். அதுவும் விடுதலைப்புலிகளைப் போராடி வெல்ல முடியாது என்பது அனுபவமும் சிறிலங்கா ஆட்சியாளர்களுக்கு நிறையவே உண்டு. இந்த வகையில் அமைச்சர் பீரிஸ் இதைக்கூறினால் கூட கூறாவிட்டால்கூட மக்கள் ஆதரவுள்ள மக்களின் கோரிக்கைகள் உணர்வுகள் என்பனவற்றின் பிரதிபலிப்பாகக் கூட போராடுகின்ற புலிகள் இயக்கத்தை வெறிறிகொள்ள முடியாது என்பது உண்மையானது. இருப்பினும் அரமச்சர் பீரிஸ் இதை ஒப்புக்கொண்டது வரேவேற்கத் தக்கதாகும். இதே போன்று தமிழ் மக்களின் அபிலாசைகள் பிரச்சினைகள் என்பன தீர்க்கப்படும் போது இனப்பிரச்சினைக்கு தீர்வுகாண முடியும் என்பதுதான் உண்மையாகும்.

பிரச்சினைக்குத் தீர்வுகாணவேண்டுமானால் தமிழ் மக்களின் மனங்களை வெல்ல வேண்டும் என்பதாகும். ஆனால் இவ்விரு விடயங்களும் அமைச்சர் பீரிஸ் ஒத்துக்கொண்டிருந்தும், அவர் அங்கம் வகிக்கும் அரசாங்கங்கள் ஏற்றுக்கொண்டதாகவோ அமுல்படுத்துவதாகவோ இல்லை. முதல் இராணுவத்தீர்வு சாத்தியமாகாதென்று தெரிந்திருந்தும் அரசு போரை நடத்தியதை இங்கு குறிப்பிட முடியும். இதில் புலிகளுக்கெதிராக இராணுவ நடவடிக்கை, மக்களுக்கு அரசியல் தீர்வு என அரசு கூறும் விளக்கமானது அபத்தமானதாகும்.

ஏனெனில் யுத்தமானது மக்களை முழுமையாகப் பாதித்துள்ளது. அல்லது பாதிக்கின்றது. யுத்ததத்தின் தாக்கத்திலிருந்து வெளியேறியுள்ளவர்கள் கூட பாதிப்புறும் வேளையில், யுத்தப்பிரதேசத்தில் வாழ்பவர்கள் பாதிப்புறாமல் எவ்வாறு இருக்கமுடியும். இதற்காகவே தமிழ் மனங்களை வெல்ல வேண்டும் என்பது அமைச்சர் பீரிஸ் கூறுவதுபோன்றோ அல்லது ஜனாதிபதி பிரச்சாரப்படுத்துவது போன்றோ இலகுவானதொன்றல்ல. தற்பொழுது அரசால் முன்வைக்கப்பட்டுள்ள அரசியல் தீர்வு யோசனைகளிலும் யாழ் குடாநாட்டுப் புனரமைப்பு நடவடிக்கைகள் சாத்தியமாகிவிடக் கூடியதொரு விடயமல்ல.

## அரசியல் தீர்வு

தமிழ் மக்கள் பலமுறை ஏமாற்றப்பட்டுவிட்டார்கள் என்பது ஒருபுறமிருக்க. தமழ் மக்கள் தமது உரிமைக்காகவும், பாதுகாப்பிற்காகவும் பெருமளவு விலை கொடுத்த விட்டனர். அவர்கள் கொடுத்த விலைக்குத் தற்பொழுது சந்திரிகா அரசு முன்வைத்துள்ள தீர்வு யோசனைகளோ புனர்நிர்மான அறிவிப்புக்களோ அற்பமானவையாகும்

தமிழ் மக்களின் மனங்களை வெல்லவேண்டுமானால் அரசியல் உரிமைகள் அபிலாசைகள் என்பன நிறைவு செய்யப்படவேண்டும்.

தமிழ்மக்கள் தமது உரிமைகள், பாதுகாப்புப் பற்றிய விடயங்களிலும் தெளிவாக உள்ளனர். அவர்கள் போராட்டத்தினால் பெருவிலை கொடுத்து, யுத்தத்தினால் இடிந்ததுபோன கட்டடங்களைப் புனர்நிர்மானம் செய்வதற்கும், நிவாரணம் என்ற பெயரில் சிறுதொகையைப் பெற்றுக்கொள்வதற்குமோ அல்ல.

இதனால் புனர்வாழ்வு, புனர்நிர்மானம் என்பவை முக்கியமற்றவை என்பதல்ல. அவை முக்கியமானவைதான். ஆனால், அவை உரிமையுடனும் பாதுகாப்புடனும் கூடியவையாகவே இருக்கவேண்டும். தமிழ் மக்களின் பாதிக்கப்பட்ட அரசியல் உரிமைகளையும் இல்லாதிருந்த பாதுகாப்பையும் உறுதிப்படுத்தவே ஆயுதப்போராட்டம் உருவானது. போராட்டத்தின் விளைவுகளால் ஏற்பட்ட இனஅழிவுகள் பின்வந்தவை. ஆனாலும் இவ் அழிவுகளுக்குக் காரணம் சிறிலங்கா அரசே. ஆகையினால் அவற்றை நிறைவு செய்ய வேண்டியது அரசின் பொறுப்பேயாகும். இந்த வகையில் அமைச்சர் பீரிஸ் கூறிய இரண்டு விடயங்களும், அதாவது கொரில்லாப் படையை வெல்ல முடியாதென்பதும், தமிழ்மக்களின் மனதை வெல்ல வேண்டும் என்பதும் முற்றிலும் சரியானவைதான் .எனினும் மக்கள் ஆதரவு பெற, அல்லது மக்களின் பிரச்சனைகளில் இருந்து உருவாகிய இயக்கத்தினை, மக்கள் வேறு இயக்கம் வேறு எனப்பிரிப்பதும், தமிழ்மக்கள் பெரும் விலைகொடுத்துவிட்ட ஒன்றிற்கு மலிவான பேச்சின் மூலம் தீர்வுகாண முடியும் என முனைவது மடைத்தனமானதாகும்.

# ஜேயாரின் பாம்புக் கதை

'உமது அறையினுள் நாகபாம்பு ஒன்று நுழைந்துவிட்டது, நீர் என்ன செய்வீர்? நீர்தான் அதை அடித்துக் கொள்ளவேண்டும். அதை அறைக்குள்ளேயே விட்டு விடமுடியாது அது போன்றே விடுதலைப் புலிகளும் வன்முறையைக் கையாள்வதால் அவர்களுக்கும் இதைத்தான் செய்யவேண்டும்' இவ்வாறு முன்னாள் சனாதிபதி ஜே ஆர் ஜெயவர்த்தனா தெரிவித்துள்ளார்

கடந்த 31 ஆம் திகதி காலை சண்டே லீடர் செய்தித்தாளர் செவ்விகண்டபோது அரசியல் நிலமைகள் சுதந்திர தினம் அரசியற் கோட்பாடுகள் தொடர்பாகக் கேள்விகள் கேட்ட வேளை திடீரென பெரும் குண்டுவெடிப்புச் சத்தம் கேட்டது பேட்டியும் இடையில் தடைப்பட்டது. விசாரித்தபோது மத்திய வங்கி மீதான குண்டுத் தாக்குதல் எனத் தெரிய வந்தது. ஜெயவர்த்தனாவின் முகம் மாறி கடுமையாகி கடுப்பாகி மேற்கண்ட கதையைச் சொன்னாராம் அந்த முன்னாள் சனாதிபதி.

# இராணுவ வெற்றியும் தேர்தலும்

எம்மவர்களில் சிலர் அதுவும் புத்திஜீவிகளெனத் தங்களை எண்ணிக் கொண்டிருப்பவர்கள் சந்திரிகா நல்லவர், சிறிலங்காவின் பேரினவாதிகளைக் கட்டுப்படுத்தி அவர்களின் எதிர்ப்பில்லாமல் தமிழர்களின் உரிமைகளைத் தருவதற்கே இராணுவ வெற்றி ஒன்றை நாடுகிறார். அவ்வித வெற்றியை சிங்கள மக்களுக்குக் காட்டிவிட்டு தமிழர்களின் உரிமைகளைத் தந்து சமாதானத் தீர்வை ஏற்படுத்துவார் என்று கூறிக்கொண்டு திரிந்தார்கள். இப்போது என்ன நடந்துள்ளது? வெறுமையான வலிகாமத்தை ஆக்கிரமித்து யாழ்ப்பாணத்தை வெற்றி கொண்டுவிட்டேன் என்று சந்திரிகா வெற்றிவிழாக் கொண்டாடி வாளேந்திய சிங்கக்கொடியையும் ஏற்றி வைத்துவிட்டார்.

அப்படி இருந்தும் இப்போது அமைச்சர் ஜி.எல். பீரிசால் சந்திரிகாவின் நகல் சட்டவரைவு என்று உத்தியோகபூர்வமாக முன்வைக்கப்பட்டுள்ள தீர்வுத் திட்டம் தேர்தல் காலத்தில் வாக்குறுதி அளிக்கப்பட்ட முறையிலோ அல்லது பின்னர் சில அரசின் அல்லது இந்திய அரசின் கைப்பொம்மைகள். அவர்கள் தங்களின் எசமானர்களின் சொற்படி ஆடுவார்கள். அவர்கள் தாங்கள் தமிழ் மக்களின் பிரதிநிதிகள் என்று கூறிக்கொண்டாலும் தமிழ் மக்கள் அவர்களைத் தம் பிரதிநிதிகளாகக் கொள்வதில்லை. அவர்கள் துரோகிகள் பட்டியலில் சேர்க்கப்பட்டவர்கள். ஆகவே அவர்களைப்பற்றி அலட்டிக் கொள்ளத் தேவையில்லை.

எந்தவிதத்திலும் ஒன்றுக்கும் உதவாத தீர்வுத் திட்ட வரைவையே எதிர்த்துக் கண்டியில் சத்தியக்கிரகம் நடத்தும் ஒன்பது பிக்குகள் அமைப்புக்கள், சிறிலங்கா சிங்களவர்களுக்கே சொந்தம் என்ற அடிப்படையில் இப்போதுள்ள, சிறுபான்மையர்களைக் குறிப்பதாகக் காட்டும் கோடுகள் போட்ட சிங்கக் கொடிக்குப் பதிலாக கோடுகள் இல்லாத சிங்கக் கொடியையே ஏற்றவுள்ளன. ஆனால் சிறிலங்காவின் எந்தவித சிங்கக் கொடியையும் தமிழ் மக்கள் ஒருபோதும் ஏற்றுக் கொள்ளவில்லை என்பது வரலாறு. அது அவர்கள் மீது திணிக்கப்பட்டதாகும். இதிலிருந்து தமிழர்கள் ஒருபோதும் சிங்களவர்களுடன் அடிமைகளாகவல்லாது சமத்துவமாக ஒத்துவாழ சிங்களப் பேரினவாதம் இடமளிக்காது என்பது தெரிகிறது.

சந்திரிகா தனது அகங்காரம், பேரினவாத மனப்பாங்கு ஆகியவற்றால் தேவைக்கு அதிகமாக முன்னேறிப் பாய்ந்துவிட்டார். தமிழ்க் குழுக்களையும் உலகையும் ஏமாற்றும் வகையில் தரப்படுமென்று கூறப்பட்ட வகையிலோ ஒன்றுக்கும் உதவாத்திட்டமாக அமைந்துள்ளது. ஆகவே இராணுவ வெற்றி அதிகரிக்க, அதிகரிக்க தமிழர்களுக்கு வழங்கப்படும் தீர்வின் அதிகாரங்களும் குறைந்து கொண்டே போவதைக் காணலாம். இராணுவத்தின் வெற்றி சிங்கள அரசின் மேலாதிக்கத்தை

எந்தவிதத்திலும் ஒன்றுக்கும் உதவாத தீர்வுத் திட்ட வரைவையே எதிர்த்துக் கண்டியில் சத்தியக்கிரகம் நடத்தும் ஒன்பது பிக்குகள் அமைப்புக்கள். சிறிலங்கா சிங்களவர்களுக்கே சொந்தம் என்ற அடிப்படையில் இப்போதுள்ள, சிறுபான்மையர்களைக் குறிப்பதாகக் காட்டும் கோடுகள் போட்ட சிங்கக் கொடிக்குப் பதிலாக கோடுகள் இல்லாத சிங்கக் கொடியையே ஏற்றவுள்ளன. இதிலிருந்து தமிழர்கள் ஒருபோதும் சிங்களவர்களுடன் அடிமைகளாகவல்லாது சமத்துவமாக ஒத்துவாழ சிங்களப் பேரினவாதம் இடமளிக்காது என்பது தெளிவாகிறது. ஆனால் சிறிலங்காவின் எந்தவித சிங்கக் கொடியையும் தமிழ் மக்கள் ஒருபோதும் ஏற்றுக் கொள்ள வில்லை என்பது வரலாறு. அது அவர்கள் மீது திணிக்கப்பட்டதாகும்.

வலுவடையச் செய்கிறது. அல்லாது விட்டால் ஜீ.எல். பீரிஸ் வடக்கு-கிழக்கு மாகாண இணைப்பு என்ற பேச்சுக்கே அரசியல் தீர்வில் இடமில்லை என்று ஆணித்தரமாகக் கூறியிருக்க மாட்டார்.

இதேவேளை அதிகாரப்பரவலாக்கத்தின் சட்டவரைவு குறித்து அனைத்துக் கட்சிகளுடனும் அரசு கலந்துரையாடி அவற்றின் கருத்துக்களை நாடாளு மன்றத்தில் தெரிவுக்குழு முன் சட்டவரைவு வரும்போது இணக்கம் ஏற்படக்கூடியதான ஒரு சூழ்நிலையை அரசு உருவாக்குமென்றும் பீரிஸ் கூறியுள்ளார். அவ்வித மாயின் பலம் வாய்ந்த ஒன்பது சிங்கள பிக்குகள் அமைப்பினர், கண்டியில் இனப் பிரச்சினைத் தீர்வுக்கு சிறிலங்கா அரசு சமர்ப்பித்துள்ள அரசியல் யோசனைகளுக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில் செய்யப்பட்ட சத்தியாகிரகத்தின் தாக்கத்துக்கும் சிங்களப் பேரினவாதிகளின் ஒட்டுமொத்தமான எதிர்ப்பின் மத்தியிலும் சிங்களக் கட்சிகள் ஒரு இணக்கப்பாட்டுக்கு வருவார்கள் என்று எதிர்பார்ப்பது பகற் கனவாகவே முடியும். தமிழ்க் கட்சிகளைப் பொறுத்தளவில் அவர்கள் தாங்களாக சுயமாகச் சிந்திக்க மாட்டாதவர்கள். சிறிலங்கா ஐக்கிய தேசியக் கட்சி மிகவும் மெதுவாகத் தன் காய்களை நகர்த்துகிறது. மேலும் இப்போது முன்வைக்கப்பட்டுள்ள தீர்வுத்திட்ட வரைவைப் பொறுப்புணர்ச்சியுடன் ஆராய்வதாக அக்கட்சி கூறுகிறது. ஐ.தே.கவுக்கு நாட்டின் யதார்த்த நிலை விளங்குகிறது.

ஆட்சியிலிருக்கும்போது அதிகாரம் கண்ணை மறைக்கும். இப்போது அதிகாரமும், ஆட்சியும் இல்லாத நிலையில் அது பின்பும் அதிகாரத்தையும் ஆட்சியையுங் கைப்பற்றத் தேவையான வழிவகைகளை ஆராய்வது இயல்புதான். இன்றைய நிலையில் ஐ.தே.க வுக்கு தேர்தல் நடத்தப்படுவது இலாபத்தைக் கொடுக்கும். சந்திரிகா என்னதான் இராணுவ வெற்றி பற்றிப் புளுகினாலும் சிங்கள மக்களுக்குத் தேர்தல் காலங்களில் கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்றாமையும் போர்ச் செலவின் மூலம் மக்களின் மீது பொருண்மியச் சுமை ஏற்றப்பட்டுள்ளமையும் அவரது அரசுக்கு எதிராகச் சிங்கள மக்களைத் திருப்பியுள்ளது. இது ஐ.தே.கவுக்கு தேர்தல் இலாபத்தைக் கொடுக்கும். தமிழர்களைப் பொறுத்தளவில் இரு கட்சிகளும் ஒன்றுதான்.

www.tamilarangam.net



# தளபதிக்கான போரும் தடுமாறும் ஜனாதிபதியும்

இராணுவத் தலைமைப் பீடத்தில் தற்போது ஜெனரல்களிடையேயான மோதல்கள் கூர்மையடைந்து வருகின்றது. இம்மோதலின் மத்தியிலும் இராணுவத் தலைமை மாறாது அப்படியே உள்ளது. இராணுவத் தளபதி பதவியை அடையத் திட்டமிட்டுச் செயற்பட்டு வந்த பலருக்கு இராணுவத் தலைமை மாற்றப்படாமை பெரிய ஏமாற்றத்தைத் தந்துள்ளது. இந்த நிலையில் இத் தலைமைப் போட்டி சிறிலங்கா இராணுவத்தை எதிர்காலத்தில் எவ்வளவு தூரம் பாதிக்கும் என்பது பாதுகாப்புப் படையின் தகுதி நிலை அதிகாரிகளுக்கும் மற்றும் சிறிலங்கா அரசிற்கும் பெரிய தலையிடியாக அமைந்துள்ளது.

தற்போது இராணுவத் தலைமையதிகாரியாக இருக்கும் மேஜர் ஜெனரல் ஜெரிடிசில்வா இவ்வருடம் மே மாதம் ஓய்வுபெற இருந்தபோதும் ஜனாதிபதி சந்திரிகா செய்த சிபார்சையடுத்து இவருக்கு மேலும் ஆறுமாதங்களுக்கு– அதாவது நவம்பர் மாதம்வரை சேவை இந்த நீடிப்பு வழங்கப்பட்டது. இந்தச் சேவை நீடிப்பு, பாதுகாப்பு

**அனுரத்த ரத்வத்தையின் பதவி உயர்வு பற்றி அவர் திருப்திப்பட்ட போதும், வடக்கு கிழக்கு மாகாணங்களின் இராணுவ நடவடிக்கைக்குப் பொறுப்பதிகாரியாக இருந்து "ரிவிரச" நடவடிக்கையில் முக்கிய பங்கேற்ற மேஜர் ஜெனரல் றொகான் தளுவத்தைக்கு இராணுவத்தளபதி பதவி எட்டாக் கனியாகப் போனமையானது, அவருக்குப் பெரிய தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது**

கவுன்சிலுக்கு அறிவிக்கப்படாமல் ஜனாதிபதியினால் வெளியிடப்பட்டது. இதனால் பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் ஜெனரல் அனுரத்த ரத்வத்தை மற்றும் மேஜர் ஜெனரல் றொகான் தளுவத்த உட்பட பலருக்கு மனக் கசப்பு ஏற்பட்டுள்ளது.

இம் மனக்கசப்பைச் சீர் செய்வதற்குப் பல வழிகளிலும் ஜனாதிபதியும் அவருக்கு மிக நெருக்கமான சிலரும் முற்பட்டனர். ஆனாலும் அது சீர் செய்யப்பட்டதாகத் தெரியவில்லை. இது ஓரளவிற்காவது தீர்க்கப்பட வேண்டும் என்பது சந்திரிகாவைப் பொறுத்து முக்கியமான விடயம். ஆனால் இராணுவத் தளபதி பதவி நீடிப்பு வழங்கப்பட வேண்டும் என்ற விடயம் ஜனாதிபதி சந்திரிகாவினால் தவிர்க்கப்பட முடியாத ஒரு விடயமாகவும் இருந்தது. இந்த நேரத்தில் சிறிலங்காவின் சுதந்திர தினத்தில் வழங்கப்படும் கௌரவப் பதவிகள் மூலம் இப்பிரச்சினையைத் தீர்க்க முயற்சி எடுக்கப்பட்டது.

யாழ்ப்பாணத்தில் வலிகாமம் பகுதியை கைப்பற்றுவதற்கான அரசியற் தலைமையை இராணுவத்தினருக்கு வழங்கினார் என்ற காரணத்தை மையமாகக் கொண்டு பிரதிப்பாதுகாப்பு அமைச்சரான கேணல் அனுரத்த ரத்வத்தைக்கு ஜெனரல் பதவி வழங்கப்பட்டது. இதன் மூலம் நீண்டகாலம் இவரிடம் இருந்த உளரீதியான தாழ்வுச் சிக்கல் கூடத் தீர்த்துவைக்கப்பட்டது எனலாம்.

அனுரத்த ரத்வத்தையின் பதவி உயர்வு பற்றி அவர் திருப்திப்பட்ட போதும் வடக்கு கிழக்கு மாகாணங்களின் இராணுவ நடவடிக்கைக்குப் பொறுப்பதிகாரியாக இருந்து ரிவிரச நடவடிக்கையில் முக்கிய பங்கேற்ற மேஜர் ஜெனரல் றொகான் தளுவத்தைக்கு இராணுவத்தளபதி பதவி எட்டாக் கனியாகப் போனமையானது அவருக்குப் பெரிய தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது.

இதன் மூலம் பல பிரச்சினைகளுக்கு சிறிலங்கா படைத்தலைமை முகம் கொடுக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. மேஜர் ஜெனரல் றொகான் தளுவத்தையின் திறமையைச் சோதிக்க கிழக்கு மாகாணத்தில் பல இராணுவ நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. இந்த நடவடிக்கைகள்கூட நினைத்ததைப் போன்று வெற்றியை ஈட்ட முடியவில்லை. இவ்வாறான சூழ்நிலையில் ஜனாதிபதியினால் இராணுவத் தளபதிக்கு வழங்கிய பதவி நீடிப்பை மீள பெற்றுக்கொள்ள வேண்டிய தேவை இல்லாத நிலை ஏற்பட்டுள்ளது எனலாம்.

பொதுஜன ஐக்கிய முன்னணி அரசாங்கம் பதவி ஏற்ற காலத்தில் ஐக்கிய தேசியக் கட்சியின் சில தலைவர்களினால் திட்டமிட்டதாகக் கூறப்படும் இராணுவச் சதி நடவடிக்கையை மிகவும் வெற்றிகரமாக முடித்ததன் மூலம் பொ.ஐ.மு. ஆட்சியை ஊன்றிக் கொள்வதற்கு வழி ஏற்படுத்தியவர்களில் முக்கியமானவர் இராணுவத் தளபதி ஜெரி டி.சில்வா. அது மட்டுமன்றி அரசியல் ரீதியாகப் பலவீனமடைந்து ஆட்சிசெய்து கொண்டிருக்கும் வேளையில்–பொருட்களின் விலையேற்றம், பணவீக்கம் என்பவற்றால் மக்கள் மத்தியில் ஏற்பட்டுவந்த கசப்புணர்வு நிலவி வந்த நிலையில் இராணுவ நடவடிக்கைகள் தோல்விக்குமேல் தோல்வியைச் சந்தித்துக்கொண்டு இருந்த சமயத்தில் இவற்றைச் சீர் செய்து சிங்கள மக்கள் மத்தியில் பொதுஜனஐக்கிய முன்னணி அரசாங்கம் தன்னை நிலை நிறுத்திக் கொள்வதற்கு "ரிவிசர" என்ற இராணுவ நடவடிக்கை மூலம் வலிகாமத்தைப் பெற்றுத்தந்தவர் ஜெரி டி.சில்வா என்ற கருத்தும் அரசாங்கத்தின் உயர்மட்டத்திலுள்ளது. அத்துடன் இவர் இராணுவத் தளபதி மட்டுமல்லாது பொதுஜன ஐக்கிய முன்னணியின் ஒரு முக்கியஸ்தவராகவும் இருக்கின்றார்.

இந்த நிலையில் இவர் வெளியேற்றப்பட்டால் எதிர்வரும் காலங்களில் சந்திரிகா தனது அரசியல் நோக்கத்தினையடைவற்கு இராணுவ நடவடிக்கைகளை மேற்கொள்ளும் அளவிற்கு சொல்வதைக் கேட்டு அதன்படி செய்யக்கூடிய இராணுவத் தளபதி இன்னொருவர் கிடைப்பாரோ என்பது பெரிய கேள்விக்குறியாக உள்ளது.

**நிமலராஜன்.**

ஏனெனில் உள்ளூராட்சித் தேர்தல்களும் பல மாகாணசபைத் தேர்தல்களும் இவ் வருடத்தில் நவம்பர் மாததத்திற்கு முன்னர் நடத்தவேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது.

இதே வேளை விரும்பியோ விரும்பாமலோ ஓர் சர்வஜன வாக்கெடுப்பு நடைபெறவேண்டிய ஆரம்பநிலை சிறிலங்காவுக்கு இருக்கின்றது. இவற்றையெல்லாம் ஜெரி டி.சில்வா இராணுவத் தளபதியாக இருக்கும்போதே மேற்கொள்ளவேண்டும் என்ற ரீதியில் இப்பதவி நீடிப்பு வழங்கப்பட்டது என எதிர்கட்சிகள் தெரிவிக்கின்றன. இதே வேளை ஜெரி டி. சில்வா மே மாதத்துடன் ஓய்வுபெற்றால் அடுத்த இராணுவதளபதி பதவியை மேஜர் ஜெனரல் றொகான் தளுவத்தைக்கு வழங்கவேண்டிவரும். அவ்வாறு வழங்கப்பட்டால் அடுத்த இரண்டு வருடங்களுக்கு இராணுவத் தளபதியாக இருக்க றொகான் தளுவத்தைக்கு வாய்ப்பு உண்டு. ஆனால் இவர் முன்னாள் இராணுவத் தளபதியான சிசில் வைத்திய ரட்னாவுடன் நெருக்கமாகச் செயற்பட்டவர். ஆகவே மீண்டும் சிசில் வைத்தியரட்னாவின் அணியினர் இராணுவத்தில் ஒன்று சேருவார்கள். இதன் மூலம் மீண்டும் சிசில் வைத்தியரட்னாவின் கை ஓங்கும் வாய்ப்பு உண்டு. எனவே ஆட்சிக்கு ஆபத்து வரலாம். அவ்வாறு இல்லாவிடினும் இவர் பிரதியமைச்சர் ஜெனரல் அனுரத்த ரத்வத்தையுடன் மிக நெருக்கமாகச் செயல்படுபவர். ஆகவே இராணுவத்தில் ரத்வத்தையின் கையோங்கும் நிலை ஏற்படும். இதனால் இவர்களின் விருப்பப்படியே இராணுவம் செயல்படும். இந்நிலையில் றொகான் தளுவத்தையை பாராட்ட மட்டும் முடியுமே தவிர இவருக்கு உயர் பதவி வழங்க முடியாது என்ற நிலை ஜனாதிபதிக்கு ஏற்பட்டுள்ளது. இராணுவத்தளபதி பதவி வழங்கப்பட்டால் தான் கையறு நிலையில் இருக்க வேண்டும் என்ற பீதி ஜனாதிபதி சந்திரிகாவை உலுப்புவதனால் இதிலிருந்து மீளுவதற்கு ஜெரிடி.சில்வாவிற்கு பதவி நீடிப்புவழங்கி அதன்மூலம் இச்சிக்கலைத் தீர்த்துவிடலாம் எனவும் இதனால் சர்ச்சைக்குரியவர், ஆனால் திறமைசாலி எனக் கருதப்படும் றொகான் தளுவத்தையை பாராட்டுடன் மட்டும் பதவியில் இருந்து ஓய்வுபெறச் செய்துவிடலாம் என ஜனாதிபதி சந்திரிகா திட்டமிட்டுள்ளார். அத்துடன் இவர் ஓய்வுபெற்றால் அசோக ஜெவர்த்தனா அல்லது மேஜர் ஜெனரல் நமுனிக்கு இராணுவத் தளபதி பதவியை வழங்குவதன்மூலம் சகலசிக்கல்களிலிருந்தும் தப்பிக் கொள்ளலாம் என சந்திரிகா கருதுகிறார். இவர்களில் அசோக ஜெவர்த்தனா இந்திய இராணுவத்துடன் மிக நெருக்கமான பதவி ரீதியிலும், தனிப்பட்ட ரீதியிலும் உறவுடையவர் என்பது குறிப்பிடத்தக்கது.



ஆகவே ஜெரி டி.சில்வாவிற்குப் பின் இராணுவத் தளபதி ஆகும் வாய்ப்பு இந்தியாவுடன் உறவை வைத்திருக்கும் நபருக்கு வழங்குவதன் மூலம் பல பிரச்சினைகளைத் தீர்க்க முடியும் என்றும் இதன் மூலம் பிராந்திய ஒத்துழைப்பு என்ற பதம் இராணுவ ரீதியில் நன்மையைப் பெற்றுத்தரும் என்றும் சிறிலங்கா அரசாங்கம் கருதுகின்றது. இவ்வகையில் பெரும்பாலும் அசோக ஜெவர்த்தனாவிற்கே அடுத்த பதவி கிடைக்கும் என பலரும் எதிர்பார்க்கின்றனர்.

**ஜெரி டி.சில்வாவிற்குப் பின் இராணுவத் தளபதி ஆகும் வாய்ப்பு இந்தியாவுடன் உறவை வைத்திருக்கும் நபருக்கு வழங்குவதன் மூலம் பல பிரச்சினைகளைத் திர்க்க முடியும் என்றும் இதன் மூலம் பிராந்திய ஒத்துழைப்பு என்ற பதம் இராணுவ ரீதியில் நன்மையைப் பெற்றுத்தரும் என்றும் சிறிலங்கா அர்சாங்கம் கருதுகின்றது. இவ்வகையில் பெரும்பாலும் அசோக ஜெவர்த்தனாவிற்கே அடுத்த பதவி கிடைக்கும் என பலரும் எதிர்பார்க்கின்றனர்.**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# சேர். பொன் அருணாசலத்தை ஏமாற்றியதும் ஒரு பீரிஸ்

# நீலன் திருச்செல்வத்தை ஏமாற்றுபவரும் ஒரு பீரிஸ்

**அன்று தமது மூத்த சகோதரர் பொன். இராமநாதனின் போக்கைப் பின்பற்றாது தீவு அடங்கலுக்குமே ஆள்புல பிரதிநிதித்துவத்தை உபதேசித்து அதற்காக வக்காலத்தும் வாங்கியிருந்த பொன். அருணாசலத்தின் முடிவு அவருக்கும் தமிழினத்துக்கும் ஈடுசெய்ய முடியாத பெரும் இழப்பை ஏற்படுத்தியிருந்தது. இவற்றைப் போன்ற விடயங்களை இன்றும் புத்திசிவிகள் என்று தம்மைத் தாமே வர்ணித்துக் கொள்ளும் நீலன் திருச்செல்வம் போன்றோர் உணரத் தலைப்படாவிடின் அதனால் அவர்களுக்கு மட்டுமன்றி முழுத் தமிழினத்துக்குமே பெரும் கேடு செய்தவர்களாவர்.**

பிரித்தானிய காலனித்துவ ஆட்சியாளரிடம் இருந்து இலங்கைத் தீவுக்குச் சுதந்திரம் பெறுவதற்குப் போராடும் பொருட்டாக இத்தீவு அடங்கலும் இருந்த அத்தனை அமைப்புக்களையும் இணைத்து ஒரே அமைப்பின் கீழ் கொண்டு வந்து ஒன்றுபட்ட ஒரு புதிய தேசிய இனமாக அதன் மக்களை இணைத்தல் வேண்டும் என்று கருதிய அக்காலத்துப் புத்திஜீவிகளால் உருவாக்கப்பட்டதே இலங்கைத் தேசிய காங்கிரஸ் என்ற அமைப்பாகும்.

## தேசிய காங்கிரஸ்

இலங்கைத் தேசிய காங்கிரஸ் அமைப்பை நிறுவும் பொருட்டாக முன்வைக்கப்பட்ட அதன் அங்குரார்ப்பண வரைவுத் தீர்மானம் என்னவெனில் ஆள்புல பிரதிநிதித்துவத்தை வலியுறுத்துவதாக இருந்தது. தேசாதிபதி மனிங் காலத்தில் இருந்து சமத்துவ அடிப்படையில் சமூகத்துக்கு ஒன்றாகப் பிரதிநிதித்துவம் அங்கீகரிக்கப்பட்டு இருந்தமையால், பல இனத்தினரும், பல மதத்தினரும் வதியும் ஒரு தீவில் ஆட்களின் தலைகளை எண்ணும் சனநாயகம் பொருந்தி வராது என்பதைக் கருத்திற் கொண்டு மேற்படி அங்குரார்ப்பண வரைவுத் தீர்மானத்துக்கு யாழ்ப்பாண மகாணசபையின் பெருந் தலைவர்களான சபாபதியும், கனகசபையும் தமது கடும் எதிர்ப்பை வெளிப்படுத்திமிருந்தார்கள்.

## இராமநாதன் வரலாறு

அந்தக் காலகட்டத்தில் இலங்கைத் தேசிய காங்கிரஸ் அமைப்பினைத் தோற்றுவிக்கும் அதன் அங்குரார்ப்பண வரைவுத் தீர்மானம் வலியுறுத்திய ஆள்புலப் பிரதி நிதித்துவத்தை **(For territorial Representation)** எதிர்த்த யாழ்ப்பாண மகாசபையின் தலைவர்களாகிய சபாபதி மற்றும் கனகசபை ஆகிய இருவரின் எதிர்ப்பைக் கைவிடச் செய்யும் பொருட்டு சிங்களத் தலைவர்கள் சார்பில் ஜேம்ஸ் பீரிசும், சமரவீர என்பவரும் கையொப்பமிட்டு ஒரு கடிதத்தைப் புத்திஜீவியான பொன்னம்பலம் அருணாசலத்துக்கு எழுதிமிருந்தார்கள். முன்னாள் சாவகச்சேரி இந்துக் கல்லூரி அதிபர் மறைந்த வைத்திலிங்கம் எழுதி வெளியிட்டிருக்கும் இரண்டு தொகுதிகளைக் கொண்ட பொன்னம்பலம் இராமநா தனின் வாழ்க்கை வரலாற்று நூலின் இரண்டாம் தொகுதியில் காணப்படும் பொன்னம்பலம் அருணாசலம் எனும் அத்தியா யத்தில் சம்பந்தப்பட்ட கடிதம் உள்ளது.

## பீரிசின் கடிதம்

புத்திஜீவி பொன். அருணாசலத்துக்குத் தாம் கையெழுத்திட்டு எழுதிமிருந்த மேற்படிக் கடிதத்தில் பீரிசும், சமரவீரவும் சட்டநிர்ணய சபையில் தமிழ் மக்களின் பிரதி நிதித்துவம் அதிகரிக்கப்படுவதற்குத் தாம் எந்த வகைமிலும் மாறானவர்கள் அல்லவென்றும், உண்மையில் கொழும்புத் தமிழர்களுக்கு ஒரு பிரதிநிதி வழங்கப்படுவதற்கும், முஸ்லீம் மக்களுக்கும் பிரதிநிதித்துவம் வழங்கப்படுவதற்கு முன், ஏன் இந்திய வம்சாவழியினர் தாமாக வற்புறுத்தினால் அவர்களுக்கும் பிரதிநிதித்துவம் கிடைப்பதைத் தாம் ஆதரிப்போம் என்றும் எழுத்தில் உறுதியளித்து, யாழ்ப்பாண மகாசபையின் தலைவர்கள் சபாபதியும், கனகசபையும் ஆள்புல பிரதிநிதித்துவத்தைத் **(Territorial Representative)** தீவடங்கலுக்கும் வலியுறுத்தும் இலங்கைத் தேசிய காங்கிரஸ் அமைப்பின் அங்குரார்ப்பண வரைவுத் தீர்மானத்துக்கு திருத்தம் எதனையும் கொண்டு வராது அதே உருவில் அங்குரார்ப்பணக் கூட்டத்தில் ஏகமனதாக நிறைவேற்றுவதற்கு ஒத்துழைக்கச் செய்யும்படியும் கேட்டிருந்தார்கள். அதன்படி பொன். அருணாசலத்தின் தலையீட்டால் யாழ்ப்பாண மகாசபையின் தலைவர்களாகிய சபாபதி மற்றும் கனகசபையின் ஒத்துழைப்புடன் காரியத்தைத் தம் விருப்பப்படி நிறைவேற்றிக் கொண்ட சிங்களத் தலைவர்கள் வெறும்

> பொதுத் தேர்தலில் வேட்பாளராக நிற்கும்படி கேட்கப் பட்ட போது, பளையில் அப்போது தான் தென்னம் பிள்ளை நாட்டியிருக்கிறேன். அவை காய்த்துப் பயன்தரும் வரை பொறுத்திருக்கும்படி கூறினார் முன்னாள் யாழ். மாநகர முதல்வர் ச.அ. தர்மலிங்கம்

ஒப்புக்காக புத்திஜீவி பொன். அருணாசலத்தையே இலங்கைத் தேசிய காங்கிரஸ் அமைப்பின் தலைவராகவும் அமர்த்திக் கொண்டனர்.

## தமிழர் லீக்

ஆமினும் தேர்தல் வந்தபோது பொன். அருணாசலத்துக்கு கொழும்பை விட்டு யாழ்ப்பாணத்தின் வேட்பாளராக முன்வரும் வதிவிடத் தராதரம் இருக்காததை நன்கு தெரிந்து கொண்டிருக்கும் ஜேம்ஸ் பீரிஸ், தனக்கு வேறு தொகுதிக்கு வேட்பு மனுத் தாக்கல் செய்யும் வாய்ப்பு இருந்தும் திட்டமிட்டு அருணாசலத்துக்கு மாறாகத் தன் வேட்புமனுவை கொழும்புத் தொகுதிக்கே சமர்ப்பித்தார். அப்போதுதான் அருணாசலம் தான் ஏமாற்றப்பட்டுவிட்டேன் என்று விழித்துக் கொண்டு இலங்கைத் தேசியத் தலைமைப் பதவியையும், உறுப்புரிமையையும் உதறி எறிந்துவிட்டு தமிழ்த் தேசியத்தையும் தமிழீழத்தையும் மீள்வித்து புதுப்பிப்பதற்காக உறுதி எடுத்துக் கொண்டு தமிழர் லீக் என்ற அமைப்பை ஆரம்பித்தார்.

## தலை எண்ணுதல்

விவேகியான இவரது மூத்த சகோதரர் பொன். இராமநாதனோ பல்லின மக்கள் வதியும் இத்தீவில் மனிதர்களது தலைகளை எண்ணிக் கணக்கீடு செய்யும் முறையை அதாவது ஆள் புல பிரதிநிதித்துவத்தை ஆரம்பம் முதலே எதிர்த்திருந்தார். சமூகங்களுக்கிடையே சமத்துவமான பிரதி நிதித்துவ அந்தஸ்து கைவிடப்பட்டு ஆள்புல பிரதிநிதித்துவம் எப்போது முதல் திணிக்கப்பட்டதோ அது முதற்கொண்டே இத்தீவில் இனப்பிரச்சினையும் தலையெடுக்கலாயிற்று.

## புத்திசிவிகள்

அன்று தமது மூத்த சகோதரர் பொன். இராமநாதனின் போக்கைப் பின்பற்றாது தீவு அடங்கலுக்குமே ஆள்புல பிரதி நிதித்துவத்தை உபதேசித்து அதற்காக வக்காலத்தும் வாங்கியிருந்த பொன். அருணாசலத்தின் முடிவு அவருக்கும் தமிழினத்துக்கும் ஈடுசெய்ய முடியாத பெரும் இழப்பை ஏற்படுத்திமிருந்தது. இவற்றைப் போன்ற விடயங்களை இன்றும் புத்திஜீவிகள் என்றும் தம்மைத் தாமே வர்ணித்துக் கொள்ளும் நீலன் திருச்செல்வம் போன்றோர் உணரத் தலைப்படாவிடில் அதனால் அவர்களுக்கு மட்டுமன்றி முழுத் தமிழினத்துக்குமே பெரும் கேடு செய்தவர்களாவர்.

## தமிழீழம்

இதற்கு ஒரே ஒரு எடுத்துக்காட்டே போதுமானது. 1977ஆம் ஆண்டு பாராளுமன்றப் பொதுத் தேர்தலை, தமிழீழத்தை மீள்வித்துப் புதுப்பிப்பதற்கான ஆணையைத் தமிழீழ வாக்களரிடம் பெறும் பொருட்டு அதை ஒரு சர்வசன வாக்கெடுப்பாக எதிர்கொண்ட கூட்டணியினர் மேற்படி ஆணையைத் தமிழீழ மக்களிடம் அபரிதமாகப் பெற்றுக்கொண்ட பின்னர் ஜே.ஆர். ஜெயவர்த்தனாவின் மாயவலையில் சிக்குண்டு மாவட்ட அபிவிருத்திச் சபைகளுக்காகச் சோரம் போனமையைக் குறிப்பிடலாம்.

## ஏ.ஜே வில்சன்

மேற்படி சபைகளைப் பரிந்துரைத்த தெரிவிக்குழுவின் தலைவராக விளங்கிய கனேடிய புறூன்விக் பல்கலைக்கழகப் பேராசிரியர் காலநிதி ஏ.ஜே. வில்சன் அந்த ஏமாற்றுக்குப் பின் சிங்களத் தலைவர்களின் வாய்மையை நம்பத் தயாராக இல்லையென்று கூறி அது போன்ற நடவடிக்கைகளில் இருந்தே முற்றாக ஒதுங்கிக் கொண்டிருப்பதுடன் **'The Break upof SriLanka'** சிறீலங்காவின் உடைவு எனும் தலைப்பில் ஆங்கிலத்தில் ஒரு நூலை எழுதி வெளியிட்டுள்ளார்.

## சொற் சிலம்பம்

மாவட்ட அபிவிருத்திச் சபைகளை ஆட்சேபித்துப் பிரச்சாரம் செய்தவர்களைக் கண்டித்துச் சொற்சிலம்பாடிய கூட்டணித் தலைவர்கள், 'சுதந்திரன்' ஆசிரியர் கோவை மகேசனுக்கு எதுகை மோனை வரும், ஈழவேந்தனுக்கு புள்ளி விபரம் புரியும். 1960 பொதுத் தேர்தலில் வேட்பாளராக நிற்கும்படி கேட்கப்பட்டபோது, பளையில் அப்போது தான் தென்னம்பிள்ளை நாட்டியிருக்கிறேன். அவை காய்த்துப் பயன்தரும் வரை பொறுத்திருக்கும்படி கூறிய முன்னாள் யாழ். மாநகர முதல்வர் ச.அ. தர்மலிங்கம் 1958

> ஆள்புல பிரதி நிதித்துவம் எப்போது முதல் திணிக்கப்பட்டதோ அது முதற்கொண்டே இத்தீவில் இனப் பிரச்சினையும் தலையெடுக்கலாயிற்று

இனக்கலவரத்தின்போதே கட்சி நடவடிக்கைகளில் தீவிர

தொடர்ச்சி 19 ஆம் பக்கம் பார்க்க

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# பார்க்கும் இடங்களெல்லாம் நந்தலாலா - புலிகளின் கரியநிறம் தோன்றுதையே நந்தலாலா

**கொழும்பில் விடுதலைப் புலிகள் இருக்கிறார்களோ இல்லையோ, வந்தார்களோ இல்லையோ சிங்கள-பௌத்த இனவெறி பிடித்த ஆட்சியாளர்களது கண்களுக்கு, சிறிலங்கா பாதுகாப்புப் படையினரின் கண்களுக்கு யாரைப் பார்த்தாலும் விடுதலைப் புலிகளாகத் தெரிகிறார்கள்**



பார்க்கும் இடங்களெல்லாம்
நந்தலாலா - புலிகளின்
கருமை நிறந்தோன்றுதையே நந்தலாலா!
காக்கைச் சிறகினிலே
நந்தலாலா - நின்றன்
கரிய நிறந் தோன்றுதையே, நந்தலாலா
பாரக்கும் மரங்களெல்லாம்
நந்தலாலா - நின்றன்
பச்சை நிறந் தோன்றுதையே நந்தலாலா!

இந்தப் பாடலைப் பாடிய மகாகவியின் பெயரை குறிப்பிட வேண்டிய அவசியமில்லை. சுப்பிரமணிய பாரதியாரைவிட வேறு யாராலும் இப்படி இனிமையான, எளிமையான அதேநேரம் ஆழ்ந்த கருத்துள்ள பாடல்களைப் பாட முடியாது.

பாரதியார் பரமஞானி. வேதங்களின் உட்பொருளை விளங்கிய வேதாந்தி. வேதாந்தி எல்லா உயிர்களிடத்தில் மட்டும் அல்லாமல் சடப்பொருட்களிடத்தும் கடவுளை காண்கிறான். இதனாற்றான்—

காக்கை குருவி எங்கள் சாதி – நீர்



கடலும் மலையும் எங்கள் கூட்டம்

நோக்குந் திசையெல்லாம் நாமன்றி வேறில்லை

நோக்க நோக்கக் களியாட்டம்

என்று பாரதியாரால் கவிதை பாட முடிந்தது.

வேதாந்த விசாரணைக்கும் அரசியலுக்கும் என்ன சம்பந்தம் என்று கேட்கிறீர்களா? சம்பந்தம் நிறைய இருக்கிறது.

**''பயங்கரவாதத்தை இராணுவ பலத்தால் வெற்றி கொள்ளலாம். ஆனால் இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வுதான் தகுந்த வழி"" என்று சனாதிபதி சந்திரிகா அண்மையில் பாராளுமன்றத்தில் உரையாற்றும்போது குறிப்பிட்டிருந்தார்.**

**அதாவது சந்திரிகாவும், ஜே.ஆர்., பிரேமதாசா போல் தமிழ் மக்களின் தேசிய விடுதலைப் போராட்டத்தை 'பயங்கரவாதம்" என முத்திரை குத்தி அதனை இழிவுபடுத்துகிறார்.**

**ஜே.ஆர், பிரேமதாசா இவர்களைப் பின்பற்றி சந்திரிகா தமிழ் மக்களது தாயகக் கோட்பாட்டை மறுக்கிறார்.**

**ஜே.ஆர்., பிரேமதாசா இவர்களைப் போலவே போரின் மத்தியிலும் சிங்களக் குடியேற்றம் தங்கு தடையின்றி நடை-பெற சந்திரிகா அரச இயந்திரத்தை முடுக்கி வருகிறார்.**

தமிழர்களின் கலை, பண்பாட்டின் உறைவிடமான யாழ்ப்பாணத்தை, அவர்கள் மொழியில் 'யாப்பபட்டுண'வை சிங்கள இராணுவம், கைப்பற்றி சிங்கக் கொடியை ஏற்றியதை மாட்சிமை தங்கிய மகாராணியார் சந்திரிகா தலைநகரில் விழாவெடுத்து தடல்புடலாகக் கொண்டாடி மகிழ்ந்தார்.

மகாராணியார் தனது மதிமந்திரி அனுருத்த ரத்வத்தை யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றி அங்கு சிங்களவரின் சிங்கக் கொடியை ஏற்றிவிட்ட செய்தியையும் விடுதலைப் புலிகளை அங்கிருந்து விரட்டி விட்ட வீர தீரபிரதாபங்களையும் ஓலையில் எழுதி, அதனைப் பேழையில் வைத்துக் கொடுத்ததை வாங்கிக் கொண்டார்.

சிங்களக் குடிமக்களும் பட்டாசு கட்டுக் கட்டாக வெடித்து 'யாப்பபட்டின' வைப் பிடித்த வெற்றியை பெரிய தாரை தப்பட்டையோடு கொண்டாடி மகிழ்ந்தார்கள்.

விடுதலைப் புலிகளுக்கு எதிரான போரில் சிங்கள இராணுவத்துக்கு மாபெரும் வெற்றி, விடுதலைப் புலிகளுக்கு படுதோல்வி என்ற பிரசாரத்தை அரச கட்டுப்பாட்டிலுள்ள மக்கள் தொடர்பு ஊடகங்களும், சிங்கள—பௌத்தர்களால் நடாத்தப்படும் தமிழ் விரோத ஏடுகள் சிலவும் கட்டவிழ்த்து விட்டன.



ஆனால் கொழும்பில் கடந்த தை மாதக் கடைசி நாளன்று வெடித்த குண்டு மத்திய வங்கியை மட்டும் தரைமட்டமாக்கவில்லை. சிலிங்கோவை மட்டும் சின்னாபின்னமாக்கவில்லை. 'இன்ரர் கொன்ரினெண்ரல்' உல்லாச விடுதியை மட்டும் ஆட்டங் காண வைக்கவில்லை. சிறிலங்கா அரசின் பிரசார இயந்திரத்தையும் தகர்த்துத் தள்ளியது.

**-நக்கீரன்-**

'யாப்பபட்டுன' வை பிடித்த மகிழ்ச்சி ஆரவாரத்தில் மிதந்த தலைநகரை சோக வெள்ளம் மூடிக் கொண்டது.

கல்யாண வீடு இழவு வீடாக மாறியது. நாதஸ்வர ஓசைக்குப் பதில் பறையோசை கேட்டது.

மத்திய வங்கியை பொடிபடச் செய்த வெடியோசை இந்நாள்வரை தமிழீழத்தில் நடைபெற்று வந்த போர் சிறிலங்காவின் தலைநகருக்குள் புகுந்துவிட்டதை கூட்டிக் காட்டியது.

இந்த உண்மையை ஒரு வெளிநாட்டு செய்தி நிருபர் அழகாக இப்படிக் கூறியிருந்தார்.

**"By capturing Jaffna, President Chandrika has voluntarily invited the LTTE to Colombo and brought the war to her door step".**

அதாவது "யாழ்ப்பாணத்தைக் கைபற்றியதன் மூலம் சனாதிபதி சந்திரிகா விடுதலைப் புலிகளை கொழும்புக்கு தானாகவே அழைத்து வந்துவிட்டார். அதுமட்டுமல்ல போரையும் தனது வீட்டு வாசப்படி வரை கொண்டு

தொடர்ச்சி 19ஆம் பக்கம்

www.tamilarangam.net



# எத்தனை

நாவண்ணன்

# வித்துக்கள்

பெரியவருக்கு என்ன நடந்தது என்று தீர்மானிக்க முடியாத நிலையில் உடுவிலுக்குத் திரும்பினார். இராணுவத்தினர், சிலரைக் கும்பளாவளைப் பிள்ளையார் கோவிலில் கொண்டு சென்று வைத்திருப்பதாகவும் கேள்விப்பட்டார். ஒரு வேளை அப்படி எதுவும் நடந்திருக்கலாம் எனவும் எண்ணினார். என்றாலும், எந்த முடிவிற்கும் அவரால் வர முடியாமல் இருந்தது.

மறுநாட் கழித்து அடுத்த தினம் 19ஆம் திகதி, மீண்டும் மனம் கேட்காமல் மாசியப்பிட்டி வந்தார். அந்த வீட்டைச் சுற்றித் தேடாமல், சற்றுப் பரந்த அளவிற் தேடத்தொடங்கினார். தேடியபடி கண்ணகி அம்மன் கோவில் பக்கம் வந்த போது, அங்கு துர்வாடை வீசியதை உணர முடிந்தது. மனதில் சந்தேகம் தோன்றியது. ஏதாவது மிருகங்கள், கோழிகளின் மணமாக இருக்கலாம் என்று மனம் சொன்னாலும் போய்ப் பார்த்து விட வேண்டும் என்று உள் மனது கட்டளையிட்டது. எனவே கண்ணகி அம்மன் வீதியைச் சுற்றி வந்தார். அங்கே தெற்கு வீதியில்........!

**புலிகளின் பிடியிலிருந்து விடுவித்துப் பாதுகாப்புக் கொடுக்கப் புறப்பட்ட சந்திரிகாவின் படையணிகளால், பாவம் பெரியவர் பொன்னையா போன்ற முதியவர்கள், நோயாளிகளுக்கும் கூட பாதுகாப்பளிக்க முடியவில்லை! 'புலிப்பாச்சல்' இடம் பெற்றிரா விட்டால் பெரியவரின் சடலம் என்னவாகியிருக்கும்? தேடுவாரற்ற நிலையில் அப்படியே கிடந்து..........**

ஒரு அறையின் மீது செல் விழுந்து கூரை உடைந்திருப்பது தெரிந்தது. துர்நாற்றம் அங்கிருந்துதான் வருவது போலவும் இருந்தது. எனவே தயங்கித் தயங்கி அந்த அறையை நோக்கிச் சென்றார். திறந்து கிடந்த அறைக்கதவின் ஊடாக உள்ளே பார்த்த போது........!

அவர் காணவிரும்பாத காட்சி அங்கு தெரிந்தது. ஊதிப்பெருத்த மனித உடல் ஒன்று அதனுட் கிடந்தது. முகம் கொடுத்துப் பார்க்க முடியவில்லை. நாற்றம் சகிக்க முடியாமல் இருந்தது. அந்த உடல் பெரியவர் பொன்னையாவின் உடல்தானா.......? ஆமாம், அவருடையதுதான் என்பதற்கான அடையாளங்கள் தெரிந்தன. பிணத்தின் உச்சந்தலை பிளந்திருந்தது. செல் விழுந்ததா? அல்லது கூரை விழுந்து பிளந்ததா? பிரேதப் பரிசோதனை செய்யக்கூடிய நிலையில் அவர் இல்லை. ஊதிப்பருத்த அவர் இடையில் இன்னும் இறுக்கிக் கொண்டிருந்த காசிநூல்........ பக்கத்திலே கிடந்த பெரியவரின் கைத்தடி...... உருமாறிவிட்டாலும் பல்லாண்டுகாலத்தில் பழகிப்போனஅந்த முகம்– அவர் அணிந்திருந்த உடை– அவர்தான் என்று ஐயம் தெளிவுறச் சொல்லின.

அந்தப்பிணத்தை என்ன செய்வது? அதுவும் அவர் ஒருவர் மட்டும் தனித்துச் செய்யக் கூடியதென்ன? உடனே உடுவிலுக்குத் திரும்பி வந்து மனைவியிடம் தெரிவித்தார். உதவிக்கு எவருமே இல்லாத நிலையில், கூலிக்கே ஆட்களைப் பிடிக்க வேண்டியிருந்தது. கூலி ஆட்கள் சகிதம் கணவனும் மனைவியும் மாசியப்பிட்டிக்கு விரைந்தனர்.

எடுத்து வெளியே கொண்டுவர முடியாத அளவுக்குப் பிணம் பழுதடைந்து இருந்தது. நீண்ட நேரம் அவ்விடத்தில் நின்று எதுவும் செய்ய முடியாத அளவுக்குப் பிணவாடை. ஒரு வாரத்துக்கு மேலாகக் கிடந்து பழுதுற்ற பிணத்தை, அப்படியே அவ்விடத்திலேயே வைத்துக் கொழுத்துவதைத் தவிர வேறு எதுவும் செய்ய முடியவில்லை. ஏற்கனவே செல் விழுந்து கூரை பிரிந்து விட்ட வீடுதானே! பிணத்தை அப்படியே வைத்துத் தீ மூட்டினர்.

நண்பரின் 'அந்த வீட்டில் விடப்பட்ட பெரியவர் கண்ணகி அம்மன் கோவில் தெற்கு வீதியிலுள்ள அந்த அறைக்கு எப்படி வந்தார்? மற்றவர் துணையின்றிச் சுயமாக நடமாட முடியாத அவர், எப்படி அங்கு வந்தார்....! தானே தடவித் தடவி, தட்டுத்தடுமாறி வந்து சேர்ந்தாரா? அல்லது வேறு யாரேனும் பாதுகாப்புக் கருதி, அங்கு கொண்டு வந்து விட்டார்களா? என்பது புதியாத புதிர்தான்.

புலிகளின் பிடியிலிருந்து விடுவித்துப் பாதுகாப்புக் கொடுக்கப் புறப்பட்ட சந்திரிகாவின் படையணிகளால், பாவம் பெரியவர் பொன்னையா போன்ற முதியவர்கள், நோயாளிகளுக்கும் கூட பாதுகாப்பழிக்க முடியவில்லை! 'புலிப்பாச்சல்' இடம் பெற்றிரா விட்டால் பெரியவரின் சடலம் என்னவாகியிருக்கும்? தேடுவாரற்ற நிலையில் அப்படியே கிடந்து..........

அதைப் படிப்பவர்கள் கற்பனைக்கே விட்டுவிடுகிறேன்.

∴ ∴ ∴ ∴ ∴

சங்கானை அராலி வீதியிற்தான் சவேரியான் சாள்ஸ் பெர்னாண்டோ, தன் சகோதரி இந்திராணி குடும்பத்துடன் வாழ்ந்து வந்தார். நாற்பத்தேழு வயதுதான். என்றாலும் விதி அவரது வாழ்க்கையில் பல விதத்தில் விளையாடி விட்டது. "பட்ட காலிலே படும், கெட்ட குடியே கெடும்" என்பார்களே அப்படி. அவரை எல்லாரும் செல்வம் என்றுதான் அழைப்பர்.

இரண்டு பெண்களும் இரண்டு ஆண்களுமாக நான்கு பிள்ளைகளுக்குத் தந்தை. ஆனால், தான் உழைத்துப் பிள்ளைகளை தன்னோடு வைத்துக் காப்பாற்ற முடியாத துயரம் அவருக்கு. பிள்ளைகள் எவருமே தற்போது அவருடன் இல்லை. எல்லோரும் மனைவியின் பொற்றோரின் பாதுகாப்பில்.

நடந்தது இதுதான்........ 1993 இல் அவரது மனைவி காலமாகி விட்டாள். மனைவி இறப்பதற்கு இரண்டு வருடங்களுக்கு முன், வலது கைவிரல் ஒன்றில் பாம்பு தீண்டியதால்–பாம்பு



தீண்டிய வலது கையும், வலது காலும் குறண்டி வழங்க முடியாத நிலை. நாக்குக்கூட இழுத்துப் பேச முடியாத நிலை. பேசக்கூடிய அளவுக்கு வாய் சுகமடைந்து விட்டாலும், உழைத்துக் காப்பாற்ற முடியாத அளவுக்குக் கையும் காலும் வலுவிழந்து விட்டன.

கையும் காலும் வலுவிழந்து விட்ட செல்வத்துக்கு, அவர் மனைவி கையும் காலாகவும் இருந்தாள். அவள்தான் எப்படியோ கஷ்டப்பட்டு, கணவனையும் நான்கு பிள்ளைகளையும் காப்பாற்றி வந்தாள். ஆனால் அவரை வேறு விதத்தில் இன்னும் பழிவாங்க நினைத்தது. இரண்டு வருடங்களுக்கு முன்னர் அவர் மனைவியை அபகரித்துக் கொண்டது. "போகவேண்டியவன் நான் இருக்க, அவள் போய் விட்டாளே. அந்த நாலு குஞ்சுகளையும் வைத்து நான் என்ன செய்யப் போகிறேன்?" என்று சொல்லிக் கலங்கி நின்ற போது, இரு பகுதியினரும் சேர்ந்து இப்படி ஒரு முடிவிற்கு வந்தனர்.

"எங்களுடைய பிள்ளையின் பிள்ளைகளை நாங்கள் பொறுப்பெடுக்கின்றோம்" என்றனர் செல்வத்தின் மனைவியின் பெற்றோர், சகோதரர்கள்.

"எங்கள் சகோதரத்தை நாங்கள் பொறுப்பெடுக்கின்றோம்" என்றனர் இந்திராணியும் அக்காள் ஜெயராணியும். எனினும் இந்திராணி குடும்பத்துடன்தான் செல்வம் வசித்து வந்தார்.

இந்திராணியின் தந்தை பொன்னுச்சாமி, செல்வத்துக்குச் சிறிய தந்தை. மனைவியின் முதற்தாரத்துப் பிள்ளையென்றாலும் செல்லச்சாமிக்குச் செல்வத்தின் மேல் அன்பு அதிகம்.

அன்று 9ஆம் திகதி, சங்கானைப் பகுதியில் இராணுவத்தின் 'முன்னோக்கிப் பாய்தல்' நடைபெற்றபோது, இந்திராணியும் குடும்பத்தினரும் இடம் பெயர்ந்து கொக்குவிலுக்கு வந்தனர். அவர்கள் இருவரையும் தங்களோடு வரும்படி அழைத்தும் கூட, அவர்கள்கூடச் செல்வதற்கு மறுத்துவிட்டனர். 'ஆமி வந்தாலும் வயசு போனவர்களையும் வருத்தக்காரர்களையும் ஒன்றும் செய்ய மாட்டான்' என்பது, பொன்னுச்சாமியினதும் செல்வத்தினதும் வாதம். எனவே தகப்பனையும், தமையனையும் வீட்டிலே விட்டு விட்டு, இந்திராணி குடும்பம் வெளியேறியது.

கொக்குவிலிலிருந்த போதும், இந்திராணிக்கும் ஜெயராணிக்கும் இவர்கள் இருவரதும் நினைவுதான். எனவேதான், மறுநாள் 10ஆம் திகதி, ஜெயராணியின் மகன் சுரேஸ்குமாரை, அவர்களைப் பார்த்து வரும்படியும் விரும்பினால் அழைத்து வரும்படியும் கூறி அனுப்பினார்கள்.

சுரேஸ்குமார் வந்து அழைத்தபோது இருவரும் ஒத்தபடி, "நாங்கள் வரமாட்டோம். நீங்கள் அங்கே இருங்கோ...... இஞ்ச

www.tamilarangam.net

அரிசி சாமான் எல்லாம் இருக்குத்தானே...... நாங்கள் சமைச்சுச் சாப்பிடுவம்....... எங்களால் அவ்வளவு தூரம் நடக்க் ஏலாது' என்று கூறினார். அவர்களுக்கென கொண்டுபோன பீடி, தீப்பெட்டிகளைக் கொடுத்து விட்டு சுரேஸ்குமார் அன்று திரும்பி விட்டான்.

அதற்குப் பிறகு அவர்களுக்குச் சங்கானை போகமுடியவில்லை. இராணுவம் சுற்றி வளைத்துக்கொண்டது. 'புலிப்பாய்ச்சலின்' பின்னர் அடுத்த ஞாயிற்றுக்கிழமை 17ஆம் திகதி, ஆண்கள் மட்டும் பார்த்து வருவதற்குச் சென்றனர். செல்லுகின்ற வழிகளில் ஆங்காங்கே பிணங்கள் காணப்பட்டன. வீட்டிலே இவர்களுக்கு என்ன நடந்ததோ என்ற அச்சத்தில் ஏங்கியபடியே வீட்டுக்குவந்து சேர்ந்தனர். அங்கே.......!

வராந்தாவில் உள்ள கட்டிலில் பொன்னுச்சாமியின் உடல் கிடந்தது....... நடு வீட்டுக்குள்ளே செல்வத்தின் உடல் கிடந்தது. இது என்று நடந்தது? திடமாகக் கூற முடியா விட்டாலும், பெரும்பாலும் 10ஆம் திகதி சுரேஸ்குமார் வந்து சென்றதன் பின்னர் நடைபெற்றிருக்கலாம். ஒரு வாரமாகத் தேடுவாரற்றுக் கிடந்த பிணங்கள் மிகவும் பழுதடைந்து

பக்கத்தில் நின்ற சிறுவனைச் சுட்டிக்காட்டினார். எட்டு வயதுப் பையன். வயதுக்கு மிஞ்சிய தோற்றம்........ ஆனால் முகத்திலும் பேச்சிலும் குழந்தைத் தன்மை தெரிந்தது. ஆசிரியர் தொடர்ந்து சொன்னார்.......

கிராம உத்தியோகத்தர் வன்னியசிங்கத்துக்குச் சொந்த இடம் மாவிட்டபுரம். 1990 இல் காங்கேசன்துறையில் இடம்பெற்ற இராணுவ நடவடிக்கையைத் தொடர்ந்து இடம்பெயர்ந்து, சண்டிலிப்பாயிற் குடியேறினார். தொட்டிலடியில் உள்ள 'சண்முக வாசா' இல்லம்தான் அவர் அப்போது இருந்த வீடு.

9ஆம் திகதி தொடங்கிய இராணுவ நடவடிக்கையால், செல் வீச்சுக்கு அஞ்சி வீட்டைப் பூட்டிக்கொண்டு, மனைவியோடும் மகனோடும் புறப்பட்டார். சண்டிலிப்பாய் வீதியில் சனம் நிறைந்து காணப்பட்டது. யாழ்ப்பாணத்தை நோக்கிச் சனம் சாரிசாரியாகச் சென்றுகொண்டிருந்தது.

தொல்புரத்தில் இருந்து நெல்மூட்டை சகிதம், தட்சணாமூர்த்தி குடும்பம் இரட்டைமாட்டு வண்டியில் சென்றுகொண்டிருந்தது. தொடர்ந்து விழுந்துகொண்டிருந்த எறிகணைகளிலிருந்து

அந்தப்பக்கம் வந்த போராளிகள் இவர்களை வாகனத்தில் ஏற்றி அனுப்பி வைத்தனர்.

தனபாலசிங்கம் ஆசிரியருக்குத் தகவல் அனுப்பப்பட்டது. தம்பியின் உடலைப் பொறுப்பேற்று, கொக்குவிலில் தான் குடியிருக்கும் வீட்டிற்கு எடுத்துச்சென்று, செய்யவேண்டிய கடமைகளைச் செய்தார்.

திருமதி வன்னியசிங்கம் பிழைத்துவிடுவார் என்றுதான் எல்லாரும் நம்பிக் கொண்டிருந்தார்கள். ஆனால் எல்லாரது நம்பிக்கையையும் பொய்ப்பித்து விட்டுக் கணவன் போன ஐந்தாம் நாள், அவரையே பின்தொடர்ந்து போய்விட்டாள்........

இப்பொழுது, பெற்றவரை இழந்த பிள்ளையாகப் பிரணவன். மூப்படைந்த பெரியப்பாவும் குடும்பமுமே அவனுக்கு இனித்தஞ்சம்........

தனபாலசிங்கம் ஆசிரியரின் வீட்டிலிருந்து விடைபெறுகின்றேன்.

∴ ∴ ∴ ∴ ∴



# எத்தனை வீழ்ந்தன

கிடந்தன. பெண்கள் எவரையும் அழைத்துச்செல்லாமல், ஆண்கள் மட்டும் சென்று அப்பிணங்களை எடுத்து எரித்தனர்.

இவர்களது வீட்டுக்குச் சில வீடுகள் தள்ளி உள்ள வீட்டுக்கிணற்றுள், 'தெருவடி மாமி' என்று இவர்களால் அழைக்கப்படும் கணபதி நாகம்மா என்னும் ஒரு மூதாட்டி இறந்து கிடந்தார். இவர் தனது தம்பியாருடன் வாழ்ந்து வந்தவர்தான்.

நாகம்மாவின் வீட்டில் இராணுவம் காவலரண் அமைத்து இருந்ததற்கான அடையாளங்கள் உள்ளன. ஆனால் நாகம்மாக் கிழவிக்கு என்ன நடந்தது......... எப்படி இது நடந்தது என்பது புரியவில்லை........?

∴ ∴ ∴ ∴ ∴

திருநெல்வேலியிலிருந்த, தெல்லிப்பளை பிரதேச சபை அலுவலகத்தில் இருந்து கொக்குவில் புறப்பட்டேன். ஓய்வுபெற்ற தலைமை ஆசிரியர் தனபாலசிங்கத்தின் வீட்டை தேடிப்பிடிப்பதில் அவ்வளவு சிரமமிருக்கவில்லை. உள்வாசலை நெருங்கும் போதே, சிறுவன் ஒருவனுக்குப் பெரியவர் யாரோ பாடம் சொல்லிக் கொடுத்துக்கொண்டிருப்பது கேட்டது. கவனத்தைத் திருப்புவதற்காகக் கதவைத் தட்டினேன். பாடம் சொல்லிக்கொடுப்பது தடைப்பட்டது. முன்வழுக்கை விழுந்த ஒரு பெரியவர் வெளியே வந்தார். பார்வையிலே என்னை யாரென்று வினவுவது தெரிந்தது.

'தனபாலசிங்கம் மாஸ்ரர்.......?' என்று நான் இழுத்த போது, 'நான்தான் வாங்கோ' என்றார். உள்ளே சென்ற நான், என் அறிமுகத்தை முடித்துக்கொண்டு, "சண்டிலிப்பாயில் செல் அடியில செத்த கிராம உத்தியோகத்தர் வன்னியசிங்கத்தின் அண்ணன்தானே நீங்கள்.......?"


'ஓமோம்.......?'

'வன்னியசிங்கமும் மனைவியும் செத்தது பற்றித் தகவல்கள் வேணும்.........'

'இவன்தான் அவர்களுடைய ஒரேபிள்ளை, பிரணவன்' என்று

பாதசாரிகள் தம்மைக் காப்பாற்றிக் கொள்வது மிகுந்த சிரமமாயிருந்தது. சண்டிலிப்பாயிலுள்ள 'ஐந்துகண் மதவடி' இல் வண்டில் வந்து கொண்டிருந்தபோது, பயங்கர இரைச்சலுடன் செல்லொன்று வந்து அவர்கள் பக்கத்தில் விழுந்தது. மறுகணம் வண்டில், பாலத்திலிருந்து வயலுக்குள் தூக்கி எறியப்பட்டது. மாடு ஒன்று அந்த இடத்திலேயே துடித்து மாண்டது. வண்டிலில் இருந்த நெல்மூட்டைகளும் அதிற் பிரயாணம் செய்தவர்களும் சிதறி வீழ்ந்தனர். அந்த வண்டிலில் வந்த இருவருக்கு மட்டும் பெருங்காயம். தெய்வாதீனமாக எல்லாரும் உயிர்தப்பினர். ஆனால், தொடர்ந்து விழுந்த கணைகளால், அதே வீதியில் வந்த பலர் காயமுற்றனர். இறந்தனர். அவர்களுள் திருமதி நித்தியானந்தனுமொருவர்.

அதே வீதியில்தான் கிராம சேவை உத்தியோகத்தர் வன்னியசிங்கத்தின் குடும்பம் வந்து கொண்டிருந்தது. அவர்களுக்குச் சற்றுத் தள்ளி விழுந்த செல், அந்தக் குடும்பத்தைச் சிதைத்தது. செல் துண்டு ஒன்று வன்னியசிங்கத்தின் நெஞ்சை ஊடுருவிச் செல்லவே, அவர் அந்த இடத்திலேயே சுருண்டு விழுந்தார். அந்தக்கணமே அவர் உயிர் பிரிந்துவிட்டது.



திருமதி வன்னியசிங்கம் தனபாக்கியலட்சுமிக்கு வயிற்றிலே பாரிய காயம்.

சிறுவன் பிரணவனுக்குத் தொய்வாதீனமாகக் காயங்கள் எதுவுமில்லை. அழுவதைத் தவிர அவனுக்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை. அழுதுகொண்டே நின்றான்.

அடுத்து, தாவடி மதனிப்பாய் வீதியில் குண்டுவிழுந்து அந்த இடத்திற்குப் போகிறேன். இடம் குறிப்பாகத் தொரியவில்லை. சைக்கிள் திருத்தும் கடையொன்றில் மோட்டார்ச் சைக்கிளை நிற்பாட்டிக் கடைக்காரரிடம், 'அந்த புக்காரா குண்டுபோட்ட வீடு எங்கை அண்ணை.......?'

என்ன நிமிர்ந்து பார்த்த அவர், பக்கத்தில் நின்ற மற்ற வரையும் பார்த்தார். 'இவர்தான் அந்த வீட்டுக்காரர்' என்று அறிமுகப்படுத்துகின்றார்.

'உங்கட சம்பவத்தைப்பற்றித் தகவல் எடுக்கிறதுக்காக வந்திருக்கிறன். உங்கட வீட்டை போய்க் கதைப்போமே?'

"அங்க வீடெங்க இருக்குது போயிருந்து கதைக்கிறதுக்கு...... வாங்கோ" என்று கூறியவராக முன்னே நடக்கிறார். அந்த வீதியிலிருந்து செல்லும் குச்சொழுங்கைக்குள் இறங்கி நடக்கின்றார். நான் மோட்டார்ச் சைக்கிளை உருட்டிக் கொண்டு பின்தொடர்கின்றேன்.

அந்தக் குச்சொழுங்கை அவர்கள் வளவிலே போய் முடிகிறது. வேலிக்கு வெளியே இருந்து பார்க்கும்போது, அந்தக் காணியில் வீடு எதுவுமில்லை. சுடலை மேடு போன்று காட்சி அளிக்கின்றது. தகர்ந்து விழுந்த கற்களை எடுத்து, வீட்டுக்கிருத்தியங்கள் செய்வதற்காக ஒருபக்கமாக அடுக்கி வைத்திருந்தார்கள். "இதுதான் என்ர வீடிருந்த இடம். எல்லாம் போச்சு...... என்ர மனுசி இல்லை. பிள்ளை இல்லை. மச்சாள்மார்

தொடர்ச்சி 16 ஆம் பக்கம்

www.tamilarangam.net



# பார்க்கும் இடங்களெல்லாம் நந்தலாலா - புலிகளின்...

9ஆம் பக்கத் தொடர்ச்சி......

கடலும் மலையும் எங்கள் கூட்டம்

நோக்குந் திசையெல்லாம் நாமன்றி வேறில்லை

நோக்க நோக்கக் களியாட்டம்

என்று பாரதியாரால் கவிதை பாட முடிந்தது.

வேதாந்த விசாரணைக்கும் அரசியலுக்கும் என்ன சம்பந்தம் என்று கேட்கிறீர்களா? சம்பந்தம் நிறைய இருக்கிறது.

தமிழர்களின் கலை, பண்பாட்டின் உறைவிடமான யாழ்ப்பாணத்தை, அவர்கள் மொழியில் 'யாப்பபட்டுண'வை சிங்கள இராணுவம், கைப்பற்றி சிங்கக் கொடியை ஏற்றியதை மாட்சிமை தங்கிய மகாராணியார் சந்திரிகா தலைநகரில் விழா வெடுத்து தடல்புடலாகக் கொண்டாடி மகிழ்ந்தார்.

மகாராணியார் தனது மதிமந்திரி அனுருத்த ரத்வத்தை யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றி அங்கு சிங்களவரின் சிங்கக் கொடியை ஏற்றிவிட்ட செய்தியையும் விடுதலைப் புலிகளை அங்கிருந்து விரட்டி விட்ட வீரதீரபிரதாபங்களையும் ஓலையில் எழுதி, அதனைப் பேழையில் வைத்துக் கொடுத்ததை வாங்கிக் கொண்டார்.

சிங்களக் குடிமக்களும் பட்டாசு கட்டுக் கட்டாக வெடித்து 'யாப்பபட்டின' வைப் பிடித்த வெற்றியை, பெரிய தாரை தப்பட்டையோடு கொண்டாடி மகிழ்ந்தார்கள்.

விடுதலைப் புலிகளுக்கு எதிரான போரில் சிங்கள இராணுவத்துக்கு மாபெரும் வெற்றி, விடுதலைப் புலிகளுக்கு படுதோல்வி என்ற பிரசாரத்தை அரச கட்டுப்பாட்டிலுள்ள மக்கள் தொடர்பு ஊடகங்களும், சிங்கள–பௌத்தர்களால் நடாத்த ப்படும் தமிழ் விரோத ஏடுகள் சிலவும் கட்டவிழ்த்து விட்டன.

ஆனால் கொழும்பில் கடந்த தை மாதக் கடைசி நாளன்று வெடித்த குண்டு மத்திய வங்கியை மட்டும் தரைமட்டமாக்கவில்லை. சிலிங்கோவை மட்டும் சின்னாபின்ன மாக்கவில்லை. 'இன்ரர் கொன்ரினெண்ரல்' உல்லாச விடுதியை மட்டும் ஆட்டங்காண வைக்கவில்லை. சிறிலங்கா அரசின் பிரசார இயந்திரத்தையும் தகர்த்துத் தள்ளியது.

'யாப்பபட்டுன' வை பிடித்த மகிழ்ச்சி ஆரவாரத்தில் மிதந்த தலைநகரை சோக வெள்ளம் மூடிக் கொண்டது.

கல்யாண வீடு இழவு வீடாக மாறியது. நாதஸ்வர ஓசைக்குப் பதில் பறையோசை கேட்டது.

மத்திய வங்கியை பொடிபடச் செய்த வெடியோசை இந்நாள்வரை தமிழீழத்தில் நடைபெற்று வந்த போர் சிறிலங்காவின் தலைநகருக்குள் புகுந்துவிட்டதை கூட்டிக் காட்டியது.

இந்த உண்மையை ஒரு வெளிநாட்டு செய்தி நிருபர் அழகாக இப்படிக் கூறியிருந்தார்.

**"By capturing Jaffna, President Chandrika has voluntarily invited the LTTE to Colombo and brought the war to her door step"**

அதாவது "யாழ்ப்பாணத்தைக் கைபற்றியதன் மூலம் சனாதிபதி சந்திரிகா விடுதலைப் புலிகளை கொழும்புக்கு தானாகவே அழைத்து வந்துவிட்டார். அதுமட்டுமல்ல போரையும் தனது வீட்டு வாசப்படி வரை கொண்டு வந்துவிட்டார்."

இந்த நிருபரின் கூற்று சரியோ பிழையோ போர் கொழும்புக்கு விரிவாக்கப்பட்டு விட்டது என்பது முற்றிலும் சரியானதாகும்.

இப்போது தலைநகரம் எதிரிபடைகளால் முற்றுகை இடப்பட்ட நகரமாக காட்சி தருகின்றது.

கொழும்பில் விடுதலைப் புலிகள் இருக்கிறார்களோ இல்லையோ, வந்தார் களோ இல்லையோ சிங்கள–பௌத்த இனவெறி பிடித்த ஆட்சியாளர்களது கண்களுக்கு, சிறிலங்கா பாதுகாப்புப் படையினரின் கண்களுக்கு யாரைப் பார்த்தாலும் விடுதலைப் புலிகளாகத் தெரிகிறார்கள்.

எப்படி வேதாந்திக்கு காக்கை குருவி, நீள் கடல் மலை இவையெல்லாம் கடவுளன்றி வேறின்றில்லையோ, அது மாதிரி சிங்கள ஆட்சியாளர்களுக்கும் சிங்களப் பாதுகாப்புப் படையினருக்கும் யாரைப் பார்த்தாலும் விடுதலைப் புலிகளாக அல்லது கரும்புலி களாக காட்சி தருகிறார்கள்.



இதனால் அன்றாடம் பிச்சையெடுத்து வயிற்றைக் கழுவும் பிச்சைக் காரர்களுக்கும் ஆபத்து வந்துள்ளது.

❖ ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கா "அரசியல் அதிகாரப் பரவலாக்கலை வரவேற்கிறேன். ஆனால் ஒற்றையாட்சி அரசியல் யாப்புமுறை மாற்றப்படுவதை எனது கட்சி எதிர்க்கும்" என்று சொல்லுகிறார்.அதாவது குண்டுச் சட்டிக்குள் குதிரை ஓட்டிப் பழக்கப்பட்டவர்.

❖ எங்களுக்கு இரண்டு கண்ணும் போனாலும் பரவாயில்லை, தமிழர்களுக்கு ஒரு கண்ணாவது போகவேண்டும் என்று சிங்கள-பௌத்த அரசியல்வாதிகள் பிரார்த்தனையாகும்

கரும்புலிகள் பிச்சைக்காரர்கள் உடையில் ஊடுருவுகிறார்கள் என்று சிறீலங்கா அரசின் உளவுத்துறை உளவுகண்டு தெரிவித் ததையடுத்து அன்றாடங் காய்ச்சிகளான பிச்சைக்காரர்கள் வகைதொகையின்றி கைது செய்யப்பட்டு சிறைச் சாலைகளில் அடைத்து வைக்கப்படுகிறார்கள்.

பிச்சைக்காரர்கள் மட்டுமல்ல, புத்தரின் சீடர்களுக்கும் காலம் சுகம் இல்லை. கரும்புலிகள் மஞ்சள் உடையில் திரிகிறார்கள் என்று யாரோ ஒரு தென்னாலிராமன் புரளியைக் கிளப்பிவிட புத்ததேரர்களும் பாதுகாப்பு படையினரின் சோதனைக்கு உள்ளாக்கப்படுகிறார்கள்.

இப்படி பிச்சைக்காரர்கள், புத்ததேரர்கள் மட்டும் அல்லாது வண்டி இழுப்பவர்கள், வாகன சாரதிகள்......என்று சகலருமே விடுதலைப் புலிகள் என சந்தேகிக்கப்பட்டு சோதனைக்கு உள்ளாக்கப்படுகிறார்கள்.

கொழும்பில் பல வீதிகள் போக்குவரத்துக்கு நிரந்தரமாக மூடப்பட்டுள்ளன.

போக்குவரத்துக்கு திறந்து விடப்பட்டுள்ள வீதிகளில் முழத்துக்கு ஒரு சோதனைச்சாவடி.

மகாராணியார் சந்திரிகாவின் குடிமனையான அலரி மாளிகையைச் சுற்றி எக்கச்சக்கமான பாதுகாப்பு.

அந்தக் காலத்தில் அலரி மாளிகை வாசலைச் சுற்றி ஐந்து ஆறு இராணுவத்தினரே காவலுக்கு நிற்பார்கள்.

இப்போது முப்படையைச் சார்ந்த 300க்கும் அதிகமான படையினர் அலரி மாளிகையை இரவு, பகல் இருபத்தி நாலு மணித்தியாலம் காவல்காக்க நிறுத்தப்பட்டுள்ளனர்.

அலரிமாளிகையின் மதில் சுவர் ஐம்பது அடி உயர்த்தப்பட்டுள்ளது. அதன் பின்னால் மண் மூட்டைகள். கூரையில் விடுதலைப் புலிகளின் விமானங்களை சுட்டு வீழ்த்த ஏராளமான விமான எதிர்ப்புப் பீரங்கிகள் பொருத்தப்பட்டுள்ளன.

மகாராணியார் சந்திரிகா ஒரு சாதாரண சிறைக் கைதிபோல அலரி மாளிகைக்குள் முடங்கிக் கிடக்கிறார்.

கொழும்புத்துறை முகத்தில் கடுமையான காவல். ஒரே நேரத்தில் ஒரு கப்பல் மட்டும் உட்புக அனுமதிக்கப்படுகிறது.

இவற்றைவிட பொருண்மிய இலக்குகள் என்று கருதப்படுகிற நீர்த்தேக்கங்கள், பாலங்கள், மின்சார நிலையங்கள், எண்ணெய் குதங்கள் இவற்றை சுற்றிப் பலத்த காவல்.

கடந்த ஆண்டு செப்டெம்பர் 22ஆம் நாள் நாகர் கோவில் மகாவித்தியாலயத்தின் மீது புக்காரா விமானம் ஒன்று குண்டு போட்டதில் 29 மாணவர்கள் அதே இடத்தில் துடிதுடித்து இறந்தார்கள். மூன்று பொதுமக்கள் பலியானார்கள். பலர் படுகாயம் அடைந்தார்கள். மருத்துவர்கள், பலரது காலை அறுவை வைத்தியம் செய்து அகற்றினார்கள்.

பள்ளிக்குப்போன பிள்ளைகள் மதிய போசன இடைவேளையின்போது மைதானத்தில் துள்ளி விளையாடிக் கொண்டிருந்தபோது சிறிலங்கா விமானப் படையால் இப்படுகொலை நடாத்தி முடிக்கப்பட்டது.

இப்படுகொலைக்கு விடுதலைப் புலிகள் பழிவாங்கக் கூடும் என்ற மனப்பிரா ந்தியிலேயே சிறிலங்கா அரசு கொழும்பு பாடசாலைகளை மூடிவிட்டிருக்கிறது.

இப்படி விடுதலைப் புலிகள் தாக்கக்கூடும் என்ற மனப் பயத்தில் கொழும்பு அல்லோல கல்லோலப்படும்போது விடுதலைப் புலிகளது நீர்மூழ்கிக் கப்பல்கள் இலங்கையின் மேற்குக் கரையோரக் கடலில் காணப்பட்டதாக நீர்கொழும்பு மீனவர்கள் தெரிவித்ததாக சொல்லப்பட்டதை அடுத்து சிறிலங்காக் கடற்படை தேடுதல் வேட்டையில் இறங்கியுள்ளது. அதுமட்டுமல்ல விடுதலைப் புலிகளிடம் சிறியரக நீர் மூழ்கிக் கப்பல்கள் இருக்கின்றன என்ற சங்கதி தங்களுக்கு தெரிந்த சங்கதிதான் என்று சிறீலங்கா கடற்படை அறிவித்துள்ளது.

விடுதலைப் புலிகளிடம் சிறியரக நீர் மூழ்கிகள் போல் சிறிய

19ஆம் பக்கம் தொடர்ச்சி

www.tamilarangam.net



# சந்திரிகா அரசின் பத்து மாதப் போரும் முடங்கிப் போய் விட்ட மூலோபாயமும்

ஜெயராஜ்

மூன்றாம் கட்ட ஈழப்போர் ஆரம்பமாகி பத்து மாதங்கள் நிறைவுற்றுள்ளன. சிறிலங்கா அரசைப் பொறுத்து புதிய அரசியற் தலைமை புதிய போர் மூலோபாயம் என்பனவற்றின் அடிப்படையில் நடத்தப்பட்ட இப்போரானது அதற்கு மிகவும் 'செலவீடானதாகவே' இருந்தது.

ஐக்கிய தேசியக் கட்சியின் நீண்ட ஆட்சியின் பின்னர் அரசைக் கைப்பற்றிய பொதுசன ஐக்கிய முன்னணி, ஐ.தே.கவுடன் உள்ள ........ முரண்பாடுகளைப் போலவே வடக்கு-கிழக்கில் ஐ.தே.க ஆட்சியில் கைக்கொள்ளப்பட்ட போர் மூலோபாய விடயத்திலும் வேறுபட்டு நின்றது. ஐ.தே.க காலத்துப் போர் மூலோபாயத்தில் காணப்பட்ட தவறே இராணுவத் தோல்விகளுக்கும், புலிகளைத் தோற்கடிக்க முடியாமல் போனமைக்கு காரணம் எனச் சாடவும் செய்தது.

இதன் பிரகாரம் முன்னைய ஆட்சிக்காலத்தில் போர் குறித்து வகுக்கப்பட்டிருந்த அதாவது செயற்பாட்டின் மூலோபாயம் தலைகீழாக மாற்றப்பட்டது. தமிழர் தாயகமான வடக்கு-கிழக்கு மாகாணங்களை துண்டாடுவதோடு, கிழக்கில் இராணுவத்தின் பூரண கட்டுப்பாட்டை வைத்துக் கொண்டு வடக்கின் மீது தொடர்ச்சியான அழுத்தங்களைக் கொடுப்பதே முன்னைய மூலோபாயமாக இருந்தது. அத்தோடு வடக்கில் உள்ள முகாம்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் முகமாக தேவைக்கேற்ற விதத்தில் இராணுவ நடவடிக்கையைத் தொடர்வது, பிரதேசங் களைக் கைப்பற்றுவது என்பனவும் கருத்தில் எடுக்கப்பட்டது.

இந்த மூலோபாயத்தின் அடிப்படையில் மூன்று பகுதிகளாக வடக்கு-கிழக்கு அடையாளப் படுத்தப்பட்டன. ஒன்று வடக்கிற்கும்-கிழக்கிற்கும் அடையில் தொடு நிலப்பகுதியாக இருந்த மணலாற்றுப் பிரதேசம். இதைப் பூரணமாக பாதுகாப்பதன் மூலம் புலிகளுக்கு கிழக்கிற்கான தரைவழிப்பாதையைத் தெளி வாகத் துண்டித்துவிடுதல். அடுத்ததாக கிழக்கில் முகாம்களை விரிவான முறையில் அமைத்து புலிகளின் நடமாட்டத்தை கட்டுப்படுத்துதல். மூன்றாவது வடபகுதியில் முகாம்களின் பாதுகாப்பை வலுப்படுத்து வதோடு யாழ். குடாநாட்டிற்கான தரை வழிப்பாதையை அடைத்துவிடுதல் என்பன வாக இருந்தது.

ஆனால் மூன்றாம் கட்டப் போர் ஆரம்பமான போது முன்னைய மூலோபாயம் கிழக்கில் புலிகளின் அதிகரித்த தாக்குதலினால் சிறிது ஈடாட்டம் காணத் தொடங்கிய அதேவேளை பொதுசன ஐக்கிய முன்னணியும், அம் மூலோபாயத்தைத் தொடர்ந்தும் பேணும் நிலையில் இருக்கவில்லை. இப்போர் மூலோபாயத்தை ஆதரித்த இராணுவ அதிகாரிகள் கூட அரசியற் தலைமையினால் புறந்தள்ளப்பட்டனர் என்றே கூறலாம்.

> புதிய அரசியற் தலைமையைப் பொறுத்து அதற்கு மிக விரைவில் ஒரு பெரும் இராணுவ வெற்றி மிக அவசர தேவையாக இருந்தது. இவ் வெற்றியானது வடக்கில் பெறப்பட்டால் மாத்திரமே காத்திரமான தொன்றாகக் கருதப்படும் என்பதையும் அது தெளிவாக அறிந்திருந்தது. இதன் அடிப்படையில் தான் யாழ். நகர் மீதான படை எடுப்பிற்கு மிக வேகமாகத் திட்டங்கள் இடப்பட்டன.

புதிய அரசியற் தலைமையைப் பொறுத்து அதற்கு மிக விரைவில் ஒரு பெரும் இராணுவ வெற்றி மிக அவசர தேவையாக இருந்தது. இவ் வெற்றியானது வடக்கில் பெறப்பட்டால் மாத்திரமே காத்திரமான தொன்றாகக் கருதப்படும் என்பதையும் அது தெளிவாக அறிந்திருந்தது. இதன் அடிப்படையில் தான் யாழ். நகர் மீதான படை எடுப்பிற்கு மிக வேகமாகத் திட்டங்கள் இடப்பட்டன. ஆனால், அரசியற் தலைமையின் குறிக்கோளுக்கு ஏற்ப வகுக்கப்பட்ட இவ் இராணுவத் திட்டத்திற்கு அரசியற் தலைமையே இராணுவ ரீதியிலான விளக்கத்தையும் கொடுக்க முன்வந்தது.

இதன் பிரகாரம் முன்னைய மூலோ பாயத்தின்படி இருந்த கிழக்கின் கட்டுப்பாடு என்ற அம்சம் கைவிடப்பட்டது.

வடக்கைப் பிடித்தல் என்பதன் மூலம் கிழக்கில் புலிகளைச் செயலிழக்கச் செய்யலாம் என புதிய மூலோபாயம் வகுப்பாளர்கள் விளக்கம் அளித்தனர். வடக்கை குறிப்பாக யாழ். குடாநாட்டைப் பிடித்தல் என்பது புலிகளின் தலையை நெரித்தல் என்பதற்கு ஒப்பானதென தெரிவித்த மூலோபாயமானது, தலை நெரிக்கப்படும் பட்சத்தில் வால் செயலிழக்கும் என விளக்கம் அளித்தது.

இதன் பிரகாரமே யாழ். நகர் மீதான பெரும்படை எடுப்பொன்று நடத்தப்பட்டு 50 நாள் போரின் பின் யாழ். நகர் இராணுவத்தால் கைப்பற்றப்பட்டது. பெரும் செலவீட்டு டனும்-உயிர் இழப்புடனும் இராணுவம் மேற்கொண்ட படை எடுப்பானது 'யாழ். நகரைப் பிடித்தல்' என்ற பெயரள விலதானதொரு வெற்றியுடன் மட்டும் தற்பொழுது நின்று கொண்டுள்ளது. ஏனெனில் அதன் இராணுவ அரசியற் குறிக்கோள்கள் யாவும் இன்று தோல்வியைத் தழுவியுள்ளன என்பது மாத்திரமல்ல, இராணுவத்தை ஒரு பொறிக்குள் சிக்க வைத்துள்ளது போன்றதொரு நிலையே தற்பொழுது நிலவுகின்றது.

இராணுவம் இன்று இவ்வாறானதொரு நெருக்கடியில் சிக்கியிருப்பதற்கு அடிப்படைக் காரணங்களில் ஒன்று 'யாழ் நகரைப் பிடித்தல்' என்பதுடன் போர் ஒரு எல்லையைத் தொட்டுவிடும் என்று போட்டிருந்த கணக்கும், இதன் காரணத்தினால், போர் மூலோபாயத்தில் அடுத்த கட்டத்தைத் தெளிவாகக் கொண்டிராமையும், தனது எதிர்த்தரப்பு அதாவது விடுதலைப் புலிகள் இயக்கத்தின் போர்முனை யுக்தி எவ்வாறு இருக்கும் என்பதைப் பற்றி தப்பானதொரு மதிப்பீட்டைக் கொண்டிருந்ததுமே ஆகும்.

யாழ். நகரைக் கைப்பற்றுதல் என்ற மூலோபாயத்தின் மீது வகுக்கப்பட்ட போர் யுக்தியானது, இயன்றளவில் அதுபல ஆயிரக்கணக்கிலான - புலிகளை அழித்தல் என்பதை அடிப்படையாகக் கொண்டதாகும். இதற்கு இரு வழிகள் போர் யுக்தியில் வகுக்கப்பட்டது. ஒன்று நேரடி மோதலில் இயன்றளவு புலிகளை பெரும் அளவிலான சுடுகலன், துணைகொண்டு அழித்தலாகும். இரண்டாவது வலிகாமப் பகுதியை முற்றுகை இடுவதன் மூலம் புலிகளை இயன்றளவில் முற்றுகை இடுவதோடு அழித்தலுமாகும்.

இதன் பிரகாரம் பெருமளவில் புலிகள் பலவீனப்பட்டுப் போய்விடுவார்கள் என்ற ரீதியில் அரசின் கணீப்பீடு இருந்தது. புலிகளில் சுமார் 60 வீதமானோர் கொல்லப்பட்டோ, போரிட முடியாத நிலைக்கோ ஆக்கப்படுவார்கள் என்பது அரசின் ஆரம்ப மதிப்பீடாகும். இக்குறிக்கோளை பின்னர் அமைச்சர் ரத்வத்தையும் வேறொரு விதத்தில் வெளியிட்டிருந்தார். யாழ் நகருக்கான சமரில் 60 வீதமான புலிகள் கொல்லப்பட்டு விட்டதாக அவர் தெரிவித்திருந்தார்.

ஆனால் அரசின் குறிக்கோளானது-இதில் நிறைவேறவில்லை என்பது மட்டுமல்ல, தவறானதொரு மூலோபாயத்தின் அடிப்படை யில் போரிட்ட தனால் இராணுவம் பெரும் நெருக்கடியையும் சந்திக்க வேண்டியதொரு நிலை உருவாகியது என்றே கூறவேண்டும். இதற்குப் புலிகள் கையாண்ட போர்முறை யுக்தியானது மிகச் சிறப்பு மிக்கதொன்றாக இருந்ததே காரணமாகும்.

அதாவது அரசின் குறிக்கோளில் முக்கிய அம்சமான புலிகளைப் பலவீனப்படுததல் என்ற அம்சம் நிறைவேறாது பார்த்துக் கொண்டதோடு இராணுவத் தரப்பிற்கு கணிச மான சேதத்தையும் அவர்கள் ஏற்படுத்தத் தவறவில்லை. இச்சமரில் புலிகள் ஒரு முழு அளவினதாக மரபு வழி இராணுவம் போன்று போரிடாத அதேவேளை, தமது தேவைக்கும், வசதிக்கும் ஏற்ப கெரில்லாப் படை அணி என்ற நிலைக்கும் அப்பால் போரிட்டனர்.

புலிகளின் இப் போர்யுக்தி மூலம் எதிரிக்குப் பலத்த இழப்புக்களை ஏற்படுத்திய அதே வேளை, புலிகள் தமது உயிரிழப்புக்களைக் குறைத்துக் கொள்ளவும், அதேவேளை மக்கள் பாதுகாப்பாக வெளியேறக் கூடிய வாய்ப்பையும் ஏற்படுத்தியிருந்தனர். புலிகளின் இப்போர் முறை யுக்தியே யாழ்ப்பாணத்தை கைப்பற்றிய பின்னரும் அவ் வெற்றி குறித்து பலத்த கேள்வியை ஏற்படுத்தியிருந்தது. அதாவது அரசியல் இராணுவ ரீதியிலான அனுகூலங்கள்

தொடர்ச்சி 15 ஆம் பக்கம் பார்க்க

# சுவீஸில் நிகழ்ந்த

கடந்த 10-3-96 இல் சுவிசில் கூர் நகரில் தமிழீழ விடுதலைப் புலிகளின் சுவிஸ் கிளையினரால் நடாத்தப்பட்ட "கலை மாலை" நிகழ்ச்சி மௌன அஞ்சலியுடன் ஆரம்பமானது. இதனைத் தொடர்ந்து மங்கள விளக்கினை தமிழீழ விடுதலைப் புலிகளின் சுவிஸ் கிளையின் முழுநேர உறுப்பினர்களான சின்னமுரளியும், துஜானந்தனும் ஏற்றி வைத்தனர். பேர்ண் தமிழர் கலை கலாச்சார மன்றத்தினரின் எழுச்சிகானங்கள் இசை நிகழ்ச்சியுடன் கூர் தமிழ்ப் பாடசாலை மாணவ மாணவியர்களின் மழலை எழுச்சிப் பேச்சுக்களும், பாடல்களும் மக்களைக் கவர்ந்தன.

ஜேர்மனி வானதி வாணி நர்த்தலாலய மாணவிகளின் எழுச்சி நடனங்களுடன் சுக் பாரதி கல்வி நிலைய மாணவிகளின் நடனங்களும் இடம் பெற்றன. இதனைத் தொடர்ந்து தமிழீழ விடுதலைப் புலிகளின் சுவிஸ் பிரதிநிதி திரு. ந. முரளிதரன் அவர்கள் உரையாற்றுகையில் தமிழீழத்தின் தற்போதைய நிலைமைகள் குறித்து விளக்கியதுடன், அதற்கு நாம் இங்கு ஆற்றவேண்டிய பணிகள், பங்களிப்புக்கள் பற்றியும் எடுத்து ரைத்தார். தொடர்ந்துசுக் பாரதி கல்வி நிலைய மாணவர்களின் வில்லுப் பாட்டு இடம்பெற்றது. இதனை நெறியாழ்கை செய்த ஆசிரியைகள் திருமதி. அனுஷ் சியா சற்குணநாதன், திருமதி ரதி கமலநாதனும் வில்லிசை யைத் திறம்படச் செய்து முடித்த சிறுவர்களும் பாராட்டு க்குரியவர்களே. அத்துடன் இதே சிறுவர் களின் "இரத்தத் திலே சிவந்த மண்ணே" என்ற பாடலுக்கானது எழுச்சி நடனம் அல்ல நாட்டிய நாடகம் என்றே கூறலாம். மிகவும் சிறப்பாக அதற்கேற்ப நடன அசைவு களை நெறியாள்கை செய்த ஆசிரியையும் மாணவர்களும் மீண்டும் ஒரு முறை பாராட்டு க்குரியவர்களே. நிகழ்ச்சியின் இடையிடையே முதன் முறையாக தமிழீழ விடுதலைப் புலிகளின் சுவிஸ் கிளையினரால் புலம் பெயர்ந்து வாழுகின்ற நாடுகளில் தமிழீழ விடுதலை உணர்வுகளை வெளிக் கொணருகின்ற கலைஞர்களுக்கான நற்சான் றிதழ்களை திரு. ந. முரளிதரன் அவர்கள் வழங்கிக் கௌரவித்தார். இக்கலை மாலை நிகழ்ச்சியின் மூலம் கிடைத்த பணத்தினையும் சுவிஸ் பிரதிநிதி பெற்றுக் கொண்டார்.



www.tamilarangam.net



# கவிதைக் களம்

## பெருந்தலைவன் படை வெல்லும்!

யூஆர் மன்னிப்பது ஆரணங்கே! சந்திரிகா?
அட்டமத்துச் சனியன் தொட்டுவிட்ட துனக்கு!
தேரைகளின் "பிரித்" தொலிக்குத் தாலாட்டுப் பாட
தெரிந்தெடுத் தாயோநீ யாழ்ப்பாண மண்ணை?
கோரையென அரசியற் களம்மீது வளர்ந்துவிட்ட
கொடிய பிசாசே! உனக்குக் கொள்ளி வைக்க நாள் வரும்!
ஊரையும் மக்களையும் ஏய்ப்பதற்கா குலைக்கிறாய்
மன்னிப்பென்று?
உளறாதே தலைக்கனத்தில், உன்படை மண்கவ்வும் –விரைவிலடி!
அலரி மாளிகைக்குள் அடைகாக்கும் அண்டங்காகமே!
ஆற்றலுள்ள எம்தலைவன் பெயரை உலகமே மெச்சும்போது
குழறியழும் கோதையே! கொள்கைத் தலைவனே–வீரமதை(க்)
காணத்தான் போகின்றாய், கதறாதே பொறுத்திரு!
பலாலிக்கும் பண்ணைக்கும் இடைமிலா தமிழீழம்?.......
படித்துவிட்டு வந்துகதை தமிழீழப் படத்தை மீண்டும்!
கைதடி தொடக்கம் குமணை வரையுமின்னும்
கால்பரப்பி நிற்குதடி பிரபாகரன் ஆட்சியது!
மக்களில்லா மண்ணை பிடித்துவிட்டா யென்ற
மமதையுடன் எத்தனைநாள் துள்ளுவாய் இனிநீ?
தக்கதொரு பெரும்படை திரட்டிவர உன்படை
தாங்குமோ? தளருமோ? ஓடுமோ? பொறுத்திரு!
உக்கிவிட்ட மரமென்றா எண்ணிவிட்டாய் தமிழரினை?
சுக்குநூ றாகப் போகுமடி உன்கனவு! சுந்தரியே!
"சக்கை"யினால் இனித்தினமும் சரியப் போகுமுந்தன்
சேனைகளுக் கெம்மண்ணில் சுடுகாடே இனிமுடிவு!
ஆயுதத்தைப் போட்டுவிட்டு பேசவர ஆரைநீ–
அழைக்கின்றாய்?
அற்பப் பதரே! ஆரியக் கலப்பினம் அறியுமோடி தமிழர்வீரம்!
பாயும் புலியாகப் பச்சிளங் குழந்தையும் இனிக் கிளம்பும்,
பாதகரை விரட்டியடிக்குமட்டும் எம்மண்
ஓயுமோ இனியும்? ஓயாது, உணர்வலைகள் எழுப்ப.......
ஒவ்வொருவர் கரத்திலும் ஆயுதங்கள் ஏறும்!
பாயுங் குருதியிலே குளித்தெழுந்து உன்படையை
பெருந்தலைவன் படைவெல்லுங் காலமினி விரைந்துவரும்!

மு.வே.யோ. வாஞ்சிநாதன்

## குறளிக் குஞ்சொன்று......

மார் நிமித்தி கொப்பெறிந்து
விலாசங்கொட்டுது பார்
அரச மரமொன்று!
கிளை படர்த்தி இலை உதறி
ஆலென அழகு காட்டப்
பார்க்குது பார்!
பிடியெடா பிடியென்று
பிடித்திருந்தும்
கொப்பிழந்து
மாயப்பேய்கள் மண்ணில்
வீழ்ந்துபட
நேற்றைக்குப் புதிதாய்
அமைதியை அலறி அலறி
அரசேறி நிற்குது பார்
குறளிக் குஞ்சொன்று!
கிளையெல்லாம் காலெறிந்து
சிலிர்த்துக் சிறகடித்து
ஆணவக் குதிகுதித்துக்
கிறீச்சிடுகிறதே
கேட்டாயல்லோ?!
தலைகிழாய்ப் பறக்குது
கொதி நீரில் நீந்துகுது
எல்லா வித்தையுமே காட்டுகுதே
கடைசியில் பார்த்தால்
எல்லாம் மாயையல்லோ?!
குறளியல்லோ!
கண்டாயல்லோ?!

சுருக்கிட்டு கழுவேற்றி
கொலைசெய்துபோட்டு
செத்த சவத்தைத் தூக்கியல்லோ
சமாதானம் என்கிறது?!
மணிக்கூட்டு முள்ளின்
ஒவ்வொரு சிறு நகர்விற்கும்
சத்தற்ற சத்தங்களால்
உதிர்ப்பதுகள்
பொருளற்ற சொற்களல்லோ?!
இனியும்தான் நம்புதற்கோ?!
நம்பிக்கை என்ற நாலு
சில்லில்தான்
நகர்வது நம்வாழ்வு
ஆனாலது எங்களது தேரில்தான்.
அரசமர வேரிலல்ல
புரியுமல்லவோ?

சிங்களமா?
சகோதரம்தான் எங்களுக்கு!
மறுப்பேது?
கொதியேது? பொறாமையேது?
வாழட்டும் வாழத்துவோம்
ஆனாலோ
கல்மீது விதை விழுந்து
மண்தோன்றி
மூடி முளைத்து

வேர்பரந்து தமிழ் வாழ்ந்த
நிலமெல்லாம்
அரித்தரித்துக் கொழுக்கிறதே
சிதையேற்றாமல்
விட்டுவைப்பதற்கோ
சிங்களத்துவம்?!
தமிழீழத்
தாயாளின் தேகமெல்லாம்
கொட்டினாளோ
போர் நெருப்பை!
கெட்ட போரின் கரமொடிக்கப்
போர் செய்வோம்!
அந்தா பார்–
இளசுகளொடு பழசுகளுமாய்
வீர விழுதிட்டு விரைகின்றார்
மனிதர்!
எம் தோள் மட்டுமென்ன
விழலுக்குள் சுருள்வதற்கோ?!
கோடரி சுமப்போம்
வா...
பின்தொடர்வோம்!
ஆணிவேருடன் அரசு பிடங்கி
வேகு நெருப்பில் வீசுவோம்!
சாம்பல் மேடேறி
கதிர் வீசிக் கை வீசி
விடிவு தலையேற்றி வருவான்
எம் கதிரவன்.

செ.பொ.சிவநேசு

## விடுதலை விதை

தளராதே!
மெலிந்திருக்கும்
மனிதனே!
இது உனது கோழைத்தனத்தின்
வெளிப்பாடு–அல்ல
சுதந்திர கோபுரத்தின் நிமிர்வு
சுமைகளில் இருந்து – தப்பிக் கொள்ள
நிம்மதி கேட்டதன் நிலைமை.
மனம் என்பது!
எல்லோரும் கூறுவது போல்
இதயம் இல்லை – அதனால்தான்
கற்பனை புறா கூட
உனது கண்களை மறைக்கின்றதோ!
இனிமையான புல்லாங்குழலைக் கூட
ஓட்டையிடும் போது ஓலமிடத்தான் செய்யும்
தாத்தா நட்ட விதை – இங்கு
விருட்சமாகவுள்ளதே!
அதே போலத்தான்
இந்த விடுதலை விதையும்
நிச்சயம் உனக்கு நிழல் தரும்
அதுவரை!
உறுதியாக பற்றி பிடித்துக் கொள்
உனது கையில்
ஆயுதத்தை.

சா. அருட்செல்வி

## நிலம் வெடிக்கப் போகிறது

இடிபாடுகளுக்குள் நின்றுகொண்டு
ஒரு....
"கொடியேற்றல்" வைபவமா?
நடத்து,
நன்றாக நடத்து.
இடுகாட்டுப் பேய்களை அழை?
விருந்தோம்பு.
நாய் பூனைகளைக் கூப்பிட்டு
பாய் போட்டு பந்தி பரிமாறவிடு
"காய் கூய்" என்று கத்து
ஆர்ப்பரி.
வெடி கொளுத்தி வெற்றியை அனுபவி.
"பொல்லுக்கிழவர்" அனுருத்தவுக்கு
பொன்னாடை போர்த்திக் கௌரவி.
அலரிமாளிகைக் "குந்திதேவி"க்கு
ஆனந்தப் பூக்களால் மாலையிடு.
மீளாதிருந்த யாழ் மண்ணை
மீட்டெடுத்த பெருமாட்டியைப் பாடு.
கால் பதிக்கத் துடித்தாயே....
கவலையை விடு.
ஆளரவமற்ற வீடுகளில் ஊடுருவி
சாளரத்தை திறந்து விட்டுத் தூங்கு.

மானிப்பாய் கதிரை உன்னிப்பாய்க் கவனி
தாய் மண்ணை விற்று
வயிறு கழுவிய வள்ளல் பிரானை வணங்கு
இன்னுமின்னும்
என்னென்ன முடியுமோ செய்!
நிலம் வெடிக்கப் போகிறது
அடுத்த பாய்ச்சலுக்கே
அடுக்குப் பண்ணுகின்றோம்.
எந்தப் பொழுதிலும் இது நிகழலாம்.
அந்தக் கணம்வரை
இன்னுமின்னும்.....
என்னென்ன முடியுமோ செய்!
சூரியத் தலைவன் போரிடுவான்!
ஓரிரு நாட்கள் போலும்...
ஊரேழும் அவன் கைக்குள் அடங்கும்.
அப்போது...
ஆர்ப்பரித்தெழுந்து...
வெற்றிக்கு விழாவெடுக்கும் எமது சனம்!
அதுவரைக்கும்...
அடுத்த பாய்ச்சலுக்காய் ஒத்திகை பார்ப்போம்!

வேலணையூர் சுரேஷ்

www.tamilarangam.net



## கிளாலி......

1 ஆம் பக்கத் தொடர்ச்சி...

கிராமங்களும் இராணுவத்தின் எறிகணைத் தாக்குதலுக்கு உள்ளாகிக் கொண்டிருக்கின்றன.

கிளாலி நீரேரியைக் கடக்கும் மக்கள் தொகை அதிகரித்து வருவதால் இப் படகுச் சேவையை ஒழுங்குபடுத்தும் விடுதலைப் புலிகள் தற்போது மக்கள் தொகைக்கு ஏற்றவாறு சேவையில் அதிக படகுகளை ஈடுபடுத்தியுள்ளனர்.

அரசியற் பிரிவினரின் 30-03-96 அன்றைய அறிக்கையில் படகுச் சேவை ஞாயிறு தவிர்ந்த மற்றைய நாட்களில் பகல் இரவாக தொடர்ந்து மேற்கொள்ளப்படும் எனத் தெரிவித்துள்ளது.

அவசர அவசரமாக மக்கள் பீதியுடன் வெளியேறுவதால் தமது உடமைகளைக் கூட சரியாக எடுத்து வரமுடியாத சூழ்நிலைக்கு உள்ளாகியுள்ளனர் எனத் தெரியவருகிறது.

### வெற்றிலைக்கேணியில்......

இத்தாக்குதலையடுத்து, இத்தாக்குதலில் 2 அதிகாரிகள் உட்பட 14 கடற்படையினர் கொல்லப்பட்டதாக சிறிலங்கா பாதுகாப்பமைச்சு அறிவித்திருந்தாலும் இதில் கொல்லப்பட்ட படையினரின் எண்ணிக்கை மிக அதிகமாக இருக்கலாம் எனத் தெரியவருகின்றது. இவ் கடற்சமரை நடத்திய கடற்புலிகளில் 2 கடற்கரும்புலிகள், 8 பெண் போராளிகள் உட்பட 21 கடற்புலிகள் வீரகாவியமாகி விட்டனர்.

வீரகாவியமாகிவிட்ட வீரவேங்கைகளின் விபரம் வருமாறு:

1) கடற்கரும்புலி மேஜர் ஜெகநாதன் (சங்கரப்பிள்ளை தவராசா, பூநகரி)
2) கடற்கரும்புலி கப்டன் இளையவள் (இராசமலர் இராசலிங்கம், திருமலை)
3) லெப். கேணல் விமல் (பரந்தாமன் இளங்கோவன், வல்வெட்டித்துறை)
4) லெப். கேணல் எழில்வண்ணன் (சிவலிங்கம் முரளிதாஸ், அம்பலை)
5) மேஜர் மலர்மொழி (நளாயினி கடற் தாக்குதற் படைத் தளபதி, அகிலமலர் குழந்தைவடிவேல், யாழ்)
6) மேஜர் செம்மலை (மரியநாயகம் இருதயராஜ், நெடுந்தீவு)
7) மேஜர் மன்னவன் (சந்தியாப்பிள்ளை யூட் ராஜ்குமார், இராசாவின் தோட்டம், யாழ்)
8) மேஜர் மோகன் (சிவபாதம் பாஸ்கரன், தாளையடி)
9) மேஜர் தனியன் (திருஞானசம்பந்தர் விக்னேஸ்வரன், யாழ்ப்பாணம்)
10) கப்டன் இராவணன் (இம்ரான் பாண்டியன் விமான எதிர்ப்புப் படையணி)
11) கப்டன் கனகா (சர்மிளா மனோகரன், வசாவிளான்)
12) கப்டன் திருமாறன் (தெய்வசீலன் டானியல், மட்டக்களப்பு)
13) கப்டன் நல்லவன் (கோலாப்பிள்ளை, பூபாலசிங்கம், மட்டக்களப்பு)
14) கப்டன் விதுனன் (கருப்பையா பாலகிருஸ்ணன், மூதூர்)
15) கப்டன் கரன் (சந்திரசேகரம் தர்மகண்ணன், நாகர்கோவில்)
16) லெப். மகேஸ்வரி (ரேவதி இராசகுரு, ஊரிக்காடு)
17) லெப். கிருசா (விமலாவதி பரமசாமி, காரைநகர்)
18) லெப். செல்வகுமார் (முருகையா விஜயராஜ், பூநகரி)
19) லெப். எழுமதி (கலிஸ்டா இம்மானுவேல், ஊர்காவற்துறை)
20) லெப். குமுதினி (ஆனந்தஜோதி தாண்டவம், கண்டி)
21) லெப். கீதா (நிரஞ்சனா ஆரோக்கியநாதன், குருநகர்)

தாயக மண்ணை மீட்டெடுப்பதற்காய் அம் மண்ணிலேயே விதையாகிய இவ் வீரவேங்கைகளுக்கு எமது வீரவணக்கத்தைச் செலுத்துகின்றோம்.

# எம் கண்முன்னே பல்கலைக்கழக மாணவன் மூச்சுத்திணறி துடிதுடித்து இறந்தார்

"தற்கொலைப் படையாளியின் பாரம் எவ்வளவு என்று பார்க்கிறேன்" என்று கூறிய இராணுவ அதிகாரி எனக்கு அருகில் நின்ற பல்கலைக்கழக மாணவனின் கழுத்தில் பிடித்துச் சுவரோடு சேர்த்து தூக்கினார் இதனால் மூச்சுத் திணறிய அந்த மாணவன் துடிதுடித்து இறந்தார்.

இவ்வாறு கொழும்பு செல்வதற்காகச் சென்று இராணுவத்தால் சித்திரவதை செய்யப்பட்டுத் திருப்பி அனுப்பப்பட்ட சாவகச்சேரியைச் சேர்ந்த சந்திரன் (வயது 31) என்பவர் தான் நேரில் பார்த்த இச்சம்பவம் பற்றி யாழ்ப்பாணச் செய்தித்தாள் ஒன்றிக்கு தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

இம்மாதம் (12-02-96) 12ஆம் திகதி கொழும்பு செல்லவெனச் சென்ற என்னையும் இன்னும் பல நூற்றுக்கணக்கான பயணிகளையும், வவுனியா தாண்டிக்குளம் இராணுவ முகாமில் கொளுத்தும் வெயிலில் பலமணி நேரம் நிற்கவிட்டனர். பின்னர் அங்கு வந்த இராணுவச் சிப்பாய் எம்மில் 75 பேரையே முதலில் கொழும்பு செல்ல அனுமதிக்கப் போவதாக கூறியதும் நானும் சில இளைஞர்கள், யுவதிகள், வயோதிபர்கள் உட்பட எழுபத்தைந்து பேரும் அச்சிப்பாயுடன் சென்றோம். எம்மை அழைத்துச் சென்றவர்கள் தாண்டிக்குளம் இராணுவ முகாமுக்கு அண்மையில் உள்ள காமினி மகாவித்தியாலயத்தில் எம்மை 5 நாட்களாக பால் வேறுபாடின்றி அடைத்து வைத் தனர். இந்நாட்களில் எம்மைப் புகைப்படம் பிடித்தும் எம்மைப் பற்றிய சகல விபரங்கள், அடையாள அட்டை, உடைமைகள் என்பவன வற்றை பெற்றுச் சென்ற சிப்பாய்கள் இவை புலனாய்வுப் பிரிவினருக்கு அனுப்பி வைத்து அங்கிருந்து பொலிஸ் பிரிவின் அனுமதி கிடைத்த பின்னே உங்களை கொழும்பு செல்ல அனுமதிப்போம் எனத் தெரிவித்தனர். ஆறாம் நாள் பொலிசார் புலனாய்வுப் பிரிவுக்கு கொடுத்த தகவலை யடுத்து என்னுடன் சேர்த்து எண்மரை 'தற்கொலைப் படையாளிகள்' என்ற பெயரில் இராணுவத்தினரிடம் கையளித்தனர்.

நானும், இரு யுவதிகளும், ஒரு பல்கலைக்கழக மாணவனும், ஒரு வயோதிபரும் உட்பட எண்மருமே 'தற்கொலைப் படையாளிகள்' என்ற பெயரில் தனியான ஓர் அறைக்கு இராணுவத்தால் அழைத்துச் செல்லப்பட்டோம். அவ்வறைக்கு வந்த இராணுவ அதிகாரி ஒருவர், "நீங்கள் புலிகளின் தற்கொலைப் படைதானே- உங்களை கொழும்பு செல்ல விடமாட்டோம்" என்று கூறவே எம்மோடு நின்ற ஒரு யுவதி தான் திருமணம் செய்வதற்காக வெளிநாடு செல்வதற்கு தன் தந்தை யுடன் வந்ததாகக் கூறியபோது அதனை மறுத்து யுவதியின் கன்னத்தின் மீது பலமாகத் தாக்கினார். இரத்தம் வழிந்த நிலையில் காணப்பட்ட யுவதி தன் தந்தையின் அருகே அழுத வண்ணம் நின்றார்.

பின்னர் எனக்கு அருகில் நின்ற பல்கலைக்கழக மாணவனை "நீ தற்கொலைப் படையாளிதானே" என்று கேட்டதும் "இல்லை! நான் பல்கலைக்கழக மாணவன்" என்று சான்றிதழ்களைக் காட்டியபோதும் அதனை மறுத்த இராணுவ அதிகாரி அம் மாணவனின் கழுத்தைப் பிடித்து நெரித்தபோது தன்னை ஒன்றும் செய்யாதீர்கள் எனக் கேட்கவே, "தற்கொலைப் படையாளியின் பாரம் எவ்வளவு என்று பார்க்கப் போகிறேன்" என்று கூறியபடி அவ்விளைஞனின் கழுத்தைப் பிடித்து சுவரோடு சேர்த்துத் தூக்கிய போது மூச்சுத் திணறி துடிதுடித்து பரிதாபகரமாக எம் கண்முன்னே மரணமானார்.

எனக்கு அந்த இளைஞனைத் தடுத்து வைத்திருந்த நான்கு நாட்களில் தான் தெரியும். மருதானைக்குச் செல்லவிருந்த அந்த மாணவன் பெயர் மதியழகன் எனக்கூறிய அவர், மேலும் தொடர்கையில் இதைக் கண்ட எமக்கு என்ன செய்வதென்று புரியாமல் விழித்துக் கொண்டு நின்றோம்.

அப்போது அவ்விளைஞனின் சடலத்தை அவ்விடத்திலேயே போட்டுவிட்டு என்னை நோக்கி வந்து "உங்களுக்கும் இப்படிச் செய்து அனுப்ப முடியும்" என்று கூறி என்னைக் காலால் பலமுறை உதைத்தார். அந்த இராணுவ அதிகாரி "அந்த இளைஞனுக்கு நேர்ந்த கதிதான் எமக்கும் என்று எமக்குள் எண்ணியபடி நின்ற எங்களைப் பார்த்து, அந்த இளைஞனின் சடலத்தைத் தூக்கிக் கொண்டு வெளியே போகும்படி சொன்னார்கள். மேலும் "இனிமேல் கொழும்புக்கு வரக்கூடாது போ" என்று கூறி எம்மைத் திருப்பி அனுப்பிவிட்டனர்.

தப்பினேன் பிழைத்தேன் என்று நினைத்தபடி ஒருவாறு வந்து விட்டேன் வந்துவிட்டேன். இனி கொழும்புக்கே போவதில்லை என்றார். இராணுவத்தின் துன்புறுத்தலால் அதிர்ச்சியடைந்து நோய்வாய்ப்பட்ட நிலையிலேயே அவர் இத்தகவல்களை செய்தியாளருக்குத் தெரிவித்தார்.

# சந்திரிகா அரசின் ......

13 ஆம் பக்கத் தொடர்ச்சி ....

எதுவுமற்ற நிலையில் யாழ். நகர் இராணுவத்திடம் வீழ்ச்சி கண்டது. இந்நிலையானது சில வாரங்களிலேயே அரசிற்கும், இராணுவத்தினருக்கும் பெரும் சுமையானதாக மாறியது.

அதாவது வலிகாமத்தில் பெருந்தொகைத் துருப்புக்களை முடக்க வேண்டிய வந்தமையானது பெரும் செலவீடானது மட்டுமல்ல, ஏனைய இடங்களில் இராணுவத்தின் பெரும் அசைவிற்கு அது விட்டுக் கொடுப்பதாகவும் இருக்கவில்லை.

இதேசமயம் யாழ். குடாநாட்டின் மீதான அடுத்த கட்ட நடவடிக்கை குறித்து அரசதரப்பில் அடிக்கடி பேசப்பட்டதாயினும் அது குறித்து இதுவரை முயற்சி ஏதும் நடைபெறவில்லை என்பது வெளிப்படையானதாக இருந்தது. இந்த நிலையில், இராணுவத்தின் மூலோபாயமானது நிச்சயமாக ஒரு நெருக்கடிக்குள் உள்ளாகியுள்ளது எனக் கூறலாம்.

ஏனெனில், யாழ். நகரைப் பிடித்தல் என்பது மட்டும், யாழ். குடாநாட்டின் மீதான படையெடுப்பின் முழுமையான நோக்கமாக இருக்க முடியாது. ஏனெனில் வலிகாமத்தில் மட்டும் இராணுவம் நிலைகொண்டிருப்பதென்பது ஒருவகையில் முற்றுகைக்கு உள்ளாகியிருப்பது போன்றதே.

இதனை உணர்த்துமாப் போன்ற சம்பவங்களும் இடம்பெறாமல் இல்லை. சிறிலங்கா இராணுவத்தரப்பால் குடாநாட்டில் நிலைகொண்டுள்ள படையினருக்குத் தேவையான விநியோகத்தை ஒழுங்காக மேற்கொள்ள முடியாமல் இருப்பது சகலருக்கும் தெரிந்த விடயம். தரைவழிப்பாதை முற்றாகத் தடைப்பட்டுள்ளது என்ற நிலை ஒருபுறம் இருக்க கடல் வழி, வான்வழி, விநியோகங்களிலும் பெரும் சிரமத்தின் மத்தியிலேயே மேற்கொள்ளப்படுகிறது. இம் முயற்சியில் விமானப்படை விமானங்கள் இழக்கப்பட்டதும் உண்டு.

ஆனால் இவ்வாறானதொரு நெருக்கடி யாழ். நகர் மீதான படை எடுப்பிற்கு முன்னதாகவே இருந்து வந்தது. பலாலியிலும், தீவகத்திலும், ஆனையிறவிலும் உள்ள படையினருக்கு விநியோகம் என்பது பகீரத பிரயத்தனத்தில் செய்யப்படும் ஒன்றாக இருந்தது. இந்த நிலையில் மேலும் பல்லாயிரக் கணக்கான துருப்புக்களை தரைவழி விநியோகம் இன்றியும் கடல் மற்றும் வான் வழி விநியோகத்தை சீராக்காமலும் வலிகாமத்தில் இறக்கியமையானது அடுத்த கட்ட நடவடிக்கை மூலம் அவற்றைச் சீர்செய்து கொள்ள முடியும் என்ற நம்பிக்கையின் அடிப்படையானதே ஆகும்.

ஆனால் நிலைமை அவ்வாறு இருப்பதாகத் தெரியவில்லை. மூலோபாயத்தின்படி அடுத்த கட்ட நகர்விற்குச் செல்லக்கூடிய நிலையில் இராணுவம் இருப்பதாக இருந்தால் இதுவரையில் அதாவது யாழ்நகர் மீதான படை எடுப்பை முடித்து சுமார் பத்து வாரங்கள் கடந்துவிட்ட நிலையிலும் அடுத்த நடவடிக்கையை இராணுவம் எடுக்காது இருந்திருக்க மாட்டாது.

இதேசமயம், இராணுவம், கிழக்கில் 'ஒப்பரேசன் ரிவிகிரண' என்ற பெயரில் மேற்கொண்ட இராணுவ நடவடிக்கையானது ஒரு கண் துடைப்பு நடவடிக்கை என்பது வெளிப்படையானதொன்று. இவ் இராணுவ நடவடிக்கையினை இராணுவம் விடுதலைப் புலிகளைச் சந்திக்காமலே முடித்துக் கொண்டமை இதன் நோக்கத்தை வெளிக்காட்டப் போதுமானதாக இருந்தது.

அத்தோடு வலிகாமத்தில் பல்லாயிரக்கணக்கான துருப்புக்களைக் குவித்துள்ள நிலையில் இராணுவ பாதுகாப்பான விநியோக வழி ஒன்றைப் பெறுதல் குறித்து மூலோபாயத்தில் வகுக்காமல் இருந்திருக்க முடியாது. அதாவது வவுனியா ஊடாகவொரு தரைவழிப்பாதையை திறப்பது குறித்து மூலோபாயத்தில் திட்டம் இடப்பட்டே இருந்திருக்கும். இது குறித்துப் பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் ஜெனரல் ரத்வத்தை மற்றும், சனாதிபதி சந்திரிகா ஆகியோர் பிரஸ்தாபிக்காமல் இல்லை.

இந்த ரீதியில், சந்திரிகா அரசின் மூலோபாயமானது நிச்சயமாக யாழ். குடாநாட்டை முழுமையாகக் கைப்பற்றுவதற்கும், வவுனியாவில் இருந்து ஒரு தரைவழிப்பாதையைத் திறப்பது குறித்தும் திட்டத்தைக் கொண்டிருப்பதோடு, கிழக்கைப் பேணுவதற்கான வழிமுறைகளையும் கொண்டதாகவே வகுக்கப்பட்டிருக்க முடியும்.

ஆனால் யாழ். குடாநாட்டில் மூன்றிலொரு பகுதியில் போரை நடத்தியதுடன் மூலோபாயம் பெரும் நெருக்கடிகளை எதிர்நோக்க வேண்டி வந்துள்ளது என்பதையே இன்றைய நிலை காட்டுகின்றது. அதாவது இம்மூலோபாயத்தின்படி போரை நடத்திச் செல்ல முடியுமா? அவ்வாறு நடத்திச் சென்றாலும் கூட புலிகளை இராணுவ ரீதியில் தோற்கடிக்க முடியுமா? தோற்கடிக்கக் கூடிய ஆற்றல் இராணுவத் திற்கு உண்டா? என்ற கேள்வியை எழுப்பியுள்ளது.

இவற்றைவிட தற்பொழுது அரசிற்கு மிகவும் சிக்கலானதும் மோசமானதுமான பிரச்சினையாக எழுந்து ள்ளது- வடக்கு-கிழக்கிற்கு வெளியில் எவ்வாறான பாதுகாப்பு யுக்திகளைக் கையாள்வது என்பதாகும். சிறிலங்கா அரசின் கணிப்பின்படி வடக்கு-கிழக்கிற்கு வெளியில் குறிப்பாக கொழும்பில் பல குண்டுத் தாக்குதல்கள் இடம்பெறுவதற்கான சாத்தியங்கள் நிறைய உண்டு என்பதாகும். அத்தோடு எல்லையோரக் கிராமங்கள் மீது தாக்குதல் இடம்பெறலாம் எனவும் அரசு கருதுகின்றது.

இந்த நிலையில் சந்திரிகா அரசானது இன்று வகுக்க வேண்டிய போருக்கான மூலோபாயம் முன்னைய திட்டங்களை விட விரிவானதாகவும் பலநோக்குக் கொண்டதாகவும் இருக்க வேண்டிய நிர்ப்பந்தம் கொண்டதாக இருக்கின்றது. அதாவது வடக்கு-கிழக்கில் புலிகளை ஒடுக்குதல் என்பது மட்டுமல்ல தென்னிலங்கையில் குறிப்பாகத் தலைநகரத்தைப் பாதுகாத்தல் என்பது தொடர்பாகவும் விரிவான அம்சங்களைக் கொண்டிருக்க வேண்டியிருக்கும்.

இந் நிலையில் கடந்த 10 மாதப் போரில் சந்திரிகா அரசானது எண்ணியது போல் புலிகளைத் தோற்கடிக்க முடியவில்லை என்பது மட்டுமல்ல- போர் தானாகவே இலங்கை பூராகவும் பரவிவிட்டது என்றதொரு நிலையே ஏற்பட்டு விட்டது. சந்திரிகா அரசின் போர் மூலோபாயமே அசைய முடியாத ஒரு நெருக்கடிக்குள் இராணுவத்தைச் சிக்க வைத்துள்ளது என்றே கொள்ளலாம். இந்த நிலையில் சந்திரிகா அரசின் முன்னால் இராணுவ தீர்வின் அடுத்த கட்டம் என்ன என்பது குறித்து பலமான கேள்வி உள்ளது. 'அதாவது முடங்கிப்போன தற்போதைய மூலோபாயத்தையே ஏதாவது வழியில் தொடர்வதா? அன்றிப் புதியதொரு மூலோபாயத்தை வகுக்க முனைவதா என்பதே அதுவாகும்.

www.tamilarangam.net

# விரியும் போர்முனைகளால் திணறும் சிறீலங்கா அரசு

இராணுவ குவிப்பில் இன்று வடக்கு கிழக்கு மாகாணங்களுடன் கொழும்பும் போட்டி போடுகின்ற நிலை ஏற்பட்டுள்ளது. பாதுகாப்பு நிலைமைகளில் ஏற்பட்ட திடீர் திருப்பங்கள் வடக்கு கிழக்குடன் கொழும்பு மாநகரிலும் இராணுவ பிரசன்னத்தை அதிகரிக்கும் நிலைக்கு அரசைத் தள்ளியுள்ளது. முன்னர் வடக்கு கிழக்கு பகுதிகள் மட்டுமே "போர் முன்னரங்கு" **(War Front)** என்ற பதத்தால் அழைக்கப்பட்டன. இந்தப் பட்டியலில் கொழும்பும் தற்போது இணைக்கப்பட்டுள்ளது. இன்று கொழும்பும் "போர் முன்னரங்கு" என்ற பதத்தினால் கொழும்பு விமர்சகர்களால் அழைக்கப்படுகின்றது. கொழும்பின் மத்தியில் ஜனவரி–31ஆம் திகதி நடைபெற்ற பாரிய குண்டுத்தாக்குதல் இதனால் சிறிலங்காவின் பொருளாதார நிலையின் உறுதியற்ற தன்மையென்பன கொழும்புநகரின் பாதுகாப்பை பொலிசாரிடமிருந்து இராணுவத்தை மாற்ற அரசாங்கத்தை நிர்ப்பந்தித்துள்ளது. இந்நிலையில் கொழும்பு நகரின் பாதுகாப்பிற்கு மேலதிக இராணுவத்தை போர் தீவிரமாக நடைபெறும் வடக்கிலிருந்தா, கிழக்கிலிருந்தா அதிகளவில் எடுப்பது என்பதே சிறிலங்கா பாதுகாப்பு வட்டாரங்களில் இன்று எழுந்துள்ள பிரச்சினை.

## படை நகர்வுகள்

ஏற்கனவே கடந்தமாதம் கிழக்கின் மட்டக்களப்பு மாவட்டத்தில் ரிவிகிரண இராணுவ நடவடிக்கைக்காக கொழும்பிலிருந்த பெருமளவு படையினர் அனுப்பப்பட்டிருந்தனர். வடக்கில் 'ரிவிரச' இராணுவ நடவடிக்கைக்காக கிழக்கிலிருந்து பெருமளவு படையினர் கடந்த ஆண்டின் ஆகஸ்ட் மாதத்தில் யாழ்ப்பாணத்திற்கு நகர்த்தப்பட்டிருந்த நிலையில்தான் கொழும்பிலிருந்து மேலதிக படைகள் ரிவிகிரண நடவடிக்கைக்காக மட்டக்களப்பிற்கு ஜனவரி மாத ஆரம்பத்தில் அனுப்பிவைக்கப்பட்டிருந்தனர். கொழும்பு நகருக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ள இவ்வேளையில் கிழக்கிற்கு அனுப்பப்பட்ட மேலதிக படையினரை கொழும்பிற்கு மீண்டும் அழைப்பது என்பது கிழக்கில் ஏற்கனவே பெருமளவு பகுதிகளை தம்வசம் எடுத்துள்ள விடுதலைப்புலிகளுக்கே வாய்ப்பாகிவிடும் என சிறிலங்கா பாதுகாப்பு வட்டாரங்களில் ஒரு சாரார் எச்சரிக்கின்றனர்.

கிழக்கிலிருந்து வடக்கிற்கு அனுப்பப்பட்ட படையினரை மீண்டும் கிழக்கிற்கு எடுத்து அதன்மூலம் கிழக்கிற்கு கொழும்பிலிருந்து அனுப்பிய மேலதிக படைகளை கொழும்பிற்கு திருப்பி அழைத்துக் கொள்வதோ அல்லது வடக்கில் நிலைகொண்டுள்ள படையினரில் ஒருபகுதியினரை கொழும்பின் பாதுகாப்பிற்காக எடுத்துக்கொள்வதோ 'ரிவிசர' இராணுவ நடவடிக்கைமூலம் ஆக்கிரமித்த வலிகாமத்தைப் படையினர் இழந்தவிடவே வழிசெய்யும் என மற்றுமொரு சாரார் எச்சரிக்கின்றனர். ரிவிசர படையினரை அழைப்பதை படை உயர் அதிகாரிகள் ஆட்சேபித்து வருகின்றனர்.

இந்த எச்சரிப்புக்களின் மத்தியில் அரசு தன் பாதுகாப்புக் கருதியும் தனது தளமான கொழும்பு நகரின் பாதுகாப்புக் கருதியும் கிழக்கிற்கு ரிவிகிரண நடவடிக்கைக்காக கொழும்பிலிருந்து அனுப்பிய மேலதிக படையினரில் ஒரு தொகுதியினரை அவசரமாகத் திருப்பியழைத்துள்ளது. இதன்மூலம் கிழக்கில் ஏற்பட்டுள்ள வெற்றிடத்தை நிரப்ப வடக்கிலிருந்து ரிவிசர இராணுவ நடவடிக்கையில் பங்குபற்றிய ஒரு தொகுதி படையினர் கிழக்கிற்கு நகர்த்தப் பட்டுள்ளனர். இவ்வாறு வடக்கிலிருந்து கிழக்கிற்கு நகர்த்தப்பட்டுள்ள படையணிகளின் பிரிகேடியர் ஜனாகபெரேரா தலைமையிலான **Reserve Srtike Force** எனும் விசேட நடவடிக்கை படையின் ஒரு தொகுதியினரும் அடங்குவர். இந்தப் படைப்பிரிவைக் கொண்டதே இராணுவத்தின் 53ஆம் பிரிகேட் ஆகும். இது ரிவிசர நடவடிக்கையில் கோண்டாவிலிலிருந்து கொழும்புத்துறையூடாக யாழ்ப்பாண நகருக்கான இறுதிக்கட்ட நகர்வை மேற்கொண்டது என்பது குறிப்பிடத்தக்கது. எனினும் வலிகாமத்தில் தொடர்ந்து இருக்க வேண்டும் என்பதற்காக பிரிகேடியர் பி.ஏ கருணாதிலக தலைமையிலான 51ஆம் பிரிகேட்டும் பிரிகேடியர் நீல்டயஸ் தலைமையிலான 52ஆம் பிரிகேட்டும் யாழ்ப்பாணத்திலேயே தங்கியுள்ளனர். படை அதிகாரிகளின் வற்புறுத்தலின் பேரிலேயே இந்த இரு பிரிகேட்டுக்களையும் யாழ்குடாநாட்டில் தங்க வைக்க அரசு இணங்கியிருக்கிறது. இவ்வாறு கொழும்புநகருக்கு ஏற்பட்ட அச்சுறுத்தல் வடக்கு கிழக்கு கொழும்பு என படையினரை சுற்றிச் சுற்றி நகர்த்தும் வேடிக்கை விளையாட்டுக்கே அரசை இட்டுச்சென்றுள்ளது.

## வேறுபட்ட மூலோபாயம்

அன்று ஐ.தே.க அரசின் போர் மூலோபாயம் வித்தியாசமானதாகவே இருந்தது. கிழக்கிலும், வடக்கில் வவுனியாவிலும் தன்பிடியை அறுக்கி நீண்டகால பொருளாதார உளவியல் நெருக்கடிக்கு தமிழ்மக்களை உள்ளாக்கி தனது இராணுவ நடவடிக்கைகளை இப்பகுதியினுள்ளேயே மட்டுப் படுத்திக்கொண்டது. இதன்மூலம் ஐ.தே.க அரசு தன் சுயபாதுகாப்பை உறுதி செய்வதற்கு முனைந்தது. இந்த மூலோபாயம் நீண்டகாலத்திற்குப் பின்பே வெற்றியா தோல்வியா என்ற பெறுபேற்றைக் காட்டக்கூடியது. ஆனால் சந்திரிகாவின் பொதுஜன

**துஷ்யந்தன்**

ஐக்கிய முன்னணி அரசோ இதற்கு மாறாக தன் போர்த்திட்டத்தை வகுத்தது. பெரும்பாண்மை பலத்தைப் பாராளுமன்றத்தில் கொண்டிராத பொ.ஐ.மு அரசுக்கு வடக்கு கிழக்குப் போரில் உடனடி வெற்றியைக் காட்டவேண்டிய நிர்ப்பந்தம் இருந்தது. அரசியல் ரீதியாக தனது எதிர்காலத்தை பலமாக்க சந்திரிகா அரசிற்கு இது முக்கியமான–தாக இருந்தது. இதன் உந்துதலே ரிவிசர இராணுவ நடவடிக்கையும் யாழ்ப்பாணத்தை ஆக்கிரமித்ததுமாகும். புலிகளின் இதயத்தைத் தாக்கிவிட்டதாக ரிவிசர இராணுவநடவடிக்கையின் முடிவில் பிரதிப்பாதுகாப்பு அமைச்சர் ரத்வத்த பெருமைப்பட்டுக் கொண்டார். ஆனால் இந்தப் பெருமை கடந்த ஜனவரி 31ஆம்திகதி சிறீலங்காவின் இதயப் பகுதியும் நிதி மையமுமான கொழும்பு கோட்டையில் இடம்பெற்ற குண்டு வெடிப்புடன் தவிடுபொடியானது.

## கொழும்பே முக்கியம்

இந்த குண்டவெடிப்பு கொழும்பின் ஒரு பொது இடத்தில் நடைபெற்று அதில் அரசுக்கு பெரியளவில் தாக்கம் ஏற்படாது விட்டிருந்தால் ஜனாதிபதி சந்திரிகா ஆழ்ந்த அனுதாபமும் அதிர்ச்சியும் வேதனையும் தெரிவித்து ஒரு அறிக்கையோடு நின்றுவிட்டிருப்பார்.

ஆனால் குண்டு கொழும்பின் அதிகூடிய பாதகாப்பான இடத்தில் வெடித்தமையும், இந்தியாவின் சோதிடரான பார்த்தசாரதியின் ஏழரைச்சனி எச்சரிப்பும் சந்திரிகாவை ஓரேயடியாக நிமிர்ந்து உட்காரவைத்தது. அவரின் சொந்த பாதுகாப்பு நலனில் ஏற்பட்ட அக்கறையே. கொழும்பு இராணுவத்திடம் ஒப்படைக்கப்பட்டமைக்குக் காரணமாகும். கொழும்பில் படைகளைக் குவிப்பது வடக்கு கிழக்கு நிலைமையை கைமீறிச்செல்ல வழிவகுக்கும் என படை அதிகாரிகளின் எச்சரிப்பும் ஜனாதிபதிக்கு இரண்டாந்தர விடயமாகவே படுகின்றது. மூன்று துவாரங்கள் கொண்ட ஒரு படகின் ஓட்டியிடம்: இவற்றில் ஏதாவது ஒரு ஓட்டையை அடைப்பதற்கே அடைப்பான் உள்ளது. ஓட்டியினால் நிச்சயமாகப் படகைக் காப்பாற்ற முடியாது. இதுவே சந்திரிகா அரசின் இன்றைய நிலை.

# எத்தனை எத்தனை ...

நடுப்பக்கத் தொடர்ச்சி...

இல்லை. இனி என்னத்துக்குத்தான் வீடுவாசல் எனக்கு?" விரக்தியோடு – அலுப்போடு வார்த்தைகள் வெளிவந்தன.

குண்டு விழுந்து கிணறுபோல் தோன்றிய குழியைக் காட்டினார். "வளவு துப்பரவாக்கிறபோது குப்பைகளைப் போட்டதால குழி நிரவி வந்திட்டுது. இதைவிடப் பெரிய கிடங்காய் இருந்தது" என்று கூறியபடி, காலால் மண்ணை எத்திக்கொண்டு வந்தவர், குனிந்து நிலத்தில் எதையோ எடுக்கின்றார். ஏ வடிவத்தில் நெளிநெளியான ஒரு காப்பின் பாதித்துண்டு. 'இது' என்று சொல்லத் தொடங்கிய அவர், சற்றுத் தாமதித்து......... "இது என்ர மனிசி போட்டிருந்த காப்பின் ஒரு துண்டு. முக்கால் பவுண் இருக்குமில்லையா?" என்றார்.

'ஓமோம்'

"அவ தாலிக்கொடியும் போட்டிருந்தவ. அது எங்கை சிதைஞ்சுபோய் விழுந்துதோ........ தெரியாது. அண்டைக்கு அந்தா....... அந்தஇடத்தில........ மச்சாள்காறியிட ஒரு தோடு கிடந்து எடுத்தனான்."

"இன்னும் இப்பிடித்தான் வேறையும் நகைத்துண்டுகள் கிடக்கும்........ எல்லோரையும் சும்மா உள்ளுக்க வரவிடாதேயுங்கோ."

"இப்படிக் கிடைக்கிற துண்டுகளை எல்லாம் சேர்த்து ஏதாவது ஒரு பொருளாய்ச் செய்து, அதுகளுடைய ஞாபகமாக வைத்திருக்கப் போகின்றேன்." இழந்துபோன நிம்மதியை இந்த அற்பப் பொருளிலாவது பெறலாம் என்கின்ற ஏக்கம், அவர் பார்வையிலும் பேச்சிலும் தெரிந்தது.

"வாங்கோவன், ஏதாவது ஒரு இடத்திலிருந்து கதைப்பம்."

"இஞ்ச எங்கை இருக்கிறது? வாங்கோ அங்கபோய் இருந்து கதைப்பம்" என்று கூறியவராக, அவர்கள் வீட்டுக் கோடிப்பக்கமாக இருந்து வீட்டுக்கு அழைத்துச் செல்கின்றார். அதுவும் அந்தவீட்டின் பின்முற்றம்தான். அங்கிருந்த நீளவாங்கில் உட்கார்ந்துகொள்கின்றேன். அவரும் பக்கத்தில் இருந்துகொண்டார்.

நான் எனதுபோட்டியை ஆரம்பிக்கின்றேன். அதற்குள் பக்கத்து வீட்டுக்காரரான வாமதேவனும் மனைவியும், முன் வீட்டுக் கந்தசாமியும் பிள்ளைகளும் மைத்துனியுமாக எல்லாரும் வந்துசேர்ந்து விட்டனர். அது எனக்கு இன்னும் இலகுவாயிற்று. ஏனென்றால், அந்தக் குண்டுவீச்சு அடுத்தடுத்த வீடுகளிலிருந்த இந்த மூன்று குடும்பங்களிலும் உறுப்பினர்களைப் பலி யெடுத்துவிட்டது.

வேலாயுதத்துக்கு வயது முப்பத்தொன்பது. கோகிலவாணியை அவர் மணம்முடித்து எட்டு ஆண்டுகள்தான். ஏழு வயதில் கிருஷாந்தன் என்று ஒரு மகன்.

வேலாயுதத்தின் மனைவியின் பெற்றோரும் சகோதரிகள் யோகசிறீ, குலசிறீ, கலைமகள், திருமகள், எல்லாரும் ஒரே காணியில் – புறம்பான வீட்டில் வாழ்ந்து வந்தனர்.

மத்திய கிழக்கு நாடுகளில் சில வருடங்கள் வேலை செய்த வேலாயுதம், தற்பொழுது தோட்டம் செய்துவந்தார்.

ஆடி 9ஆம் திகதி 'முன்னோக்கிப் பாய்தல்' நடவடிக்கை ஆரம்பமாகியதைத் தொடர்ந்து ஒரே ஷெல் வீச்சுக்கள். அன்றைய பொழுது ஒருவாறு கழிந்தாலும் இரவு படுபயங்கரமாக இருந்தது. சின்னவன் கிருஷாந்தனையும் வைத்துக் கொண்டிருக்க மனமில்லை. எனவே, வேலாயுதம் குடும்பமும் மைத்துனிமார், மாமன், மாமி எல்லோருமாக அதிகாலை மூன்று மணிக்கு, கொக்குவில் பிள்ளையார் கோவிலில் போய் இருந்தனர். இரவு எவருக்குமே தூக்கமில்லை.

மறுநாள் 10ஆம் திகதி விடிந்துகொண்டிருந்தது. கிருசாந்தனுக்குத் தேநீர் குடிக்கும் நேரம். தேநீர் வேண்டுமென்று அடம்பிடிக்கத் தொடங்கிவிட்டான். இரவு முழுவதும் கண்விழித்திருந்த அலுப்பு. கால் முகத்தைக் கழுவி காலைக் கடனை முடிப்பதற்காக, வேலாயுதம், மனைவியையும் அழைத்துக் கொண்டு வீட்டிற்குப் புறப்பட்டார். அவர்கள் புறப்படுவதைக் கண்ட வேலாயுதத்தின் மனைவியின் சகோதரிகளான யோகசிறீ, குலசிறீ இருவரும் இவர்களோடு கூடவே புறப்பட்டனர்.

இவர்கள் வீட்டிற்கு வந்தபோது, அவர்களது அயல் வீட்டுக்காரரும் உறவினருமான வாமதேவன் குடும்பத்தினர் ஏற்கனவே எழுந்துவிட்டனர். வாமதேவன் தற்போது போராளிகள் முகாம் ஒன்றிலே வேலை செய்து வருகின்றார். வாமதேவனுடைய நான்கு பிள்ளைகளில் மூத்தவனான கிரிதரன் என்பவன், ஐந்து வயதிலேயே மோட்டார் விபத்தொன்றில் காரமாகிவிட்டான்.

அவனுக்கு இளையவன் லெப்ரினன்ற் ரஜீகரன், 07.02.95 இல் அச்சுவேலியில் மாவீரனாகிவிட்டான். இப்பொழுது வீட்டில் எஞ்சியிருக்கும் பிள்ளைகள் பதின்மூன்று வயதான சுஜீகரனும், எட்டு வயதான சிந்துஜாவும்தான்.

வேலாயுதம் வீட்டுக்கு முன்வீடு கந்தசாமின் வீடு. அவர் ஒரு சாதாரண தொழிலாளி, அவரும் மனைவியும் ஆறுபிள்ளைகளும் கூடவே, எழுந்து நடமாட முடியாத நோயாளியான மாமா: எதற்கும் அடுத்தவர் எதிர்நோக்கி நிற்கும் நிலை.

வேலாயுதம் குடும்பமும் மைத்துனிமாரும் கோவிலில் இருந்து காலை வீட்டுக்கு வந்தபோது அவர்களும் எழுந்து விட்டார்கள். சிறிசுகள் எல்லோரும் தேநீர் குடிக்கும் பரபரப்பு. கந்தசாமி எழுந்து வீட்டுக்கு முன்னே உள்ள குச்சொழுங்கைக்கு போய் நின்றுகொண்டிருந்தார்.

மிகுதி அடுத்த இதழில்....

www.tamilarangam.net



# தெற்கே செல்ல தமிழர்களுக்குக் கட்டுப்பாடு

## இலங்கைப் பத்திரிகைகள் கருத்து

### வீரகேசரி

இன்று தமிழ் மக்கள் மீது தொடரும் வன்முறை இருவகையானது. ஒன்று நேரடியானது. மற்றது மறைமுகமானது. மறைமுகமாகத் தொடரப்படும் பல வன்முறை நிகழ்வுகள் மக்களின் மனங்களில் வலியை ஏற்படுத்துகின்றன.

வெந்த புண்ணில் வேல் பாய்ச்சுவது போல்த் தமிழ் மக்கள் அனைவரையும் நிரந்தர அகதிகளாக்கி வருவது துரதிருஸ்டவசமானது. மக்கள் அனைவரையும் அகதிக–ளாக்குவதும் சந்தேகங்களைத் தொடரவிடுவதும் வன்முறையின் வடிவமே!.

வடக்கிலே இருந்து தென்பகுதிக்கு வரும் பயணிகள் அனைவரும் சந்தேகத்தின் பேரில் அகதிகளாக்கப்படுகின்றனர். வேப்பங்குளத்திலும் வவுனியாவிலும் இராணுவத்தின் பாஸ் பெறுவதற்காகத் தவம் கிடக்க வேண்டும்.!

விடுதலைப் புலிகளின் பாஸ் பெற்று, வவுனியாவுக்கு வந்தவர்கள் வவுனியா ரயில்வே நிலைய முகாம், வேப்பங்குள முகாம் ஆகிய இடங்களில் தடுத்து வைக்கப்பட்டு, விசாரணை, பாஸ் என அலைக்கப்படுகின்றனர்.

இந்த முகாம்களில், நோயாளர், வயோதிபர், தென்பகுதியில் தொழில் செய்வோர், சிறுவர் ஆகிய பலரும் எதுவித வசதிகளும் அற்ற நிலையில் நாட்கணக்காகத் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

அவசர அலுவல் காரணமாக கொழும்புக்கு வருபவர்களும், உத்தியோகத்தர்களும் தடுத்து வைக்கப்பட்டு அகதிகளாக்கப் படுகின்றனர். விசாரணைகள் ஆமை வேகத்தில் நடைபெறுகின்றன.

தமிழ் மக்களை மிருகத்தனமாக, சந்தேகம் என்ற பெயரில் அலைப்பது மேலும் மேலும் நிரந்தர அமைதியீனத்தையே உருவாக்கும் என்பதை நினைவு படுத்த விரும்புகின்றோம். நாடு முழுவதுமே சிறுபான்மை மக்களுக்கான அகதிமுகாம் என்ற நிலைமையை வளர விடக்கூடாது.

### தினகரன்

வடக்கே படையினரின் கட்டுப்பாட்டிலில்லாத பகுதிகளிலிருந்து நாட்டின் ஏனைய பகுதிகளுக்குச் செல்வதற்காக வவுனியா வரும் பயணிகள் அனுபவிக்கும் கஸ்ட நஸ்டங்கள் சொல்லுந்தரமன்று.

நோய் நொடிகளால் பாதிக்கப்பட்டு சிகிச்சைக்கென கொழும்பு வர முயற்சிப்பவர்கள், நேர்முகப் பரீட்சைக்கென வருபவர்கள், வெளிநாட்டிலிருக்கும் தமது உறவினர்களோடு தொலைபேசியில் பேச, அல்லது அவர்களிடமிருந்து பணம் பெறவென்று கொழும்பு வர முயற்சிப்பவர்கள் இப்படிப் பல ரகத்தினர் வவுனியா தற்காலிக முகாமில் பல நாட்களாக முடங்கிக்கிடக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

பாதுகாப்பு நடவடிக்கை என்ற போர்வையில் அப்பாவி தமிழ் மக்கள் துன்பப்படுவதை நாம் அனுமதிக்க முடியாது. வவுனியாவிலுள்ள இரு முகாம்களில் தங்கி நிற்கும் இந்தப் பயணிகள் அநேகமாக ஒரு வாரம் வரை தங்கி நிற்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. உடல், உள கஸ்டங்களைச் சந்திக்கும் மக்களுக்கு இது ஒரு இமாலயத் துயரமாகும். எத்தனையோ பரிசோதனை, பரிசீலிப்பு நடவடிக்கையின் பின்னரே அந்த முகாமைவிட்டு வெளியேற பச்சைக்கொடி காட்டப்படுகிறது. தற்காலிகமாகக் கூட முகாமைவிட்டு வெளியேற முடியாதபடி இவர்களுக்குப் பல கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளன.

வடக்கே புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்திலிருந்து வவுனியா ஊடாக வெளி மாவட்டங்களுக்குச் செல்ல வரும் மக்கள் படையினரின் விசாரணை முடியும் வரை தங்கி நிற்பதற்கு மன்னார் வீதியில் உள்ள நெற் சந்தைப்படுத்தும் சபைக் கட்டிடம் பயன்படுத்தப்படுகின்றது என்று அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

வெளிநாட்டிலுள்ள எனது அண்ணனுடன் தொலைபேசியில் பேச கொழும்பிற்கு செல்ல வந்த என்னை அகதியெனப் பட்டம் சூட்டி தற்காலிக முகாமில் தடுத்து வைத்துள்ளனர். நாங்கள் பயணிகளாகவே இருக்கின்றோம். ஆனால் எங்களை அகதிகள் போல் பராமரிக்கின்றனர். எங்களைப் போக அனுமதியுங்கள். இவ்வாறு கைக்குழந்தையுடன் வவுனியாவுக்கு வந்திருந்த அமைச்சரும் வெண்தாமரை இயக்கத்தின் அமைப்பாளரான திரு.மங்கள சமரவீரவிடம் பொங்கல் தினத்தன்று வேண்டுகோள் விடுத்தார்.

சாவகச்சேரியிலிருந்து கொழும்புக்குச் செல்ல வந்த இந்த இளம் தாய் அழுதவாறு தனது நிலையினை அமைச்சரிடம் தெரிவித்தார். மிகவும் அவதானமாக மக்களுடைய குறைகளைக் கேட்ட அமைச்சர் இந்த விடயங்களை தான் ஜனாதிபதியின் கவனத்திற்கு தெரியப்படுத்துவதாகக் குறிப்பிட்டார்.

மக்களுடைய கஸ்டங்களை நேரில் கண்டு வருமாறு ஜனாதிபதி தன்னை வவுனியாவுக்கு அனுப்பி வைத்தாரென்றும் அமைச்சர் அம்களிடம் தெரிவித்தார்.

அமைச்சரும் வெண்தாமரை இயக்கக் குழுவினரும் தாண்டிக்குளம் தடைமுகாம், நொச்சிமோட்டை காவலரண் பிரதேசம், பயணிகள் முகாமிற்கும் சென்றிருந்தனர்.

வடக்கே செல்ல தாண்டிக்குளத்தில் காத்து நின்ற மக்களுடன் அமைச்சர் உரையாடினார். சமாதானத்தினை விரும்புவதாகவும் இந்த நாட்டில் கூடிய சீக்கிரம் அமைதி வரவேண்டும் என்றும் மக்கள் அமைச்சரிடம் கூறினர். நோய் நொடியினால் தாம் பெரும் அவதிப்படுவதாகவும் மருந்துப் பொருட்களை எடுத்துச் செல்ல அனுமதி கிடைப்பதில்லையென்றும் மக்கள் அமைச்சரிடம் முறையிட்டனர்.

நொச்சிமோட்டையில் இராணுவத்தினரால் அமைக்கப்பட்ட பாலத்தினையும் அமைச்சர் பார்வையிட்டார்.

வன்னி மாவட்ட இராணுவ இணைப்பதிகாரி பிரிகேடியர் நந்தமல்லவராட்சி, பொலிஸ் அத்தியட்சகர் திரு. நிமால் லீயூக்கே ஆகியோரும் அமைச்சருடன் விஜயம் செய்திருந்தனர்.






# சேற்றில் வைத்த அகலக் கால்

சிறிலங்கா ஆயுதப்படையினருக்கும், அதற்குப் பொறுப்பாகவுள்ள பிரதி அமைச்சருக்கும் அரசினால் விருதும் கௌரவங்களும் ஒருபுறம் வழங்கப்பட்டுக் கொண்டிருக்கையில் மறுபுறம் நாட்டைப் பாதுகாக்க முடியாத அரசு பதவி விலக வேண்டும் என்ற கோரிக்கையும் எழுந்துள்ளது.

இன்று நாட்டின் 'பாதுகாப்பு நிலை' மிகவும் மோசமான கட்டத்தை அடைந்துள்ளதாக அரசைச் சாடியுள்ள பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச்செயலாளர் காமினி அத்துகோரளை, மத்திய வங்கி மீது நடத்தப்பட்ட குண்டுத்தாக்குதல் போன்ற தாக்குதல்களிலிருந்து நாட்டைப் பாதுகாக்க முடியாவிட்டால் பொது ஜன ஐக்கிய முன்னணி ஆட்சியிலிருந்து விலகிவிட வேண்டும் என வலியுறுத்தியுள்ள இதேவேளையில் இந்த குருட்டு–செவிட்டு ஊமையான அரசுடன் ஒத்துழைப்பதும் இயலக்கூடிய காரியமல்ல எனவும் சாடியுள்ளார்.

பொதுஜன ஐக்கிய முன்னணி அரசு, யாழ். நகர் மீது தாக்குதல் நடத்திய பாரிய படையெடுப்பையே தனது இராணுவ சாதனையாக பிரகடனப்படுத்தியும் பிரசாரப்படுத்தியும் வருகின்றது. ஆனால் இன்று இந்த யாழ்ப்பாண படையெடுப்பு இராணுவ ரீதியில் கூட சரியானதொரு முடிவல்ல என்ற விமர்சனமே மேலோங்கியுள்ளது. இந்த நடவடிக்கை அரசியல் ரீதியில் பெரும் தோல்வி என்பது ஏற்கனவே தெரிந்துவிட்ட விடயமாகும்.

யாழ். நகரை சிறிலங்கா இராணுவம் கைப்பற்றிய மையமானது சிறிலங்கா இராணுவத்தைப் பொறுத்து ஓர் மகத்தான சாதனையாக இருக்கலாம். ஆனால் இது உலக இராணுவ வரலாற்றில் உதாரணத்திற்கு சுட்டிக் காட்டத் தக்கதொரு விடயமல்ல. இத் தாக்குதல் முறைக்கு பல முன்னுதாரணங்கள் ஏற்கனவே உலக வரலாற்றில் உண்டு.. ஆனால் ஒரு கெரில்லா விடுதலைப் போராட்ட அமைப்பிற்கு எதிராக இவ்வாறு பெரியளவில் படை நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டியிருந்ததா என்ற வகையில் – அது முன்னுதாரணமாக இருக்கக் கூடியதாகும்.

இப்படையெடுப்பில் சிறிலங்கா இராணுவம் பெற்ற அனுகூலங்கள் என்பதைவிட பிரதிகூலங்கள் அதிகமாகவும் இதன் விளைவே 'நாட்டின் பாதுகாப்பு நிலை' சீர்கெட்டுவிட்டது–அரசு உடனடியாகப் பதவி விலகவேண்டும் என்ற கோரிக்கையை முன்வைக்கக் கூடிய சந்தர்ப்பத்தை ஐக்கிய தேசியக் கட்சிக்கு வழங்கியுள்ளது எனலாம். ஏனெனில் ஐ.தே.க. காலத்திலிருந்ததை விட இன்று இலங்கையின் எப்பகுதியிலும் சிறிலங்கா இராணுவத்திற்கோ அல்லது ஆயுதப்படையினருக்கோ சாதகமான நிலை இல்லை என்றே கூறலாம்.

முதலில் கிழக்கு மாகாணத்தை எடுத்துக் கொண்டால், இன்று அந்த மாகாணத்தின் பெரும்பகுதியே விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ளது. "நாங்கள் கிழக்கில் தேர்தல் நடத்தினோம். தற்பொழுது அரசு திருமலையில் கூட ஒரு கூட்டத்தைக் கூட நடத்த முடியாத நிலையே இன்றுள்ளது" என எதிர்க்கட்சியினர் சாடும் அளவிற்கு நிலைமை வந்துள்ளது. அத்தோடு இராணுவம் மேற்கொண்டு வந்த குடிசார் நிர்வாகமும் பெரியளவில் பாதிக்கப்பட்டுள்ளது.

அடுத்ததாக வலிகாமத்தில் இராணுவம் மேற்கொண்ட படையெடுப்பும் முற்றுப் பெற்றதொன்றாக இல்லை. வலிகாமம் பகுதியில் புலிகளும், இராணுவமும்– பெரியளவில் இல்லாதுவிடினும் அடிக்கடி மோதிக் கொண்டேயிருக்கின்றனர். இம்மோதல்களை அவதானிக்கும் போது வலிகாமத்தில் இராணுவத்தினர் சுதந்திரமாக நடமாடவில்லை என்பது மட்டுமல்ல, முகாம்களிலேயே பெருமளவில் முடங்கியிருப்பதையும் உணரக்கூடியதாகவுள்ளது. இந்த நிலையில் வலிகாமம் இராணுவத்தின் கட்டுப்பாட்டில் என்று கூடக் கூறிக்கொள்ள முடியாத நிலையே உண்டு.

அடுத்த அம்சமாக கொழும்பின் பாதுகாப்புக் குறித்து இன்று எழுந்துள்ள கேள்வி முக்கியமாகின்றது. அதாவது கொழும்பில் அண்மையில் இடம்பெறும் தாக்குதல்கள், குண்டுவெடிப்புக்கள் பெரும் சேதத்தையும், அழிவையும் விளைவிப்பனவாக உள்ளன. இக் குண்டுவெடிப்புக்களுக்கு இதுவரை எவரும் உரிமை கோரவில்லை. ஆயினும் அரசு விடுதலைப் புலிகளையே குற்றம் சாட்டுகிறது. இந்த நிலையில் கொழும்பையும் அரசினால் பாதுகாக்க முடியவில்லை என்பதே யதார்த்தமாய் உள்ளது.

இந்நிலையானது சிறிலங்கா அரசையும்–இராணுவத்தையும் என்றுமில்லாதவாறு நெருக்கடி நிலைக்குள் தள்ளியுள்ளது என்றே கூறலாம். இது இராணுவ யுக்திகளுக்கு அப்பால் போரின் மூலம் பெரும் அரசியல் இலாபம் ஒன்றை ஈட்டுவதற்கு சந்திரிகா அரசு மேற்கொண்ட நடவடிக்கையின் விளைவேயாகும். ஆனால் சந்திரிகா அரசு விட்ட தவறினை அதனால் இலகுவில் சீர்செய்து விடுதல் என்பது சாத்தியமான ஒன்றல்ல – இது சேற்றினில் அகலக்கால் வைத்தது போன்றதொரு நிலையாகும்.

www.tamilarangam.net






# நோர்வேயில் அன்னை பூபதி நினைவு நாள்

ஞாயிறு(17–3–96) மாலை நோர்வே வாழ் தமிழீழ மக்களின் மனங்களை நிறைவு செய்த ஓர் இனிய மாலைப் பொழுதாய் அமைந்திருந்தது. தாயகத்திலிருந்து புலம் பெயர்ந்து தாயகம் குறித்த ஏக்கங்களுடன் வாழ்வைத் தொடரும் தமிழீழத்தவர்களின் ஏக்கங்களைத் தீர்ப்பதற்கு இங்கே வளருகின்ற எதிர்காலச் சந்ததியினர் தமது மொழியை, பண்பாடு கலாச்சார வடிவங்களை இழந்துவிடாது இருக்கும் வகையில் அன்னை பூபதி தமிழ்க் கலைக்கூடம் ஆற்றி வருகின்ற பணியின் அறுவடையினை விழாமேடையிலே காணக்கூடியதாக இருந்தது.

விழாவிற்கு பிரதம விருந்தினராக யாழ் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த பேராசிரியர் அருட்திரு யோசப் சந்திரகாசன் அவர்களும் சிறப்பு விருந்தினராக நோர்வே உள்நாட்டு அலுவல்கள் அமைச்சு குடிபெயர்ந்தவர்களிற்கான இலாகா பொறுப்பதிகாரி பார்பொறோ அவர்களும் வருகைதந்து சிறப்பித்திருந்தனர்.




800 மேற்பட்ட தமிழ் மக்களால் அரங்கம் நிறைந்து காணப்பட்டது. கலைக்கூட மாணவிகளால் இசைக்கப்பட்ட பாடசாலைக் கீதத்துடன் விழா ஆரம்பமாகியது. சின்னத்தேனீக்கள் அதிகாலைநேரம் வண்ணச் சட்டை என்று ஒரு மழலைக் களஞ்சியமே காட்சிக்கு வந்து எல்லோர் மனங்களையும் தொட்டுச் சென்றது. இதனைத் தொடர்ந்து கலைக்கூடத்தின் அதிமேற்பிரிவில் முதலிடம் பெற்ற மாணவியின் பேச்சு இடம் பெற்றது. இதேபோன்று ஒவ்வொரு பிரிவிலும் முதலிடம் பெற்ற மாணவர்கள் கலை நிகழ்ச்சிகளின் இடையிடையே தமிழுக்கே உரிய லகர, ழகரங்களை அழகாக உச்சரித்து பேச்சாளர்களுக்குரிய பாவத்தில் பேசிச் சென்றது அவர்கள் மொழியை எவ்வளவு தெளிவாக உள்வாங்கியிருக்கிறார்கள் என்பதை வெளிப்படுத்தியது.

மழலைக் களஞ்சியத்தைத் தொடர்ந்து பாடும் வானம்பாடிகளாக வந்த பாலகர்கள் காட்டில் கல்யாணம், சின்னவராயிருந்த பாலர் நாம் என்ற நிகழ்வுகளைச் செய்து மகிழ்வாய் ஆடிப் பாடி பார்வையாளர்களையும் மகிழ்வித்துச் சென்றனர்.

இதனைத் தொடர்ந்து கலைக்கூட மிருதங்க மாணவர்களின் தனி ஆவர்த்தனக் கச்சேரி இடம்பெற்றது. நான்கு ஆண்டுகளின் முன் ஒஸ்லோவில் ஊன்றப்பட்ட அன்னை பூபதி என்ற ஆலம் விதை இன்று கிளை பரப்பி பெருமரமாய் எழுந்து நிற்பதை மாணவர்களின் மிருதங்கக் கச்சேரி தெளிவாக எடுத்துக் காட்டியது. நான்கு ஆண்டுகளில் இவ்வாறு இசைக்கின்றார்களா என எண்ண வைப்பது எதிர் காலத்தில் இந்தக் கலைக்கூடம் இன்னும் விழுதெறிந்து பெருவிருட்சமாய் நிலைபெறும் என்பதை உறுதிப்படுத்துவதாய் அமைந்திருந்தது.

இசையைத் தொடர்ந்து நடனம், கடினமான உழைப்பில் உருவாக்கப்பட்ட நேர்த்தியான காட்சி அமைப்புக்களோடு தேனூறும் தேவாரம், மணிவாசகரின் திருவாசகம் என்பன கலக்கப்பட்ட மாணவிகளின் தெளிவான அபிநயங்களுடன் பண்பட்ட இசைக் கலைஞர்களின் பின்னணிக்குரல் இசையுடன் ஒரு நிறைவான நடனம் எல்லோரையும் 'துயிலெழ' வைத்தது. தொடர்ந்து சிறுவர்களின் "நாலும் தெரிந்த நரியார்" என்ற நாடகம், "சுளகு நடனம்", கலாநிதி சி. மௌனகுரு அவர்களின் எழுத்துருவான "சரிபாதி" நிருத்திய நாடகமும் இடம் பெற்றன. நிகழ்ச்சிகள் ஒவ்வொன்றிலும் மாணவர்களின் திறனையும் அனுபவ முதிர்வினையும் காணக்கூடியதாய் இருந்தது.

கலை நிகழ்வுகளின் இடையே ஆண்டுவிழாவையொட்டி கலைக்கூட மாணவர்களிடையே நடைபெற்ற பேச்சுப் போட்டி, ஓவியப் போட்டி, சமயப் போட்டி என்று பல்துறை சார்ந்த போட்டிகளில் பரிசு பெற்ற மாணவர்களுக்கு பரிசில்கள் வழங்கப்பட்டன. அப்போது கலைக்கூட நிர்வாகப் பொறுப்பாளர் திரு.சிவதாஸ் விருந்தினர்களை வரவேற்று உரைநிகழ்த்தினார். அத்தோடு கலைக்கூடத்தின் வளர்ச்சியின் பின்புலத்தில் நின்றுழைக்கும் பலரது சேவைகளையும் பாராட்டியதோடு, இவர்களை விட நல்ல திறமைகளோடு யாரேனும் இருந்தால் அவர்களை இனங்கண்டு கலைக்கூடத்துடன் தொடர்பு படுத்தி அதன் வளர்ச்சிக்கு உதவ எல்லோரும் முன்வர வேண்டுமென்று கேட்டுக்கொண்டார்.

## இந்திய அரசின் ........

5 ஆம் பக்கத் தொடர்ச்சி ....

ஆனால், இந்திய தேசம் பிளவுபடாமல் இருப்பதுதான் தமது சுரண்டலுக்கு உகந்தது என உணர்ந்து செயற்படும் ஏகாதிபத்தியங்கள், நினைத்த கணக்கில் இந்தியாவில் இருக்கும் தேசிய இனங்களின் சுயநிர்ணய உரிமைகளை அங்கீகரிக்கின்றோம் என அறிக்கைவிடும் போது இந்திய சாம்பிராட்சியம் இருந்த இடம் தெரியாமல் போய்விடும். இதுதான் யதார்த்தம் என அரசியல் விற்பனர்கள் கூறுகிறார்கள்.

எனவே தமிழீழம் விடுதலை பெற்றால் இந்தியாவின் ஒருமைப்பாட்டுக்கு குந்தகம் ஏற்பட்டுவிடும் என்று இந்திய அரசும் அதன் அரசியல் ஆலோசகர்கள் கூறுவதெல்லாம் அறிவுபூர்வமானவையல்ல.

அரசியல்–இராணுவ விடயங்களில் பலம்மிக்கதாக உள்ள நாடுகளின் வரிசையில் இந்தியா இன்று இருப்பதாக கூறப்படுவது உண்மையாகில், இந்திய நாட்டின் ஒரு மாநிலமாக இருக்கும் தமிழகத்தின் கடற்பரப்பில் தினமும் சிங்கள கடற்படையால் சுட்டுக் கொல்லப்படும் தமிழக மீனவருக்கு பாதுகாப்பளிக்க வேண்டும். பாக்கிஸ்தானுக்குள் சென்று 'பங்களாதேசத்தை' உருவாக்கியது போன்று, 'தீபெத்' பகுதிக்குள் புகுந்து சீனப்படைகளை விரட்டிவிட்டு 'தீபெத்' நாட்டை உருவாக்கி தன் நாட்டில் தஞ்சம் புகுந்துள்ள பல இலட்சம் தீபெத் மக்களையும், அவர்களின் தலைவர் தாய்லாலாவையும் அங்கு அனுப்பிவைக்க வேண்டும்.

**இந்திய தேசம் பிளவுபடாமல் இருப்பதுதான் தமது சுரண்டலுக்கு உகந்தது என உணர்ந்து செயற்படும் ஏகாதிபத்தியங்கள், நினைத்த கணக்கில் இந்தியாவில் இருக்கும் தேசிய இனங்களின் சுயநிர்ணய உரிமைகளை அங்கிகரிக்கின்றோம் என அறிக்கைவிடும் போது இந்திய சாம்பிராட்சியம் இருந்த இடம் தெரியாமல் போய்விடும். இதுதான் யதார்த்தம் என அரசியல் விற்பனர்கள் கூறுகிறார்கள்.**

பகிரங்கமாகவே காஸ்மீர்ப் பிரிவினைக்கு ஆதரவு தெரிவிக்கும் பாக்கிஸ்தான் அரசுக்கும் அதன் படைகளுக்கும் தன் பலத்தை காட்டி அவர்களை அடக்க வேண்டும்.

இவற்றில் எதனையும் செய்ய முடியாது. இப்பிரச்சினைகளின் தீர்வுக்காக வல்லரசுகளிடம் கையேந்தி நிற்கும் இந்திய அரசு, தென் கிழக்காசியாவின் சிறிய தேசமாகிய தமிழீழத்தின் விடுதலைப் போராட்டத்தை அழிப்பதற்கு முயற்சிப்பது எந்த வகையில் நியாயமானது?

சிங்கள இனத்தின் சகல தரப்பினரும் கூடி ஆராய்ந்து தமக்கு திருப்தியானதை இலங்கைத் தீவின் இனப்பிரச்சினைக்கான தீர்வாக இந்திய அரசின் அனுமதியுடன் தமிழீழ மக்கள் மீது திணிக்க முற்பட்டால் அவர்கள் ஒருபோதும் ஏற்கமாட்டார்கள் என்பதையும் இந்திய அரசு தன் கவனத்தில் கொள்ள வேண்டியதுடன், இந்தியாவின் நலனுக்கு எதிராக செயற்பட்ட சிங்களவர்கள்–இன்று தமது நலனுக்காக, இந்தியாவின் நண்பர்களாக வேடம் போடுகிறார்கள். தமது விடயம் முடிந்த பின் இந்தியாவின் நலனுக்கு எதிராக மாறமாட்டார்கள் என்பதற்கு எந்த உத்தரவாதமும் இல்லை.

எனவே இந்திய அரசும் அதன் படைகளும் தமிழீழ விடுதலைப் போராட்டத்துக்கு எதிராக தாம் செய்பவைகள் நியாயமானவைகளா என சிந்தித்து தமது தற்போதைய நிலைப்பாட்டில் மாற்றத்தை ஏற்படுத்தவேண்டும்.

அம்மாற்றம் மற்றைய நாடுகளில் நடைபெறும் தேசிய இனங்களின் விடுதலைப் போருக்கு ஆதரவாக இந்தியா கொடுக்கும் ஆதரவுக் குரலாக அமைய வேண்டும்.

தமிழ் மாணவர் அமைப்பு
யேர்மனிக்கிளை நடாத்தும்

மாவீரர்
வெற்றிக்கிண்ண விளையாட்டுப்போட்டி
1996

அன்பார்ந்த யேர்மனிவாழ் தமிழீழ மக்களே !

தமிழ் தேசிய தன்னுரிமையை நிலைநிறுத்தும் போராட்டத்தில் இரத்தம் சிந்திப் பல ஆயிரக்கணக்கான போராளிகளின் தற்கொடைகளாலும், எமது மாவீரர்களின் அளப்பரிய சாதனைகளாலும் தாங்கொணாத் துன்பங்களை அநுபவித்தும் உறுதி தளராத மக்களின் உள்ளத்துடிப்பாலும் தமிழீழ விடுதலைப் போராட்டம் ஓர் உயர் பரிணாம வளர்ச்சியைக் குறித்து நிற்கின்றது. இவ் அதியுன்னதமான தியாகங்களின் மூலம், தமிழீழம் என்ற தாய் நிலத்தை இந்திய, சிங்கள ஆக்கிரமிப்பாளர்களிடமிருந்து விடுவிக்க உயிர்த்தியாகம் செய்த மாவீரர்களை நினைவுகூருமுகமாக தமிழ் மாணவர் அமைப்பினால் மாவீரர் விளையாட்டுப் போட்டிகள் நடாத்தப்பட்டு வருகின்றது.

தொடர்புகட்கு : Tamilische Studenten Verein e.V.
Postfach: 11 18
71278 Hemmingen
0711/7655509

தமிழர் புனர்வாழ்வுக் கழகம்
யேர்மனிக்கிளை நடாத்தும்
புனர்வாழ்வுக் கலைத்தென்றல்

நிகழ்ச்சி நிரல்

*வாடி நிற்கும் பயிருக்கு*
*வானம் பொழியும் மழை போல*
*வாழ்வுக்கேங்கும் எம் இனத்தோருக்கு*
*வாரி வழங்கி மகிழ்விப்போம்.*

- நாட்டிய நாடகம்
- நகைச்சுவை
- தமிழாலய மாணவர்களின் நிகழ்ச்சி
- விடுதலைக்கீதங்கள் தமிழீழம் இசைக்குழு

காலம் : 13 - 04 - 1996
சனிக்கிழமை, 16.30 மணி
இடம் : GERMEINDE HAUS
Schloss Str - 78
Wanosbekmarkt
22041 Hamburg

மற்றும் பல சிறந்த கலைஞர்கள் யேர்மனியின்
பல பாகங்களிலும் இருந்து வந்து நிகழ்ச்சியை சிறப்பிப்பார்கள்

## சேர் பொன் அருணாசலத்தை....

8ம் பக்கத் தொடர்ச்சி...

இனக்கலவரத்தின்போதே கட்சி நடவடிக்கைகளில் தீவிர பங்கு கொண்டிருந்தமைக்காக வீட்டுக் காவலில் வைக்கப்பட்டிருந்தவருக்குச் சட்டம் புரியுமா? மாவட்ட அபிவிருத்திச் சபைகள் மசோதாவில் பதினெட்டு அதிகாரங்கள் உண்டு. சட்டம் படித்த, சட்டம் புரிந்த சட்ட மேதைகளாகிய நாம் கூறுகிறோம் என்று அடித்துக் கூறியிருக்க வில்லையா? பின்னர் 1983இல் எந்த அதிகாரமும் கிடையாது என்றுதானே யாழ்ப்பாண அபிவிருத்திச் சபையின் தலைவரே தமது பதவியைத் துறந்திருந்தார். ஒருவர் பின் ஒருவராக ஏனையோரும் தாம் ஏமாற்றப்பட்டு விட்டதாகப் பிரலாபித்து இருக்கவில்லையா?

ஏன் மேற்படி வாதப்பிரதி வாதங்களின்போது ஜே. ஆர் ஜெயவர்த்தனாவே தம்மால் தெரிவு செய்து நியமிக்கப்பட்டிருந்த தெரிவுக் குழுவின் பரிந்துரைகளைத் தாம் நிராகரித்து விட்டதாகவும் அதன் சிறுபான்மை உறுப்பினரான நீலன் திருச்செல்வம் சமர்ப்பித்திருந்த மறுப்பையே தாம் ஏற்றுக் கொண்டு மேற்படி மாவட்ட அபிவிருத்திச் சபைகளுக்கான மசோதாவைத் தயாரித்து இருந்ததாகவும் செப்பியதில்லையா? ஜே.ஆர். ஜெயவர்த்தனாவின் மேற்படி கூற்றைத் கூட்டணியோ அன்றேல் நீலன் திருச்செல்வமோ அந்தநேரம் மறுத்திருக்காமையால் அக் கூற்று உண்மையென்றே கொள்ளப்பட வேண்டும்.

ஆகவே எந்தவொரு அதிகாரமும் இல்லாத மாவட்ட அபிவிருத்தி சபைகளின் பிதா நீலன் திருச்செல்வமும் பழைய வரலாற்றில் இருந்து, அன்றைய பீரிசின் குத்துக் காரணங்களால் பாடம் படித்திராவிடினும் கூட மாவட்ட அபிவிருத்திச் சபைகள் மசோதா விடயத்தில் தனது சொந்த அனுபவத்தால் பெற்ற படிப்பினை மூலமேனும் நீலன் தற்போதைய போக்கை மாற்றிக் கொள்ளலாம்.

பொன்னம்பலம் அருணாசலம், கலாநிதி வில்சன் ஆகியவர்கள் போல் நீலனும் பிழை விட்டாலும் திருந்திக் கொள்ளலாம் தானே? இன்றைய பேராசிரியர் பீரிசால் ஏமாற்றப்படாமலும் இருக்கலாம்.

## பார்க்கும் இடங்களெல்லாம்.

12ம் பக்கத் தொடர்ச்சி

ரக விமானங்கள் இருப்பதாக இருப்பதாக சிறீலங்கா விமானப்படை அறிவித்துள்ளது தெரிந்ததே.

ஒரு காலத்தில் தென் இலங்கை சிங்கள–பௌத்த தீவிரவாதிகள் வட–கிழக்கில் தமிழ் மக்களுக்கு எதிரான போரை வேடிக்கையோடு பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

அந்தக் காலம் இப்போது மலையேறிவிட்டது. குண்டு என்றால் என்ன? அதனால் ஏற்படுகின்ற உயிர் இழப்பு, உடமை இழப்பு என்ன? ஆர்பிஜி என்றால் என்ன? ஏ.கே என்றால் என்ன? இவற்றை இப்போதுதான் அனுபவத்தில் கொஞ்சமாவது தெரிந்து வைத்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு தெரியாதது விமானக்குண்டு வீச்சும், எறிகணை வீச்சும் தான்.

சரி இப்போதாவது பட்டதுபோதும் இனிப்பட முடியாது. 'போர்மூலம் சமாதானம்' என்பது சாத்தியமில்லை, இனப்பிரச்சி னைக்கு அரசியல் தீர்வுதான் தக்க மருந்து என்று சிறிலங்காவின் ஆட்சிக் கட்டிலில் கொலுவீற்றிருப்பவர்கள் எண்ணுகிறார்களா என்றால் இல்லை என்பதே பதிலாகும்.

"பயங்கரவாதத்தை இராணுவ பலத்தால் வெற்றி கொள்ளலாம். ஆனால் இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வுதான் தகுந்த வழி" என்று சனாதிபதி சந்திரிகா அண்மையில் பாராளுமன்றத்தில் உரையாற்றும்போது குறிப்பிட்டிருந்தார்.

அதாவது சந்திரிகாவும், ஜே.ஆர்., பிரேமதாசா போல் தமிழ் மக்களின் தேசிய விடுதலைப் போராட்டத்தை 'பயங்கரவாதம்' என முத்திரை குத்தி அதனை இழிவுபடுத்துகிறார்.

ஜே.ஆர், பிரேமதாசா இவர்களைப் பின்பற்றி சந்திரிகா தமிழ் மக்களது தாயகக் கோட்பாட்டை மறுக்கிறார்.

ஜே.ஆர்., பிரேமதாசா இவர்களைப் போலவே போரின் மத்தியிலும் சிங்களக் குடியேற்றம் தங்கு தடையின்றி நடைபெற சந்திரிகா அரச இயந்திரத்தை முடுக்கி வருகிறார்.

ஜே.ஆர்., பிரேமதாசா போலவே சந்திரிகா தமிழ்த் துரோகிகளை தமிழினத்தின் பிரதிநிதிகள் என்று உலகுக்கு காட்ட முற்படுகிறார்.

ஜே.ஆர்., பிரேமதாசா, சந்திரிகா இந்த மூவர் மட்டுமல்ல சிங்க–பௌத்த இனவாதிகள் எல்லோருமே ஒரே மாதிரிச் சிந்திக்கிறார்கள். செயல்படுகிறார்கள்.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க அரசியல் தீர்வுத் திட்டத்தைப்பற்றி அபிப்பிராயம் தெரிவிக்கும் போது "அரசியல் அதிகாரப் பரவலாக்கலை வரவேற்கிறேன். ஆனால் ஒற்றையாட்சி அரசியல் யாப்புமுறை மாற்றப்படுவதை எனது கட்சி எதிர்க்கும்" என்று சொல்லியிருக்கிறார்.

அதாவது குண்டுச் சட்டிக்குள் குதிரை ஓட்டிப் பழக்கப்பட்டவர், இப்போதும் அதையே செய்ய விரும்புகிறார். அதாவது அரசியல் தீர்வுக்கு ரணில் விக்கிரமசிங்காவும், ஐ.தே.கட்சியும் அன்று போலவே இன்றும் தயாராயில்லை என்பது தெரிகிறது.

சனநாயக ஐக்கிய தேசிய முன்னணியின் தலைவி சிறீமானி அத்துலத்முதலியும் சிறிலங்காவின் ஒற்றையாட்சி அரசியல் அமைப்பு இப்போது இருப்பது போலவே இருக்க வேண்டும். அதைமாற்ற எடுக்கும் எந்த முயற்சியையும் தனது கட்சி எதிர்க்கும் என்று பகிரங்கமாகக் கூறி வருகிறார்.

மொத்தத்தில் சிங்கள–பௌத்த மேலாண்மையை தமிழ் மக்கள் மீது திணித்து அரசியல் ஆதிக்கம் செலுத்தவே சிங்கள அரசி யல்வாதிகள் கங்கணம் கட்டி நிற்கிறார்கள்.

எங்களுக்கு இரண்டு கண்ணும் போனாலும் பரவாயில்லை, தமிழர்களுக்கு ஒரு கண்ணாவது போகவேண்டும் என்று சிங்கள–பௌத்த அரசியல்வாதிகள் பிரார்த்தனை செய்கிறார்கள்.

விடுதலைப் புலிகள் தென் இலங்கையை தாக்குவார்கள் என்ற பயத்தில் ஒவ்வொரு நாளும் செத்துப் பிழைக்க விரும்புகிறார்களே தவிர தாங்களும் வாழ்ந்து தமிழனையும் வாழ விட சிங்கள–பௌத்த இனவாத அரசியல்வாதிகள் தயாராக இல்லை.

நாடு எக்கேடு கெட்டு சுடுகாடாகப் போனாலும் தமிழினத்தைப் பூண்டோடு அழிக்கவே சிங்கள ஆட்சியாளர்கள் மெத்தப் பாடுபடுகிறார்கள்.

அதுவே அவர்களது குறிக்கோளாக இருக்கிறது. இந்த வெறி சிங்களவரிடையே அரசியல் மதம் கடந்த நிலையில் ஆழமாக வேரூன்றிப் போயுள்ளது.

இந்த இனவொழிப்புக்கு விடுதலைப் புலிகள் தடையாக இருப்பதை இந்த சிங்கள–பௌத்த இனவெறியர்களால் ஜீரணிக்க முடியாமல் இருக்கிறது.

எனவே விடுதலைப் புலிகளை அழித் தொழிக்க தன்னை நவீன துட்டகைமுனுவாக கற்பனை பண்ணும் துணைப் பாதுகாப்பு அமைச்சர் அனுருத்த ரத்வத்த புதிய காலக்கெடு வைத்திருக்கிறார்.

இப்படி விடுதலைப் புலிகளுக்குக் காலக்கெடு கொடுத்திருப்பது இது முதற் தடவையல்ல. இதற்கு முன்னரும் ஜே.ஆர்., ரஞ்சன் விஜயரத்தின, அத்துலத்முதலி, பிரேமதாச இப்படி விடுதலைப் புலிகளை அழித் தொழித்து விடுவதாகச் சொல்லி காலக்கெடு கொடுத்தவர்கள் ஏராளமானோர்.

ஆனால் அவர்களால் விடுதலைப் புலிகளை அழிக்க முடிந்ததா? இல்லை அவர்கள் அழிந்ததே வரலாறு.

www.tamilarangam.net

# அழுகையை நிறுத்தி எழுக!



உங்களிலொருவனாக
நானும்தான்
ஊரூராகத் திரிகின்றேன்.
என்னுடன் மனைவியும்,
பிள்ளைகளும்
எங்கெங்கோவெலாம்
அலைகின்றனர்
இல்லம் துறந்து,
இந்திர வாழ்விழந்து,
நிவாரண வரிசையிலும்
நிற்கின்றனர்.
பாலின்றித் தேநீர் பருகாத
என் சின்ன மகன்,
வெறும் தேயிலைச்
சாயத்துக்கே
தன்னைப் பழக்கப்
படுத்திக்கொண்டான்.
நான் பாணைத் தொடாத
பரம்பரை.
இப்போ என் மூத்த மகன்
பேக்கரி வாசலில்
தானுமொருவனாகத்
தவமிருக்கின்றான்.
ஆயினும் நான் அழவில்லை.
குடிமுழுகிவிட்டதென்று
இடியவில்லை.
அவலத்தைக் காலின் சருகாக
மிதித்து,
நாளை எனக்கேயென்ற
நம்பிக்கையில்
வைகறைக்காகக்
காத்திருக்கின்றேன்.
இருந்த சுகம் இல்லாது
போனதெண்ணி
எவனழுவானோ!
அவனுக்கென் அகராதியில்
வாழத்தெரியாதவனென்று
குறித்துள்ளேன்.
குளவிக் கூட்டைக்
கலைத்துவிட்டால்
அடுத்தகணம் இன்னோர்
மரத்தில்அவை
வீடுகட்டி விருந்து வைக்கும்.
மரங்கள் இலையுதிர்ப்பது
பட்டுப்போகவல்ல
புதிய தளிர்களைப்
பிரசவிப்பதற்காகவே
பாம்பு செட்டையுரிப்பது
செத்துப்போகவல்ல
புதிய சட்டையணிவதற்காகவே.
இயற்கையிடமிருந்து
மனிதன் பாடம் கற்கவேண்டும்.
இன்று எங்களுக்கு வந்தது
அவலமேயன்றி...... அழிவல்ல.
வீடிழந்து போனதற்கு
விம்மிக் கொண்டிருந்தால்
நாடிழந்து போனதற்கு
நஞ்சையல்லவா
கடித்திருக்கவேண்டும்
விரல்விட்டெண்ணக்கூடிய
ஓரிருவரைத்தவிர
எல்லோரும் ஊர்விட்டு
வெளியேறினோம்.
எந்தப் பெரிய வெற்றி.
யாருமற்ற சூனியத்துள்ளே
'ஏவற்பேய்கள்"
கூவிக்கொண்டு வந்தன.
ஊர்புகுந்த பிசாசுகள்
நரமாமிசம் தேடிக்
களைத்ததும்,
கூரை பிரித்துக் குதித்தன
பில்லி ஏவிய 'சூனியக்காரி"
பிணவாடைக்கு
மூக்கை நீட்டினாள்.
சுடலைச் சாம்பலை
எம் நிலமெங்கும் தூவினாள்.
அரவமற்றுப்போன
எம்மூரெல்லாம்
அர்த்தராத்திரிக் கூத்துக்களாம்.
'படிமாத்தான்"
கொடியேற்றிவிட்டு
தடைவெட்டி விட்டதாகச்
சொல்லிப்போனான்.
நாங்கள்
செம்மணி கடந்து வந்து
ஜெயித்தோம்.
'அம்மணி" ஆடிப்போனாள்.
பட்டதுயரம் பஞ்சாகிப் பறக்க
புதிதான வாழ்வுக்கு
நாற்றங்கால் போட்டோம்.
அவலத்துள்ளேயும்
அழகு பூத்தது.
சிரமமதிகம்தான்
என்றாலும் வருங்காலம்
நம்மை வாழ்த்தும்.
இப்படியுமொரு இனம்
ஒட்டு மொத்தமாக
விலைகொடுத்ததா? என்று,
உலகமெம்மை
வியந்து பேசும்.
இனி.....
ஊருக்குத் திரும்பும்
வேலையில் இறங்குவோம்.
படை திரட்ட வேண்டும்
பாசறையமைத்து
பயிற்சி பெற வேண்டும்.
அஸ்திரங்கள் எய்யும்
அவதானமும்
கவசமணியும்
கச்சிதமும் வேண்டும்.
தேர்ச்சில்லுகளுக்கு
எண்ணைவிட்டுச்
செப்பனிட வேண்டும்.
தலைவனுக்குத் தலைவணங்கி
உரிமைக்கு உயிர்கொடுக்கும்
உணர்வும் வேண்டும்
அழுகையை நிறுத்தி
அணிவகுப்போம்.
விழுதுகளாகிப் பலம்
கொடுப்போம்.

புதுவை. இரத்தினதுரை

T.C.C
Via Mariano Stabile - 49
90139 Palemo, Italy
T/F: 091- 611 3179

W.T.C.C
Lang STR - 206
8005 Zurich, Swiss
T/F: 01- 273- 29-38

T.C.G
Post Fach - 340251
51624 Gummersbach - 34
Germany

U.T.O, 211 Katherine Rd
London E6 1Bu,U.K
Tel: 0181 503 4294
Fax:0181 470 8593

T.C.C
P.O.Box 1699 Vika
0110 Oslo - 1 , Norway
Tel: 022- 350 980 Fax: 381010

W.T.C.C
170 - 10 Cadarcroft Road
Suite 1-L.Jamaica,
New York 11432 U.S.A.
T/ F: 718- 657- 9463

L.T.T.E
P.O.Box 47, 7400 Herning
Denmark
T/F: 97- 155299

T.C.C
Grt. Hertoginnein - 106
2517 EL Den Haag, Nederland
Tel:070 3461963 Fax: 070 362 5172

T.C.C
341 Rue des Pyrenees
75020 Paris, France
Tel: 435 81142, F: 435 81191

T.C.C
Vissingebacken 11 1TR
16364 Spanga, Sweden

T.C.C
P.O.Box 375, Preston
Victoria 3072, Australia.
T: 03-470 6441 F: 560 8224

Disigned by Euro Graphics & Printing Ltd - 0181 801 3822

Printed by Observer Group News papers

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்